# சுவைத்திரள்

மலர் - 19 இதழ் - 36 வைகாசி, ஆனி - 2011

PUBLIC LIBRARY JAFFNA
22 JUN 2011






இந்த இதழில் இருந்து கணபதிச்சித்தரின் நகைச்சுவைகள் ஆரம்பமாகின்றது!

விசேட பிரதி
ரூபா. 200/=

கணபதிச் சித்தர்

சுவைத்திரள் ஓர் உலக நகைச்சுவை ஏடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் சோதிட நிலையம்



ஆரம்பம்: 19. 10. 1975

**வவுனியா நகரில் சிறந்த சோதிட நிலையமாக விளங்கிக் கொண்டு இருக்கும் எமது நிலையம் அருள்மொழி அரசு கிருபானந்த வாரியின் ஆசி பெற்றது.**

*அன்பர்கள், ஆதரவாளர்கள் கீழே குறிக்கப்பட்ட தினங்களில் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.*

## நினைத்த காரியம், நூல் கட்டுதல், பார்வை பார்த்தல்

வெள்ளி, செவ்வாய், ஞாயிறு காலை 9.00மணிமுதல் 1.00 மணி வரை பார்க்கப்படும். பார்க்க வருபவர்கள் ஐந்து வெற்றிலைக்கு குறையாமல் கொண்டு வரவும். கற்பூரம் ஊதுபத்தி, பூக்கள் கொண்டு வரலாம். விசேட கண்ணாடிகள் மூலம் கைரேகை நாடி சோதிடம் பார்க்கப்படும். பெயரை முன்கூட்டியே பதிவு செய்யவும் உள்நாடு வெளிநாடு குறிப்புகள் எழுதிக் கொடுக்கப்படும். முழுப்பணமும் கட்டவேண்டும். திங்கள் புதன் வியாழன் ஆகிய நாட்களில் காலை 9.00 மணிமுதல் 1.00மணி வரை திருமண பொருத்த குறிப்புகள் பார்க்கப்படும். பௌர்ணமி அமாவாசை, சனிக்கிழமை ஆலய விழாக்கள் நடைபெறும் காலங்களில் வெளிவேலைகள் எதுவும் பார்க்கப்படமாட்டாது. சாதகம் எழுத வருபவர்களுக்கு திருமணப் பொருத்தம் பார்க்கும் ஒரு சாதகமும் மேலதிகமாக ஒரு சாதகமும் கொடுக்கப்படும். நோயாளிகளுக்கு விசேட பிரார்த்தனை உண்டு. பழைய சாதகங்கள் புதுப்பித்துக் கொடுக்கப்படும் கிருஸ்ண மூர்த்தி பத்ததி முறையில் சாதகங்களுக்கு விசேட முறையில் பலன் சொல்லப்படும். மக்களின் நலன் கருதி எமது காரியாலயங்களில் மேலதிக உதவியாளர்களும் உள்ளனர். பிறந்தநேர குழப்பமுடைய ஆண், பெண் இருபாலார்களுக்கும் கணனிகள் மூலம் தயாரிக்கப்பட்ட அழகிய பெயர்கள் உள்ளன. ஆத்மீக தியானம் யோகாசனப் பயிற்சிகள் பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். மாணவர்களுக்கு இலவச யோகாசனப்பயிற்சி வழங்கப்படும்.

**எமது நிலையத்தால் ஒவ்வொரு நவராத்திரி விஜயதசமி அன்று ஏடு தொடக்கப்படும். முன்கூட்டியே பதியவும்**

**மக்களின் சேவையே மகேசன் சேவை**



*பிரதம குரு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய*
*கணபதி சித்தர்*
*கந்தசாமி குருக்கள்*
*சோதிட பிரதம குரு கலாநிதி தேசகீர்த்தி*
*அகில இலங்கை சமாதான நீதிவான்*
*வவுனியா.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக்குரல்

# கலை மாமனிதருக்கு மலர் அஞ்சலி



சிந்தனையுடன் சிரிப்பை வளர்த்த சிரித்திரன் சி.சிவஞானசுந்தரம் அவர்களின் பிறந்த தினம் (03.09.2010) அன்று நினைவு கூறப்பட்டதையொட்டி நினைவு கூருகிறோம்)

உடலின் கதை சொல்வதல்லக் கதை உள்ளத்தின் கதை சொல்வதே உயர்ந்த கலை, என கடந்த 50 ஆண்டு காலமாக கார்ட்டூனிஸ்டாகவும் வாழ்ந்து வாசகர் நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்ட சிந்தனையாளர் சிரித்திரன் சுந்தர்.

தமிழ்த் தேசிய இனத்தின் கலை பாரம்பரியம், கலாசாரம், ஒற்றுமை என்பன தளர்ந்துப்போன நிலையில், தமிழர் ஒவ்வொரு திசையாகச் சென்றால் வாழ்வில்லை என்பதைத் தனது கார்ட்டூனின் வலிமையால கீறிக் காட்டி தமிழ் மக்களை சிந்திக்கச் செய்த பெருமகன் இவர்.

ஆரம்பகாலத் தனது படிப்பினை கட்டிடக் கலைஞராகத் தொடங்கிய இவர் பின்பு சமூக, கலை, இலக்கிய ஈடுபாட்டினால் கார்ட்டூனிஸ்டாக மாறினார்.

இந்தியாவின் பிரபல்யமான ஆங்கில நாளேடுகளான "பிளிட்ஸ்", "சொங்கர்" ஆகிய ஏடுகளில் கார்ட்டூனிஸ்டாக விளங்கிய இந்த தமிழ் மகன், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தால் கவரப்பட்டு நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் போன்றவர்களின் ஓவியங்களையும் வரைந்து போஸ் மறைந்த போது அஞ்சலிக்காக மக்கள் வெள்ளம் கொண்டு சென்ற நேதாஜியின் படம் சிரித்திரன் சுந்தரால் வரையப்பட்டது.

சிரித்திரன் சுந்தர் ஆங்கிலத்தில் எவ்வாறு புலமைமிக்கவரோ அவ்வாறு தமிழ் மொழியைக் கார்ட்டூனில் கையாளுவதில் மிகுந்த தேர்ச்சிமிக்கவர். ஈழத்தமிழன், குமுதம், கல்கண்டு, கல்கி ஆனந்தவிகடன் போன்ற தமிழகத்தில் இருந்து வெளிவரும் ஏடுகளைத் தடை செய்வதால் ஈழத்தில் சஞ்சிகை விற்பனை வளர்ச்சியடையும் என்ற கோட்பாட்டுக்கு எதிரானவர் சிரித்திரன் சுந்தர்.

திறமை இருந்தால் எச்சஞ்சிகையையும் மக்கள் விரும்பியே படிப்பர். தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளைத் தடை செய்வதால் இங்கு சஞ்சிகைத் துறை விருத்தியடையாது எனக் கூறிய அவர் சிரித்திரன் என்ற தனது சிரிப்பு ஏட்டினை ஒவ்வொரு தமிழ் மகனும் விரும்பி வாசிக்கக் கூடியதாக நடத்திக் காட்டினார்.

ஈழத்தின் தமிழ்ச் சஞ்சிகை வரலாற்றில் பெரிய சஞ்சிகை இதுவே. 35 வருடங்கள் தொடர்ந்து வெளிவந்த இந்தச் சஞ்சிகை முன்னூற்று இருபது இதழ்களை வெளியிட்டுச் சாதனை படைத்தது. தமிழ் நாட்டின் பிரபல்யமான பத்திரிகையாளர் மணியன், சிரித்திரன் அலுவலகத்துக்கு விஜயம் செய்து தனது இதழான இதயம் பேசுகிறது சஞ்சிகையில், சிரித்திரன் சஞ்சிகையில் வெளி வந்த பல்வேறு விடயங்களை விதந்து எழுதினார்.

இவரால் மகுடி என்ற பெயரில் வழங்கப்பட்ட கேள்வி, பதில்கள் சிரித்திரன் என்ற சிரிப்பு சஞ்சிகையில் 35 வருட காலம் வெளிவந்தன. மகுடி என்ற தலைப்பின் கீழ் அவர் கொடுத்த சில கேள்வி பதில்கள் என்றும் மனிதனைச் சிந்திக்கத் தூண்டுபவை. ஆங்கிலத்தில் அங்கதமாகச் சிந்தித்த ஒஸ்கார் வைல்ட் (Oscar Wild) போன்ற எழுத்தாளர்களின் வல்லமைக்கு அது ஈடு இணையானது.

1960ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து சிரித்திரன் சுந்தரால் தினகரனிலும் வீரகேசரியிலும் கீறி வெளிவந்த சவாரித்தம்பர் என்ற கார்ட்டூன் கலாசாரத்திலும் அரசியலிலும் ஏற்படுத்திய தாக்கங்கள் ஏராளமானவை. அந்த கார்ட்டூன்களே இன்று தேசிய வாதத்திற்கு வித்தாக அமைந்தன. சின்னத்தம்பி, மைனர்மச்சான், ஸ்ரீமான் செல்லக்கிளி, மிஸ்டர் & மிஸிஸ் டாமோதரன் ஆகிய பகுதிகள் தமிழ் கார்ட்டூன் உலகை என்றுமே மறக்க முடியாத கருத்துக்களால் நிரம்பி வழிபவை. என்றுமே அழியாத கலைஞன் சி.சிவஞானசுந்தரத்துக்கு சுவைத்திரள் தனது அஞ்சலியை மீண்டும் செலுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகை ஆரம் சுவைத்திரளுக்கு புகழ் ஆரம் சூட்டியது வீரகேசரி.

## சுவைத்திரள்

## (நகைச்சுவை மாத இதழ்)

நகைச்சுவையாளர் சுவைத்திரள் சஞ்சிகைக்குப் புகழாரம் சூட்டியது வீரகேசரி. சுவைத்திரள் சஞ்சிகை பற்றி வீரகேசரி பத்திரிகையாளர் திரு. வி.எஸ். நவமணி அவர்கள் எழுதிய விமர்சனத்தைத் தருகின்றோம்.

ஐப்பசி மாத இதழ் தீபாவளி மலராக வெளிவந்திருக்கிறது. பெரிய அளவு விசேட பிரதி என்று போட்டுத் தான் விலை குறித்திருக்கின்றாய்கள். நகைச்சுவைக்காகவே தனியான ஒரு பத்திரிகைவெளியிடுவது பாராட்டத் தக்கது. அட்டைப் படத்தில் நகைச் சுவைத் துணுக்கை படத்துடன் வெளியிடுவது பெரும் சுவாரஸ்யத் தைத் தருவது. முன்னர் ஆனந்த விகடனிலும் கண்ணன் என்ற சிறுவர் பத்திரிகையிலும் இவ்வாறான அட்டைப் படங்களை வெளியிட்டு வந்தார்கள். இலங்கையில் நீண்டநாட்களாக வாசகர்களை சிரிக்கப் பண்ணி கொண்டிருந்த 'சிரித்திரன்' சஞ்சிகை அதன் அடியொற்றி வந்து கொண்டிருப் பவை தான் சுவைத்திரள்.

இந்த இதழிலேயே வெளிவந்துள்ள சிரிப்பில் சுரக்கும் இராசயனம் என்னும் கட்டுரை மனிதவாழ்வுக்கு சிரிப்பு எத்தனை அவசியம் என்பதைச் சுருக்கமாகவும் எளிதில் மனதில் பதியும் வண்ணமும் சொல்லியுள்ளது. இந்தப் பத்திரி கையை நான் அவதானித்துப் படித்ததில் ஒரு விடயம் தெளிவா கியது. இதில் உள்ள நகைச் சுவைத்துணுக்குகளைத் தவிர்த்து விட்டுப் பார்த்தால் ஒரு தரமான பத்திரிகைக்குரிய பலவிதமான அம்சங்கள் இடம் பெற்றிருப்பது தான் அது.

'செம்மொழி மாநாடும் தமிழ்மொழி நிலையும் என்ற ஆசிரியர் தலையங்கத்திலிருந்து சங்கம் வைத்து மொழி வளர்த்த இன்னொரு இனம் பிரான்சியர் எனவும் உலகில் அழியும் மொழிகளில் 16வது இடத்தில் தமிழ்மொழி இருக்கின்றது போன்ற விபரங்களைத் தெரிந்து கொள்கிறோம். செம்மொழி மாநாட்டில் வைரமுத்து சமர்ப்பித்த கவிதைபுகழ் பாடுவதாகவே அமைந்திருந்தது என்றும் ஒரு குட்டும் வைத்தார் ஆசிரியர்.



நாட்டுக்கருடன் பதில்கள் சிந்தனைக்கும் சிரிப்புக்கும் விருந்தாய் அமைகின்றன. பேரழிவுக்கு முன் இயற்கை உற்பாதங்கள் தோன்றும் என்றும் ஆனையிறவு போரினால் அழிக்கப்படுவதற்கு சில காலத்திற்கு முன்பு அங்கு நெருப்புமழை பெய்ததாக ஒரு பதில் தரப்பட்டிருக்கிறது. இப்போது பத்துத் தலைநாகம் ஒன்றை மக்கள் கண்டதாக ஒரு செய்தி வந்திருக் கின்றது. மேற்படி பதிலைப்படித்ததும், இதனால் என்ன நேருமோ என்று என்ற அச்சம் தோன்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனக்கலவரம் பற்றி கேள்விக்குப் பதில். அரசாங்கம் பொறுப்பெடுத்தால் இனக் கலவரம் ஏற்படாது அந்தப்பொறுப்பில் இருந்து நீங்கினால் உடன் ஏற்படும்.

மாக்கிரட்செல்லத்துரையின் செய்வதறியாரடி சிறுகதை பெரியாரும் பாரதியும் விண்ணிலிருந்து மலேசியா வுக்கு விஜயம் செய்வதாக இரசித்து படிக்கத்தக்க ஒரு அற்புதமான கற்பனை. தமிழை விட்டுவிலகும் போதும் தமிழர் வாழ்க்கை சுவாரஸ் யமாக அலசிக்குத்திக்காட்டுகிறார் ஆசிரியர். மகிழுந்து, கடப்பிதழ், பனிக்கூழ் வெண்சுருட்டு ஆகிய அழகிய தனித்த தமிழ்சொற்கள் நீண்ட நாட்களுக்குப் பிறகு இக்கதையில் காணக்கிடக்கின்றன.

மாக்கிரட் செல்லத்துரை பல நகைச்சுவைத் துணுக்குகளையும் இவ்விதழில் தந்துள்ளார். 'கலைஞர் அறிமுகம்' என்ற பகுதியில் சிந்தனைச் சீமாட்டி மாக்கிரட் செல்லத்துரை என்ற சிறுகட்டுரை வெளிவந்துள்ளது. இவர் 'சுஜைத்திரன்' வெளிவர பெரும் உதவி செய்து வருகின்றார் என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜகவி ராஹிலை, அதியன்

நேர்கண்டுள்ளார். இலக்கிப் பத்திரிகை களில் வெளிவருவது போன்ற ஒரு கனதியான பேட்டி.

இலக்கியத்தில் சிரத்திரன் காலம் என்றொரு தொடர்கட்டுரையை திக்கவயல் எழுதிவருகிறார். படிக்க சுவையாக உள்ளது. எதிர்மாலத்தில் புத்தகமாக வெளிக்கொணர வேண்டும். சிரித்திரனில் பிரம்மஞானி என்ற பெயரில் அன்டன் பாலசிங்கமே ஆசிரியர் தலையங்கம் எழுதிவந்தார். மகுடி என்ற பகுதியை ஆரம்பிக்க காரணமாக இருந்தவரும் அவரே என்ற தகவல் அதில் உள்ளது.

இனிமை நினைவுகள் என்ற பெயரில் மாஸ்டர் சிவலிங்கம் தன் சுயசரிதையை எழுதி வருகின்றார். சொங்கை ஆழியானின் பிரசித்தி பெற்ற ஆச்சி பயணம் போகிறாள், என்னும் தொடரும் மறுபிரசுரம் செய்யப்படுகின் றன.

வாசித்து மகிழ கவிதைகள் உட்பட நிறைய விஷயங்களிருக்கின் றன. கவலையை மறந்து சிரிக்கச் செய்யும் இந்த இதழை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்க வேண்டும்.

## பக்தகேடி



ஒரு படம் பிரேம் பண்ணுற கடை ஒன்னுக்கு போயிருந்தேன் அங்கே முஸ்லீம், கிறிஸ்தவர் இருவ ரும் முதலாளியாக இருக்கி றாங்க... ஆனால் விற்கிற படங் களோ விநாயகர், லஷ்மி, முருகன், சரஸ்வதி, சிவன், பார்வதி , இந்தியாதி... மதம் வேறு! பிழைப்பு வேறு இதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்!

### கோமாளிகள்

விழிவழியெல்லாம்
மர்மம் ஜொலிக்கிறது
நரிகள் எதிர்க்கின்றன
வாழ்கிறேன்

- அஸறி -

### வாழப்பிறந்தவர்கள்

வாழப் பிறந்தவர்கள்
செம்மணியின் உள்ளே....
மற்றும் ஒர் அணம்
இறந்தவர்கள் நாளும்
புழுதியின் உள்ளே

- ருதுரி -



நீ வளர்த்த பிள்ளை காதல னோடை ஓடிட்டுது? ஏன் கவலை? உலக நியதி..
நான் அதைச் சொல்லல்லையே... 10 ஆயிரம் கொடுத்து வாங்கின அல்சேசன் நாயும் அவளோட கூட ஓடிட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவைத்திரள் – 1993ம் ஆண்டில் இருந்து வெளிவரும் நகைச்சுவை இதழ் (உலகச் சஞ்சிகை) அச்சடிக்கப் படும் பிரதிகள் ஆயிரம்**

**சுவைத்திரள் செய்திப் பத்திரிகையாக 1993ம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது.**


✧**தபால் விலாசம் :** இல.15, வெயிலி வீதி, மட்டக்களப்பு.

✧**தொ. பே. இ :** 0770265351

✧**ஆசிரியர் :** இலக்கியச் சுடர், திக்கவயல்.சி.தர்மகுலசிங்கம்

✧**ஓவியர்கள் :** S.D.சாமி, வத்தளை, R.ராமச்சந்திரன், ஹட்டன், ஸ்ரீ கமலச்சந்திரன், மட்டக்களப்பு. மாக்ரட் செல்லத்துரை, மலேசியா.

✧**இலட்சியம் :** துன்பப்படுவோர்களை மகிழ்ச்சி அடையச் செய்தல்.

✧**சந்தா :** ஏற்கப்படும். ஆண்டு சந்தா ரூ.1000/- (2 சிறப்பிதழ்களுக்கும்)

✧**கணினி வடிவமைப்பு :** A.ஜெயலக்ஷ்மி

✧**அச்சுப் பதிப்பு :** வணசிங்கா பிரிண்டர்ஸ், இல.126/1, திருமலை வீதி, மட்டக்களப்பு, ஸ்ரீலங்கா.


**இந்த இதழில் மக்களை மகிழ்விக்க எழுதுவோர்**

**கிண்ணியா அலி அக்பர், கவிஞர் கா.சிவலிங்கம், செங்கை ஆழியான், திக்கவயல் தர்மு, பாலா சங்குப்பிள்ளை, மாஸ்டர் சிவலிங்கம், மார்க்கிரட் செல்லத்துரை (மலேசியா), ஏறாவூர் தாஹிர், யோகா சிகிச்சை நிபுணர் செல்லையா, துரையப்பா, கா.தவபாலன், நா.பார்த்தீபன், அருணா தர்மலிங்கம ஆகியோர்**

வாசகர்களே சுவைத்திரளுக்குச் சந்தா அனுப்புபவர்கள் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கும் படி கேட்கப்படுகின்றனர். **விபரம் :- கே.எஸ். தர்மகுலசிங்கம், கணக்கு இல. 1105001793, வர்த்தகவங்கி (கொமர்ஷல் வங்கி), மட்டக்களப்பு.**

வெளிநாட்டில் இருந்து எமக்குச் சந்தா அனுப்பத் துடித்துக் கொண்டிருக்கும் நேயர்களே.... நீங்கள் வாழும் நாட்டின் நாயணம் இலங்கை ரூபாவின் பணப் பெறுமதி ஏது நாலாயிரத்துக்குச் சமமானதோ அதுவே சுவைத்திரளின் 12 இதழ்களுக்கான சந்தாரப்பணமாகும். அதை அனுப்பி வையுங்கள். பிறந்த இடச் சிரிப்பை புகுந்த இடத்தில் சிரிக்க இதுவே சரியான வழி முறையாகும்.

**சுவைத்திரள் பின்வரும் நாடுகளில் கிடைக்கும் இடங்கள் :**

| Germany | Canada | Newzealand | Australia | Malaysia |
|---|---|---|---|---|
| P.Pasupathirajah,<br>Hecking Haucer STR 129,<br>42289, wuppertag,<br>Germany. | Marie miranda<br>75, Aramman drive<br>Scarborough M.I.T<br>2P7 Canada | T.Rajenthiran<br>Ourr Pillayar Trader<br>No.535, Sandringham<br>Auckcand<br>Newzealand | S.Sriskantharajah,<br>1, Pertra court,<br>Epping victorio,<br>3076,<br>Australia. | Margaret Selladurai<br>No.40, Jalan 3A<br>Taman Hiew piaw<br>43500 Semenyih<br>Selangor Darul Ehsaw<br>Malaysia. |

**விளம்பரக் கட்டணங்கள்**

| | |
|---|---|
| அட்டையின் பின் பக்கங்கள் முழு அளவு | 3000.00 |
| அரைப்பக்கம் உள் அட்டை | 1500.00 |
| முழுப்பக்கம் உள் அட்டை | 2000.00 |
| உட் பக்கங்கள் ஒரு பக்கம் | 1000.00 |

சுவைத்திரளில் வெளிவரும் விடயங்கட்கு ஆசிரியரே முழுப்பொறுப்பு. அவதானமாக எழுதுவது எழுத்தாளர் பொறுப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லயஞான காண்டம்

## இந்த இதழில் எழுதும் எமது மாபெரும் எழுத்துலகச் சிற்பிகள்

**ஏறாவூர் தாஹிர் (எமது ஸ்டார் கவிஞர்)**



கவிஞர் தாஹிர் கவிதை உலகில் பேசும்படி வளர்ந்து விட்டார். ஈழத்தின் பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிவரும் இவர் தமிழுலகில் பேசப்படும் மாபெரும் கவிஞராக தலைநிமிர்ந்து வருகிறார். இவர் பெரும் கவிஞராக வரும் வாய்ப்பு மிக அதிகம். இவ்வாறு சுவைத்திரள் சஞ்சிகை இந்த இதழில் இவரின் பேசும் கிளி என்ற கவிதை வெளியாகியுள்ளது.

**கா.தவபாலன்**



சிறந்த சிரிகதைகளை எழுதிக் குவிக்கும் கா.தவபாலன் வளரும் சிறந்த இலக்கியவாதி. கன்னொறுவையில் விவசாய அதிகாரியாகப் பணியாற்றும் இவர் யோசித்துப் பார்த்தால் ஓர் இலக்கிய அதிகாரி இவரின் சிரிகதை இந்த இதழில் இடம்பெறுகிறது.

**மார்க்கிரட் செல்லத்துரை**



தமிழுலகில் ஓர் உலகக் கார்ட்டூனிஸ்ட்டாக வளர்ந்து வரும் மார்க்கிரட் செல்லத்துரையை அறியாதவர் எவரும் இல்லை. அவரால் கீறப்பட்ட பல்வேறு கார்ட்டூன்களும் இந்த இதழை அலங்கரிக்கின்றன. அவருக்கு வாழ்த்துக்களைச் சுவைத்திரள் தெரிவிக்கின்றது.

**K.ராமச்சந்திரன் (ஓவியர்)**



வயதோ அறுபது முக்காலத்துக்கும் பொருந்தும் கார்ட்டூன்களை இந்த இதழில் அதிகமாகக் கீறியுள்ளவர் ஓவியர் ராமச்சந்திரன் இவர் ஹட்டனில் வாழ்பவர். ஓவிய உலகில் தமிழ் இதயங்களில் வாழ்பவர். இந்தப் புதுமையான ஓவியரின் பல்வேறு கார்ட்டூன்கள் இந்த இதழை அலங்கரிக்கின்றன. ஓவியர் ராமச்சந்திரனுக்கு சுவைத்திரள் தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவிய மாமணி அகளங்கள்



தமிழறிஞர் அகளங்களை அறியாதார் யாருமில்லை. எழுத்திலும், பேச்சிலும் வல்லமைமிக்க இவரின் கட்டுரை ஒன்று இந்த இதழில் இடம்பெற்றது கண்டோம், சென்றோம், வெற்றிகொண்டோம் என்ற இந்த பிரயாணக் கட்டுரை மிகவும் சுவாரஸ்யமானது. சுவைத்திரள் ஆசிரியரை ஆபத்தில் ஓடி வந்து காப்பாற்றும் பெருந்தகை இவர். இந்த இதழில் மாத்திரம் அன்றி எந்த இதழிலும் சுவைத்திரளில் எழுத வருக என இவரைச் சுவைத்திரள் அழைக்கின்றது.

## நா.பார்த்திபன்



வளர்ந்து வரும் வித்தியாசமான எழுத்தாளர் நா.பார்த்திபன் இவரின் எழுத்தாளர் புகைப்படத்தைப் பாழ்பட்டுப் போன வெள்ளம் வீட்டுக்குள் புகுந்து இழுத்துச் சென்றுவிட்டது. அதனால் அவரின் முகத்தை உங்கள் முன் காட்ட முடியவில்லை. வவுனியாக் கல்லூரியில் மூத்த விரிவுரையாளராகக் கடமையாற்றும் அன்னார் வித்தியாசமான சிந்தனைகள் கொண்டவர். அவரால் எழுதப்பட்ட பிரம்மாவா.... என்ற கதை சிந்திக்கத் தூண்டுகிறது. தமிழ் எழுத்துலகில் புதுமை புகுத்தி எழுதும் பார்த்திபனைக் கண்ணா வா என அழைத்துச் சுவைத்திரள் வரவேற்கிறது.

## ஜெவ்விதாசன்




சுவைத்திரளிற்குப் புதுமையான கருத்துக்களால் ஜெவ்விதாசன் திருகோணமலை பாலையூற்றைச் சேர்ந்தவர். பாலையூற்றில் வாழ்ந்தாலும் அன்னாரின் கவிதைகள் சோலை ஊற்று. அவரின் கவிதைகளும் இந்த இதழை அலங்கரிக்கின்றன.

## புகழ்பூத்த அலிஅக்பர்



கிண்ணியா என்றால் உடன் ஞாபகம் வருவது கிண்ணியா எம். எம். அலி அக்பரையே கிண்கிணிச் சிரிப்பால் வாசகர்களின் முதுகு வலிக்கும் பகிடிகளை விடும் இவர் சிரிப்பு மேடையின் சொந்தக்காரர். முன்னாள் அதிபர் கிண்ணியா எம்.எம்.அலிஅக்பரே வருக... முன்னாள் அக்பர் போன்றவரே வருக எனச் சுவைத்திரள் வரவேற்கிறது.



## ராஜகவி ராஹில்



வா... வா... ராஜகவி ராஹிலே உங்கள் வருகை நல்வரவாகுக. அவன் + அவள் + கண்ணீர் என்ற கதையை இந்த இதழில் இவர் எழுதியுள்ளார். நல்ல கதை ஒன்றைச் சிருஷ்டி செய்த உங்கள் கதைக்கு சுவைத்திரள் தனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றது. மார்க்கிரட் செல்வத்துரை எழுதிய ஓவியங்கள் இவரின் கதையை அழகுபடுத்துகின்றன.

## கணபதிச் சித்தரே வருக
## கலை வெள்ளம் தர வருக



நகைச்சுவை எழுத்துகளிலும், சோதிட புலமையிலும் புலமைமிகு கணபதிச் சித்தர் சுவைத்திரளில் இணைந்து கொள்கிறார். வவுனியாக் குடியிருப்பில் கந்த சாமிக் குருக்கள் என்றால் தெரியாதார் யாருமில்லை. அவரே கணபதிச் சித்தர். புதிதாக எம்முடன் இணைந்த புலமை ஒளியே சுவைத்திரள் உங்களை வருக..... வருக என வரவேற்கின்றது.

## கைக்கூக் கவிதைகள்

ரத்தோட்டை - சந்திரசேகரன்

தேயிலை தொழிற்சாலை
தேகம் வெடித்தது
அரை குறை ஆடைத் தொழிற்சாலைகளாய்

தேயிலை தொழிற்சாலை
தேகம் வெடித்தது
அரை குறை ஆடைத் தொழிற்சாலையாய்

பூமித்தாயும் பொறுமை இழந்து
புனர்பதுத்தி விட்டது எம்மை
நிலத்தில் வெடிப்பு

யாருமே துணிந்திருப்பதில்லை
உருவத்தில் ..................
உடலும் உள்ளமுமாய்

தேச தலை எழுந்து
திரும்ப சிதைக்கப்பட்டது
வேலிய வெள்ளம்

முகாம்களில் முகம்
முகவரியில் மாற்றும்
பெயர் மட்டும் நிர்க்கதியானோர்

இடமும் ஒரு நாள் வெள்ளையில்
மண்டியும் இந்தனை ஓடத்தில்
மேயும் வெள்ளத்தில்

பறந்து விட வேண்டுமென்று
நினைத்துக் கொண்டிருக்கிறது
நிலத்தின் நினைவுகள்

விருந்துகளைக் கண்டுபிடிப்புக்குள்
விசித்திர நோய்
கணணிக்குள் வைரஸ்

தேச சக்திகளால்
தேயிலைத் தோட்டங்கள் எல்லாம்
"தேசக்தியாய்" தேய்ந்து போனது

புது வரவாய்..........
இப்போது ஓர் அட்டைக்கடி
"வாக்காளர் அட்டை"

வறுமை நிவாரணம் கொடுத்து
வளர்க்கப் படுகின்றது
வறுமை நிவாரண அட்டை

கீழிருந்து பார்ப்பதாலோ
சின்னதாய் சிமிக்கிறது நட்சத்திரங்கள்
எங்களின் பார்வை

தேசம் காற்றில் பறக்கிறது
தேசம் சோர்ந்து சுருண்டு கிடக்கிறது
"யாழாட்டுக் கொடி"


மாத்திரை இருந்தும்
தமிழ் நோய்வாய்ப் பட்டது
"தமிழில் மாத்திரை"

வறுமை கொடுத்தாலும் கழுத்துபாத
நிறுக் கைத்துள்
வாசு மாற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனத்திரை



இலங்கையில் பிறந்தவர்கள் யாவரும், இந்தியாவுக்கு ஒருமுறை விஜயம் செய்து அங்கு உள்ள சட்டம் பற்றி அறிதல் வேண்டும். இலங்கையில் எவ்வாறு சட்டங்கள் உள்ளன என்பது பற்றியும் அங்கு உள்ள சட்டங்கள் எவ்வாறு நீண்ட கயிற்றில் இயங்குகின்றது என்பது பற்றியும் நுணுகி ஆராய்தல் வேண்டும்!

இலங்கையிலும் சரி இந்தியாவிலும் சரி பணத்தால் சட்டத்தை மீறலாம். இந்தியாவில் இதன் தாக்கம் அதிகம். அதிக குற்றங்கள் செய்பவனை அவனாகத் தான் அவனை நீண்ட கயிற்றில் மேயவிடும் நடைமுறையாகும். அதன் பின்பு அவன் பெரும் தவறில் மாட்டினால், மாட்டினது தான். வாழ்க்கையைத் தொலைந்தது மாதிரித் தான்.

காந்திஜியைச் சுட்டவன் கோட்சே. 18வருட சிறையின் பின்பு அவன் வெளியேறி விட்டான் சிறையில் இருந்து !

ஆனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நேரடியாக கொலைப்பாத்திரமாக விளங்காத நளினியாலோ, முருகனாலோ 18 வருடங்கள் முடிந்தும் சிறையை விட்டு வெளிவர முடியவில்லை.

இலங்கையில் இவ்வாறு ஒரு கொலை நடந்திருந்தால் சந்தேகநபர் தண்டனைக்காலம் முடிந்து வெளியே வந்திருப்பார்! அவருக்கு காலக்கழிவுகளும் கிடைத்திருக்கும்! தமிழ்நாட்டில் ஒருவர் சென்று வந்தால் பெரும் சுதந்திரம் இருப்பது போல பிரமிப்புத் தோன்றும்! எல்லாத் தவறுகளும் செய்யலாம் என்ற உணர்வும் தோன்றும். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை, குற்றவாளி நீண்ட கயிற்றில் தற்காலிகமாக மேய்கிறார். என்றே கருத வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்த சுவாமி பிரேமானந்தாவை எடுத்துக் கொண்டாலும் அதையே சிந்திக்க வேண்டியுள்ளது.

சுவாமி சிறிய குற்றங்கள், காமக்களியாட்டம், செய்த போது சட்டம் பேசாமல் இருந்தது. அதுவே கொலை, காமம் எனத்தொடர்ந்து அவரின் ஆயுட்காலம் முழுவதும் தண்டனையிலே முடிந்தது.

இலங்கைக்கு வந்த மலையானச் சாமியார் ஒருவர் இவ்வாறான காமச்சேட்டைகளில் ஈடுபட்டு நீதிமன்றத்தில் நிறுபாட்டப்பட்ட போதும், அவருக்கு இவ்வாறான தண்டனைகள் எதுவும் கிடைக்கவில்லை. அந்த வழக்கிற்கு என்ன நடந்தது என்பது பற்றியும் புரியவில்லை. ஆன்மீகத்தில் ஈடுபடும் எவரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்யாது கடவுளின் பெயரால் தவறு செய்தால் கடவுளும் காப்பாற்றமாட்டார். இதை ஆன்மீக வாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும் சுவாமி நித்தியானந்தா கடைசி உதாரணம்.

இலங்கையைப் பொறுத்த வரை அரசியல் கைதிகள் நடத்தப்படும் விதம் வரவேற்கப்படும் நிலையில் இல்லை. விடுதலைப் புலிகள் விடுவித்து விட்டதாக கூறும் அரச உதவியாளர்கள் எனச் சந்தேகப்படும் நூற்றுக்கணக் காணோரை வருடக்கணக்கில் கம்பியின் பின்னால் வைத்திருப்பது நியாயமான தீர்ப்பில்லை.

இந்த மாதம் என் மனதில் ஏற்பட்ட மனத்திரை இது. ஏன் எழுதியுள்ளேன் என்பதை அறிவது உங்கள் திறன்! அடுத்த மடலில் சந்திக்கும் வரை

உங்கள் அன்புமிகு
- மணிமேகன் .



என்னா தம்பி.... மற்றவர்களின் தலையை விட உங்க தலை சிறிசாக இருக்கே....

அப்பா வட்டிக் கடை வைச்சிருக்கார்.... கடவுள் எனக்குத் தலையைச் சிறிசாக்கிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



# நாட்டுக்கருடன்-பதில்கள்



கே :- இன்று மனிதர்களில், கள்ளுருவன் கூறிய கயவன் யார்? சில உதாரணம் சொல்லுங்களேன்!

ப:- திட்டமிட்டு ஒருவனை விபத்தில் அகப்படச் செய்தவன்.

குடும்பத் தலைவியைப் பற்றிக் குடும்பத் தலைவனிடம் பழைய குறைகள் சொல்லிக் குடும்பத்தைக் குலைத்தவன்.

ஒருவனைச் செயல்பட விடாது செய்வினை செய்தவன்!

தன் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்புக் கொடுத்து, தன் பிள்ளையிடம் வரும் பிள்ளையை விலை மாதுபோல் கருதும் அயோக்கியன்!

இவ்வாறு பல சொல்லலாம்

✉ [illegible]

கே :- தமிழ்த் திரைப்படங்கள் இனி எந்தக் கோணத்தை நோக்கி நகராது?

ப :- ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி காலத்தை நோக்கி நகராது.

✉ [illegible]

கே :- நான் கோழிப் பண்ணை வைத்திருக்கிறேன். நாட்டுக்கு எவ்வாறு சேவை செய்ய முடியும்?

ப :- நீங்கள் வளர்க்கும் கோழிகள் காலையில் ஒரு முட்டையும் மாலையில் ஒரு முட்டையும் போடச்செய்க. மேலதிகமாக வரும் முட்டையை வன்னி மக்கள் வாழும் நலன்புரி முகாமில் ஒப்படைக்கவும்.

✉ [illegible]

கே :- விளம்பரங்களில் நன்றி உணர்வு மிக்க நகைச்சுவை உண்டா?

ப :- ஆமா.... கீழேயுள்ள நகைச்சுவை ஒரு தினப்பத்திரிகையில் இருந்து பெறப்பட்டது.

30ஆம் நாள் நிலவரம்



[illegible]

இந்தப் போஸ்டர் சில காலங்களுக்கு முன்பு ஒரு பத்திரிகையில் வெளியானது. நன்றி மிக்க மனிதனை விட நாய்கள் மேலானது என்ற தத்துவம் இம்மாநிலத்தில் ஓங்கி வருவதாக இது உணர்த்துகின்றது என்கிறார் ஒரு ரசிகர்.

✉ [illegible]

கே:- பூமியின் கோடுகள் இருப்பது போல அதிகமான தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்தும் கோடுகள் யாவை?

ப :-
மறுமைக்கோடு
பாலியல் பலாத்காரக்கோடு
வறுமைக்கோடு

கே:- எமது ஊரில் ஒரு பெரும் பணக்காரர் இருக்கிறார். இரண்டு கேள்வும் கேட்காது? இது யார் செய்த வினை?

ப:- இது அவர் செய்த வினையாகவே இருக்கும். இவர் தந்தையாரை வயோதிபர் மடத்துக்கு அனுப்பிய பெருந்தகையா என விசாரித்து அறியவும்

கே:- யார் கண்ணோட்டம் உள்ள மனிதன்?

ப:- கண் மூடும் நேரத்திலாவது கண் தானம் செய்தவன்!

✉ [illegible]

கே:- முயற்சி உடைய நாடுகள் எப்படி இருக்கும்? இளைக்காத நாடுகள் எப்படி இருக்கும்?

ப:- சிலந்தி வலையால் கூட முயற்சி உடைய நாடுகள் மீன் பிடிக்கும்! அதே வலையால் இளைக்காத நாடுகள் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும்!

கே:- நீண்ட நெடுங்காலம் ஜனநாயக நாட்டில் ஒரு தலைவரே ஆட்சியில் இருக்கக் கூடாது என்று பலரும் கூறுகின்றனரே! அதற்குக் காரணம் என்ன?

ப:- ஒரு தலைவரே ஆட்சியில் இருந்தால், காலப்போக்கில் கிளர்ச்சி ஏற்படும் போது பதவி நிலை நீடிப்பதற்காக அரச இராணுவமே தன் நாட்டு மக்களைக் கொலை செய்யும். லிபியா, எகிப்து நாட்டின் உதாரணங்கள் இதையே எடுத்துக் காட்டுகின்றன!

✉ [illegible]

கே:- மரபணுவை மாற்றுவதில் விஞ்ஞான உலகம் வெற்றியடைந்து விட்டது? உமது கருத்து என்ன?

ப:- அப்படி என்றால் மயிர் முளைத்த முட்டை போட கோழிக்குச்சொல்க! மூக்கில் கறுப்பு இல்லாத குண்டுமணி காய்க்க விஞ்ஞானிகளுக்குச் சொல்க. இரண்டும் நடக்குமானால் நீங்கள் சொல்வது வெற்றிதான்.

✉ [illegible]

கே:- ஆண்நிலை வாதம் என்றால் என்ன கருத்து?

ப:- நரி, நாயைச் சேர்ந்தாலும் விளைவு நாய்க்குட்டியே இதுவே ஆண் நிலைவாதம்.

✉ [illegible]

கே:- உலகில் காணக்கூடிய திசை எது?

ப:- வாழை போடும் குட்டி கள்ளுப் பானையில் இருக்கும் முட்டி! தொடரும் நிழல்!

✉ [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே:- காட்டில் வருவது எது? வீட்டில் வருவது எது?
ப:- காட்டில் வருவது யானை, வீட்டில் வருவது பூனை.

❊ [illegible]
கே:- நின்று கொல்வது என்ன? வென்று கொல்வது எது?
ப:- வெள்ளத்தில் வந்த பாம்பு நின்று கொல்லும்!
காற்றோடு வந்த நுளம்பு சென்று கொல்லும்!

கே:- நமது நாட்டோர்க்கு சில பேர் வழிகளில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் எவ்வளவு தூரம் தூரம் வித்தியாசம் காணப்படுகிறது? இவர்கட்கு நீங்கள் சொல்லும் அறிவுரை என்ன?
ப:- வாய் சொல்வது, கை செய்வது. வாய்க்கும் கைகளுக்கும் இடைப்பட்ட தூரமே சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள இடைத்தூரமாகும் பேசிய பேச்சுக்கு நீ எஜமான். என்பதை மாத்திரம் அவர்கட்கு ஞாபகப்படுத்த முடியும்.

❊ [illegible]
கே:- பட்டர்கொட்டலில் கலையிலக்கியம் நன்கு வளர்ந்துள்ளதா?
ப:- ஆம்.... விழிப்புலன் அற்றோர் ஆடும் பரதநாட்டியத்தை விழிப்புலன் உள்ளோர் கலை அகத்தில் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

❊ [illegible]
கே:- கடவுளின் படைப்பில் நீங்கள் கண்ட உண்மை என்ன?
ப:-நான் கண் அயர்ந்து தூங்கும் போது எனது முற்றத்தில் இருந்த மாமரத்தில் கண் இல்லாத வௌவால்கள் கனிந்த மாங்கனி களை உண்டு தீர்த்துப்போன போது தான் கடவுளின் மகத்துவம் தெரிந்தது.

கே:- நக்கீரன் போன்ற புலவர்கள் மறுஜென்மம் இலக்கியத்தில் புகுந்தால் என்ன நடக்கும்?
ப:- நக்கீரனுக்குச் சரியாக தமிழ் இலக்கணம் தெரியாது இருந்தது என இலக்கியம் கூறுகின்றது. நக்கீரா... உன்வரவு நல்வரவு புதுக்கவிதை புனை அத்துடன் நில்... என இலக்கியவாதிகள் சொல்வர். வண்டு பாடாத சோலையில் வாழும் புலவராக நக்கீரன் இருப்பார்.

❊ [illegible]
கே:- நாம் நித்திரை கொள்ளும் போது நித்திரை கொள்ளாதவைகள் எவை?
ப:- வட்டிக்காக நித்திரை கொள்ளாது. நமது உடலில் பாகங்களான நகம், தலைமயிர் என்பனவும் வளருமே தவிர நித்திரை கொள்ளாது.

❊ [illegible]
கே:- படித்தோரின் மானம் எங்கு பறிபோகிறது?
ப:- மீன் சந்தையில் சென்று விலை கேட்கும்போது படித்தோர் மானம் வெடித்தே போகிறது!




கே:- வாழ்வில் யாரை நம்பி நடக்கலாம்?
ப:- குடித்தாலும், இன்னொருவர் மூக்குக்குமேல் உரிமை கோரமாட்டார் என அறிந்தால் அவ்வாறு நம்பி நடக்கலாம்.

கே:- நடுச்சாமத்தில் கோழி கூவினால் யாருக்கு லாபம்? யாருக்கு நட்டம்?
ப:- விழித்தெழுந்த காமுகனுக்கு லாபம் ஏற்படலாம்.



கே:- எவன் வாழ்வில் அபாக்கியசாலி?
ப:- காலைக்கடனை முடிக்குமுன்பே காலையில், கடன்காரன் வீடு தேடி வந்து கடன்காசைத் தா எனக் கேட்கும் நிலையில் வாழ்பவன்!



குட்மோர்னிங்... கடன் காசை எடும்!

கே:- கவலையின் தமிழன் நிலையைக் கண்டு கவலை அடையாதவன் யார்?
ப:- கவலை அடைவது துக்கனாம் குருவிகள். கவலை அடையாத வர்கள்.
இலங்கை அரசு + இந்திய அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இத்தகு பெருமைமிக்க எழுத்தாளர்களின் படைப்புக்களைத் தாங்கி கலைத்திரள் 36ம் இதழ் உலகு எங்கும் களம் புகுந்துள்ளது. எந்தப்பிரதி எவர் கையில் கிடைக்குமோ தெரியாது. நீங்கள் ரசித்தவற்றை எமக்கு எழுதுங்கள்! உங்களின் ரசனைக் கடிதங்களுக்காக கலைத்திரள் காவல் நிற்கின்றது.

முக்கிய கவனிப்பு:
ஈழத்தின் தமிழ் எழுத்துலகில் காத்திரமான ஜனரஞ்சகக் கவிதைகளை எழுதிவருபவர் பாலா சங்குப்பிள்ளை இவரின் துள்ளித்திரிந்தக் காதல் என்ற கதை இந்த இதழில் ஆரம்பமாகின்றது. நில்! கவனி! படி!!

## மீனவனின் வேதனைகள்



இலங்கைக் கடற்படையினரால் இது வரை எட்டு தமிழக மீனவர்கள் சுடப்பட்டனர் என்று இந்தியா கூறியுள்ளது. ஐநூற்று ஐம்பது பேர் பலி என்று தமிழகத் தகவல்கள் தெரிவிக்கின்றன மிகுதி மீனவர்களைக் கடலாமை வந்து சுட்டுக் கொன்று இருக்குமோ தெரியவில்லை...





## யமலோகத்தில் பூசாத ஆவிகள்



யமன் :- என்ன சித்திரகுப்தா கடும் யோசனை?

சி.கு :- அடையாளம் காண முடியாத ஏராளமான ஆவிகள் வந்துள்ளன.

யமன் :- எப்படி அவர்கள் திடீர் என்று வந்தார்கள்?

சி.கு :- யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பூகம்பத்தாலும், விமான விபத்தாலும் வந்தவர்கள்.

யமன் :- இப்ப அதுக்கு என்ன செய்வது?

சி.கு :- முதலில் ஆவிகள் முகாம் அமைத்து அங்கு விடவேண்டும்.

யமன் :- நல்ல யோசனை

சி.கு :- ஒரு சில ஆவிகள் அகதி முகாமில் இருந்தவர்கள். அவர்கள் அடிப்படை வசதிகளை கேட்பார்கள். அதை செய்து கொடுக்க வேண்டும். சரியாக செய்து கொடுக்காவிட்டால் ஆர்ப்பாட்டம் சத்தியாகிரகம் செய்வார்கள்

–கணபதிச் சித்தர்–




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் + அவள் + கண்ணீர்

(சிறுகதை)

ராஜகவி ராஹில்





இன்னைக்கு நேபத்தோட வேலைய முடிச்சிட்டு வீட்டுக்குப் போய்க்கிட்டிருந்தேன். நான் வேர்க் பண்ணும் ஒபிஸ் எங்க வீட்டிலிருந்து 'ரூவெண்டி' மினிற்ஸ் நடந்து செல்லுற தூரம். தெருவில சன நடமாட்டம் அதிகமா இருந்திச்சி. த்ரீவில், கார், மோட்ட பைக்... இப்படி வாகனங்கள் போய்க் கிட்டும்



வந்துக்கிட்டுமிருந்தன. நான் புடிச்சிக் கொண்டு தெருவோரமா நடந்துக் கிட்டிருந்தேன். வெயில் ஓரளவு தணிஞ்சு போயிருந்தது. நேரத்தப் பார்த்தேன் த்ரீ ற்றென். திரிபோட்டிஃபைஃவ்க்கு நான் வீட்டில் இருந்தாகணும்.

"புவனா! இன்னைக்கு நாலுமணிக்கு வீட்டுக்கு வந்துடணும்!"

நான் என்னத்துக்குன்னு கேக்கல்ல. எனக்குத் தெரியும் என்னத்துக்குன்னு. எனக்கு இதுல சம்மதமே இல்லன்னாலும் எங்க ஃபெமிலிய அம்மாதான் சுமந்துக்கிட்டாள். எனக்குப் பின்னால் ரேணுகா, மாலதின்னு ரண்டு தங்கச்சிங்க வளந்துக்கிட்டிருக்காங்க. ரேணுகா இன்னும் ரூ இயர்சில படிப்ப முடிச்சிடுவாள். அப்புறம் அவளுக்கு நல்ல ஜொப் ஒன்னு கிடைச்சிடும். மாலதி ஓ லெவலில் படிக்கிறாள். அவளும் குமராகிட்டாள்.

என் நெனப்பு எங்க ஃபெமிலிக்குள்ள சங்கமிச்சது. என் அப்பாவப்பத்திச் சொல்லணும்னா நல்ல குடிகாரர். எப்பவும் தண்ணி போட்டுக் கிட்டு அம்மாவையும் எங்களையும் தொந்தரவு பண்ணிக்கிட்டே இருப்பார். அம்மாவும் எத்தனை நாளைக்குத் தான் பொறுத்துக்குவாள். இப்படித்தான் ஒரு நாள் நல்லாத்தண்ணி போட்டுக் கிட்டு வந்து அம்மாக்கு அடிச்சார். பக்கத்துல கெடந்த இரும்புக்கம்பியால அப்பாக்கு ஒரு போடு போட்டாள் அம்மா. அதோட எங்கள உட்டுட்டுப்போன மனிசன் இதுவர எங்க கண்ல படவேயில்ல. ஒரு வகையில அம்மாக்கு இது சந்தோசந்தான்.

அதுக்குப்பொறகு அம்மா நெசவு நெய்றதுக்குப் போய் எங்களக் காப்பாத்தினாங்க. நானும் படிப்ப நிப்பாட்டிட்டேன். அப்போதான் எங்க தூரத்து உறவுக்கார அம்மா எங்க வீட்டுக்குப் பக்கமா வந்தாங்க.

"பொண்ணு என்ன செய்றா மரகதம்?"

"பத்தாம் கௌாஸ் படிச்சிட்டு இப்ப எனக்கு ஒதவியா இருக்கா."

அம்மா கவலையோட சொன்னாள்.

என்னைப்பக்கத்தில் அழைச்சாங்க. நான் அவங்க பக்கத்துல போய் இருந்தேன். என்ர தலைய தடவினாங்க.

"பேரு என்னம்மா...?

"புவனேஸ்வரி

"மரகதம்! புவனாவ எங்ககூட அனுப்பு. நான் என்ர கம்பனில வேலை போட்டுக் கொடுக்கிறன்"

அந்த அம்மா சொன்னாங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன புவனா... சம்மதமா?"

என்னைப்பாத்து அந்த அம்மா கேட்டாங்க.

"என்ன வேலை"ன்னேன்.

"என்ர ஒபிஸ்ல றசப்ஸன் கேர்ளா வேர்க் பண்ணு!"

அந்த அம்மா சொன்னதும் எனக்கும் அம்மாக்கும் மிச்சம் சந்தோசமாயிடுச்சி. அவங்க எனக்கு வேலை போட்டுக் கொடுத்ததுக்கு ரண்டு காரணம் இருந்திச்சி. ஒண்ணு நான் அப்பிளப் போல செவப்பா அழகா இருந்தது. மத்தது தூரத்து உறவுக்கா ரங்க.

ஒரு லொறி செய்த ப்ரேக் சத்தம் நான் றோட்ல நடந்திக்கிட்டி ருக்கன் எங்கிறத நெனவுபடுத்திச்சி இன்னும் கொஞ்சம் நடந்தா வீடு வந்திடும் திரும்பவும் என்னப்பத்தி நான் நெனச்சிப் பாக்கத் தொடங்கினேன்.

றிசப்சன் கேர்ளா வேர்க் பண்ணத் தொடங்கிய நான் நாலு வருசத்தில படிப்படியா உயர்ந்து இப்ப ஒபிஸ்ல அசிஸ்டன் மெனேஜரா இருக்கேன். மாசாமாசம் கை நெறைய சம்பளம் கிடைக்குது. நான் அதிகம் படிக்கலன் னாலும் என்ர குணமும் திறமையும் எல்லார்க்கும் புடிச்சிருந்துச்சி. வீட்டுக்குப் போதுக்குக் கூட வாகன வசதியி ருக்கின்னாலும் நான் அத உபயோகப் படுத்திக்கிறதில்ல. எப்பவும் எளிமையா இருக்கிறத்தான் நான் விரும்புறன்.

என்ர வேலைய அவசரமா முடிச்சிட்டு மெனேஜர் சண்முகத்துக் கிட்ட சொல்லிவிட்டு றோட்ல நடந்துக் கிட்டிருக்கன்.

இப்ப வீடு வந்தாச்சி.

"கெதியா வாம்மா...!"

அம்மா அழைச்சாள்.

நான் என்ர ரூமுக்குப்போய் ட்ரெஸ் மாத்திக்கிட்டு பாத்றூமுக்குள்ளே போய் குட்டிக்குளியல் போட்டேன்.

அம்மாவும் மாலதியும் என்ர ரூமுக்கு வந்தாங்க.

"அவங்க வந்துட்டாங்க! வாங்கக்கா!"

மாலதி அழைத்தாள். நான் சென்றேன். எல்லார்க்கும் தேத்தண்ணி கொடுத் தேன்.

"பொண்ணைப் புடிச்சிருக்கு."

நல்ல முடிவாச் சொன்னாங்க. அந்த முடிவுக்குள்ள வழமையான அசிங்கம் இருந்ததை நான் வெறுத்தேன்.

பேசாமப் போறீங்களா? இதென்ன பிஸ்னஸ்சா...? வாழ்க்கையா? பொண் ணுன்னா அவ்வளவு வேலமா?" எனக்குள்ள வசித்த இன்னொருத்தியா னேன் நான். வந்தவங்க தலைகுனி வோட போயிட்டாங்க.

"என்னம்மா இப்பிடிப் பண்ணிப்புட்டாய்?"

அம்மா கவலையோட கேட்டாள்.

"பணத்திலேயும் நகையிலேயும் குறியா இருக்கிறவங்களோட நான் எப்படிம்மா வாழ்றது...?

என் கவலய அம்மாகிட்டச் சொன்னேன்.

"பொண்ணுன்னா கொஞ்சம் பொறும வேணும்மா.

அம்மா இன்னும் கவல செய்தாள்.

"என்னம்மா நீ...? அக்கா செஞ்சது தான் க்ரக்ட்."

மாலதி சப்போட் பண்ணினாள்.

நான் என்ர ரூமுக்குப் போய் கண்ணாடியில என்ர முகத்தப்பார்த் தேன்.


"என்ல என்ன குறையிருக்கு? அப்ப ஏன் சீதனம் கேக்குறாங்க? எனக்கிட்டப் பணம் இருக்கு. நான் போடுற எலும்புத்துண்டை விரும்புறவங்க கூட என்னால எப்படி வாழ்க்க நடத்த முடியும்? ஒரு பொண்ணுட மனச குணத்த விரும்பாம ஏன் பணத்த விரும்புறாங்க?"

எனக்குள்ள நானே கேட்டுக்கிட்டேன்.

"ச்சீ என்ன சமூகமிது? கரும்பக்கொ டுத்து கூலியும்னா எப்படி...? இதவிட யாருக்கும் வாழ்க்கப்படாம இருக்கிறது பெற்றர்."

என்ர மனசு எனக்கிட்டப் பேசியது. அதுல நியாயம் இருக்கிறதாயும் நான் உணர்ந்தேன்.

## நுளம்புகள் பேசினால்...




**போர் இல்லாத உலகம் ஒன்றை உருவாக்க முடியும்! நுளம்புகள் இல்லாத உலகத்தையே உருவாக்க முடியாத இந்த மனிதப் பசங்க...போர் இல்லாத உலகத்தை உருவாக்க போறாங்களாமே..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோட பதினாலுபேர் வந்து என்ன பொண்ணு பார்த்திட்டுப் போயிட்டாங்க. பொண்ணப் புடிச்சிருக்கு! பொண்ணோட அப்பா எங்கே?"ன்னான் ஒருவன். அவன் என்னக் கட்டிக்காம அப்பாவக் கட்டிக்கப் போறானாக்கும்.
பொண்ணப் புடிச்சிருக்கு. ஆனா... பொண்ணுக்கு பெரிய உத்தியோக மாச்சே! அதான்.. புடிக்கல்ல." இவன் என்ர உத்தியோகத்தக் கட்டிக்கப் போறானாக்கும்.
இப்படித்தான் ரூ இயர்ரா என்ர கதை நடந்துக்கிட்டிருக்கு. எனக்கிது பழகிப் போச்சி. மனசுக்குள்ள கவலப்பட்டாலும் அதெ வெளியில காட்டிக்கிறதில்ல.
என்ர குணத்த திறமைய மதிச்சிவர்றது யாரா இருந்தாலும் நான் கட்டிக்கத் தயாரா இருக்கேன்.
அம்மா என்ர ரூமுக்குள்ள வந்தாள்.
"ஒனக்குன்னு ஒருத்தன் பொறக்காமலா இருப்பான் ? ஆர் ஆர்க்குன்னு கடவுள் எழுதி வெச்சிருக்கான். அது நடக்குற வரைக்கும் நாம முயர்ச்சி செய்திக்கிட்டுத்தான் இருக்கணும்."
அம்மா ஆறுதல் போலச் சொன்னாள்.
"அம்மா! பணத்துக்காக என்ர வேலைக்காக யாரையும் நான் கட்டிக்க மாட்டேன். பண ஆசை புடிச்ச மனிசரோட வாழமுடியா. வாழ்க்கைங்கிறது திடீர்ன முடிவு செய்ற விசயம் கிடையா. இப்ப வந்தவங்கள எனக்குச் சுத்தமாப் புடிக்கல்ல. அதான் அப்படி நடந்துக்கிட்டேன். உனக்கு வருத்தமா இருந்தா என்னை மன்னிச்சிடும்மா."
நான் என்ர மனசில உள்ளதச் சொன்னேன்.
"புவனா! நீ கவலைப்படாதம்மா. ஒன்ர நல்ல மனசிக்கு ஒரு நல்லவன் கட்டாயம் கெடைப்பான்"
அம்மா என்னை இன்னும் ஆறுதல் படுத்தினாள்.
"இனி எனக்கு மாப்புள தேடாதே!"
"ஏ...ஏ...பு..வனா..?
"அலுத்துப் போச்சிம்மா.."
நான் கண்டிப்பாச் சொன்னேன்
இரவுச்சாப்பாட்டை ஒருவாறு சிரமப்பட்டு சாப்பிட்டுட்டு படுத்தேன்.... ஆனா... உறக்கம் தூரத்தில் நின்னு வேடிக்கை பார்த்தது என்ர மனசுக்குள்ள இருள் நிரம்பிக்கிடந்தது. ஒருவாறு அந்த இராவு விடிஞ்சது. நான் ஒபிசுக்குப் போனேன் . கம்பியூட்டரில் சில தகவல்கள் திரட்டிக்கிட்டிருந்தேன். அப்ப நிர்மலா என்ர பக்கத்தில வந்தாள். என்னோட பிரியமா பழகுறவள் அவள். எனக்குக் கீழே வேர்க் பண்றவன்னாலும் நான் நிருக்கிட்ட அன்பு வெச்சிருக்கேன். அவள் மனசில என்ன இருந்தாலும் மறைக்காம எனக்கிட்டச் சொல்லுறவள்.
"புவனா...?"
நான் அவளப் பார்த்தேன். அவள் முகத்தில வழமையான சந்தோசம் இல்லை.
"என்ன ஒரு மாதிரியாய் இருக்காய்?"
நான் அக்கறையாக் கேட்டேன்.
"என்ர் பக்கத்தில அமர்ந்தாள்.
"நான் ராம்குமார லவ் பண்ணிக்கிட்டு ருந்தேன்ல"
"ஆமா அதுக்கென்னப்பா..?"
"ரூலெக்ஸ் டவுரி கேக்கிறான் புவனா"
அவள் அழாக்குறையாச் சொன்னாள்.
"அடப்பாவமே..."
அதிர்ச்சியோட கவலயோட நான் சொன்னன்.
"சாகணும் போலிருக்கு புவனா!"
"அடச்சீ! சாகிறத்துக்காகவா பொறந்தோம்... வாழ்றத்துக்காக ! வாழ்ந்து காட்டணும் நிரு!"
நான் கோபத்தோட சொன்னேன். ஆனா.. நானும் எனக்குள்ள போராடிக் கிட்டுத்தான் இருந்தேன்.
"நீ லவ் தானே பண்ணினாய்... கற்பு இழக்கல்லையே...?"
"பு..வ..னா..?"
"என்ன அதையும் ..ச்சே..! நீ அப்படி நடந்துக்கிற பொண்ணில்ல... அப்ப அவனை மறந்திட்டு ஒரு புது வாழ்க்கையத் தொடங்கு! உங்கிட்ட இருக்கிற ரொக்கத்தை நேசிக்கிறவன விட உங்கிட்ட இருக்கிற நல்ல குணத்த நேசிக்கிறவனாப் பாரு! ராம்குமாரோட அயோக்கியத்தனம் திருமணத்துக்கு முன்னால உனக்குத் தெரிஞ்சி போச்சில்ல... அதுக்காக சந்தோசப்படு நிரு!"
கவலயும் கோபமும் கலந்து சொன்னேன் நான்.
"நீ ரொம்ப ஈஸியாச் சொல்லிட்டாய். மறக்கிறங்கிறது எவ்வளவு கொடுமையானது தெரியமா..?
அவளிப்ப அழுதிட்டுச் சொன்னாள்.
முதல்ல அழாதே!.. இந்த அழுகதான் பொண்ணுகளோட மகா வீக்னஸ்... ஒத்துப்போகாட்டி இன்னொண்ண நாம



ஏன்டி... செவ்விழி..... நாங்க இளம் தேங்காயெண்டு வாங் காமல் போறாங்க... அப்புறம்... அங்காலை முத்தின குமர் எண்ணு சொல்லி கல்யாணம் வேண்டாம் என்கிறார்க ளாம்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யூஸ் பண்றதில்லையா..? மனசத்தேத் திக்க நிரு!"

என்னால முடியுமானவரை அவளுக்கு ஆறுதல் சொன்னேன்.

நிர்மலா கவலயோட சென்றாள்.

"பொண்ணுங்க எல்லாருக்காமே பிரச்சினைதான். பொண்ணாப் பொறந் தது குத்தமா..?

எனக்கு நானே கேள்வி கேட்டேன்.

என்ர அம்மாவ என்ர அப்பா நல்லா வாழ வைக்கல்ல.. இப்ப நிர்மலாவ ராம்குமார் ஏமாத்திருக்கான். என்னைப் பொண்ணு பார்க்க வர்றவங்க பணத்தப் பத்திப் பேசுறாங்க. இப்படி... இப்படி... எத்தனை கொடுமைகள். துரோகங் கள், வஞ்சிப்புகள்ன்னு பொண்ணுக ளுக்கு நடந்திக்கிட்டிருக்கு. என்ர மனசு அழுதது.

"மெரேஜ் பண்ணிக்காம ஒரு பொண் ணால வாழ முடியாதா என்ன..?

என்ர மனசில துளித்துளியா சிந்தனை கள் எழும்பின.

"காலா காலத்தோட கல்யாணம் கட்டிக்கிட்டு மூணுநாலு புள்ளகளப் பெத்துக்கிட்டு புருசனையும் நல்ல படியாக் கவனிச்சிக்கிட்டுருக்கிற வதாம்மா பொண்ணு!"

சென்ற கிழமை எங்க உறவுக்காரப் பாட்டி வந்தப்ப சொன்னாள். பாட்டி சொன்னதில அவங்க காலத்து நியாயம் இருந்திச்சி. அந்தக்காலத்தில இப்படி சீதனம் யாரும் கேக்கல்லையே! இப்ப வீடு, நகை, கார், பாத்திரபண்டங்கள், பிரிஜ், டிவின்னு பட்டியல நீட்டிக்கிட்டே போறாங்களே! இது நியாய மான்னு தான் நான் கேக்கிறேன். பொண்ணுங் கிறவளும் உசிரும் உணர்ச்சிகளும், ஆசைகளும் உள்ளவதான்ங்கிறதை இந்த சமூகம் ஏன்.. உணர்றதுக்கு மறக்குது? எனக்குள்ளே கோபமும் கவலையும் எழும்பியது. மறுபுறம் நிர்மலாவ நெனைக்கிறப்ப பாவமா இருக்கி.

அந்த ராம்குமார எனக்கும் நல்லாத் தெரியும். அவனப் பார்த்தா அப்படிப்பட் டவனாத் தோணல்ல. ஒருத்தர்ர துன்பத்தப் போக்கிறதுக்கு நம்மால முடியும்னா அதச்செய்தாகணும்ங்கிற குணமுள்ளவ நான். என்ர ஷெல் போனை எடுத்து சேஃவ் செய்திருந்த அவன்ர ஷெல்போன் நம்பரத் தேடியெடுத்து ராம்குமாருக்கு கோல் செய்தேன்.

மறுமுனையிலிருந்து "ஹலோ!" சொன்னான்.

"ராம்! இன்னைக்கு ஈவினிங் போஃர் தேர்ட்டிக்கு என்னை மீற்பண்ண லாமா..?

நான் கேட்டதும் அவன் "எஸ்" சொன்னான்

என்ர ஒபிசுக்கே அவன வரச் சொன்னேன்.

என்ர வேர்க்க முடிச்சேன். ற்ரென் மினிட்ஸ்க்கு முன்னதா வாசலில நின்றேன். அவன் யமஹாவில வந்திறங்கினான். அவன அழைச்சிட்டு என்ர ரூமுக்கு வந்தேன். உட்காரச் சொன்னேன். இப்ப அவன்ர முகத்தக் கூர்ந்து பார்த்தேன். முகத்த வேறு பக்கமா திருப்ப முயன்றான்.

"மிஸ்ட ராம்! நீங்க ரொம்ப நல்லவர்ங்கிறது எனக்குத் தெரியும்! ஆனா.. ஏன்.. அப்படி நடந்துக்கிட்டீங்க,"

"என்ன சொல்றீங்க..?"

"நான் சொல்றது விளங்கல்லையா...? விளங்கும் படி சொல்றன். நிர்மலா என்ர ஒபிஸ்லதான் வேர்க் பண்றா. என்ர ஃ பெரண்ட் நிர்மலாங்கிறதும் உங்களுக் குத் தெரியும். நிர்மலா உங்கமேல உசிரையே வெச்சிருக்கிறா. காதல்ங்கி றது ரொம்பவம் புனிதமானது. சீதனம் அதுயிதுன்னு கேட்டு அசிங்கப்படுத்திட் டீங்க!"

அவன் இயல்பாகச் சொன்னான். அவன்ர பதில் எனக்குப் புடிக்கல்ல. எனக்குக் கோபம் வந்ததுன்னாலும் நான் காட்டிக்கல்ல.

"நீங்க கேட்டா என்ன...? உங்க பேரண்ஸ் கேட்டா என்ன? ரண்டும் ஒண்ணுதானே!"

"எல்லாப்பேரன்சும் சீதனம் கேட்கிறது நிஜந்தான் என்னைத்தப்பாப் புரிந்துக் கிட்டு என்னோடு பேசாமல் அவசரா நிர்மலா வந்துட்டா.. நானும் பலமுறை போஃன்ல ட்ரை பண்ணினேன்.... ஆனால் பேச மறுக்கிறா..."

அவன் கவலயோட சொன்னான். அவன்ர கவல, ஏக்கம் எனக்குச் சந்தோசத்தக் கொடுத்தது.

"அப்ப என்ன சொல்லவர்றீங்க..?"

"நிர்மலாவை நான் இழக்கிறதுக்குத் தயாரில்ல. என்ர லைஃப்ல டௌரி எங்கிற பேச்சுக்கே இடமில்ல. என்ர பேரன்ச சம்மதிக்க வைக்கிறது எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொம்ப ஈஸி. அவங்க என் மேல உயிரையே வைச்சிருக்காங்க. நிர்மலா வோட நான் கதைக்கணும்!"

அவன் கெஞ்சுவதைப் பார்த்தப்ப ராம்குமார் ஜென்ரில்மேன்னு தோணுச்சி எனக்கு.

"ச்சே..! இவனப் போய் தப்பா நெனைச்சிட்டேனே!"

மனசுக்குள்ள வருந்தினேன்.

டெலிபோன் எடுத்து நிர்மலாவ என்ர ரூமுக்கு வரும்படி அழைச்சேன். ராம்குமார் முகத்தில சந்தோசம் தெரிஞ்சது. அவன்ர படபடப்பு இன்னமும் குறையல்ல. நிர்மலா என்ர ரூமுக்குள்ள வந்தாள். ராம் குமாரைப் பார்த்ததும் திரும்பிப்போக முயன்றாள்.

"நிரு! டோன்ற் கோ! ஐ வோன்ற் ஸ்பீக் வித்யூ!"

நான் கோபத்தோட சொன்னேன். அவள் விருப்பமில்லாம என்ர பக்கத்தில வந்து அமர்ந்தாள்.

நடந்ததை அவளுக்கு விளங்கும்படி நான் சொன்னேன்.

அவள்ர கவலய, சந்தேகத்தப் போக்கினேன்.

அவங்க ரண்டு பேரையம் மனம் அறிந்து பேசவெச்சேன்.

"ரொம்பத் தைங்ஸ்"

இருவரும் சொன்னார்கள். எனக்கு மகிழ்ச்சியா இருந்திச்சி.

ராம்குமாரும், நிர்மலாவும் போய் விட்டார்கள்.

நான் இப்ப வீட்டுக்குப் புறப்பட்டேன். என்னைப் பத்திய கவல எனக்கிருந் தாலும் ராம்குமாரையும் நிர்மலாவை யும் சேர்த்து வெச்சதில என்ர மனசுலே லேசாக இருந்துச்சு வீட்டுக்குள் சென்று ட்ரெஸ் மாத்தி, பாத்ரூமுக்குச் சென்று முகம் கழுவிட்டு ரூமுக்கு வந்தேன். அம்மா தேனீரோடு ரூமுக்கு வந்தாள். ஆவி பறக்கிற அரித தேனீரை வாங்கி நான் குடிக்கிறப்ப...

"ஒரு நல்ல... இடமா... வந்திருக்கு.. நாளைக்கே... பொண்ணு பாக்க வர்றாங்களாம்... பு..வனா... நீ.."

அம்மா..! நீ தயங்காம எதுவும் என்னோட கதைக்கலாம். ஏன்னா... நீ என்னைப் பெத்து வளர்த்து ஆளாக் கின தெய்வம். நீ விரும்புறத எங்கிட்டப் பேசுறதுக்கு உனக்கு உரிமையாயி ருக்கும்மா.."

நான் அப்படிச் சொன்னதும் அம்மா முகத்தல மகிழ்ச்சி தெரிஞ்சது.

"அப்ப நாளைக்கு வரச் சொல்லட்டா..?

அம்மா முடிவச் சொன்னாள்.

"இனிமே வேணாம்மா... நான் யாரை யும் கட்டிக்கிறதாயில்ல... என்னை மன்னிச்சிடும்மா."

நான் கண்ணீரோடு சொன்னேன்.

"எ..ன்..ன்..ன.. சொல்..றாய்... புவ..னா?"

"நான் மெரி பண்ணிக்கிட்டுப் போயிட்டா உன்னை யாரும்மா பாத்துக்குவாங்க..?"

நான் சொன்னதும் என்னைக் கட்டிப் புடிச்சி அழுதாள் அம்மா.

## முகங் காட்டா முத்தம்மா




பொம்பிளைப் புள்ளைங்க....பாரி மன்னன் இறந்த பின்பு பாரியின் இந்த இரண்டு பொம்பிளைப் புள்ளைங்களின் மே/பா (C/O) ஔவையாரிடம் விடப்பட் டது. ஔவையார் என்ன செஞ்சார் தெரியுமா? ஒங்களுக்கு............... ஒரு மன்னனுக்கே இரண்டு பொம்புளைங் களையும் ஒப்படைச்சிட்டாரு.... ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற உயிர்மூச்சை உள்ளடக்கி அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற தத்துவத்தை முதலில் சிந்தித்து அதனைத்தவற விட்டாள் ஔவை. இதனால் அவள் ஒரு ஆணாதிக்கவாதி என்பதில் ஐயமில்லை. இந்தக் கருத்தை நீங்கள் ஆமோதிக்கவில்லைன்னா எப்போதும் நான் முகம்காட்டப் போவதில்லை.

**பெண்கள் மனதே அப்படித்தான்.....** எனக்கு இரண்டு பொம்பி ளைப் பிள்ளைங்க. 2 ஆம்பிளைப் பிள்ளை ங்க..... பொம்பிளைப் பிள்ளைங்க ரொம்ப வடிவு. இவர்களை கட்டிக்கிற வங்க.... சீதனம் கேட்டா நான் கொடுக்கப்போறதில்லை. கொடுக்கிறதுக் கும் இல்லை தான் ...

ஆம்பிளைப்பிள்ளைங்க வெசயத்திலை வாறவ கட்டாயம் வீடு, நகை, சீதனம், இனாம் எண்டு கை நிறையக் கொடுக்கத்தான் வேணும் . இது தான் இப்ப இருக்கிற எழுதாச் சட்டம்! புரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விழல் சிரிப்பு

குடிசனம் கூடி வருவதை இட்டு ரொம்பக் கவலையாய் இருக்கு அண்ணே!
எனக்கு வேறு கவலை! வாகனங்கள் கூடி வீறதாலை,
எனது வாகனத்தை நிற்பாட்ட இடம் இல்லாமல் போயிடுமோ என்ற கவலை.


- நித்திப்பன் -

பானையில் இருந்த ஒரு இருநூறு ரூபாய்த் தாளைக் காணல்ல அண்ணே!
நீல நிறத்திலை ஒரு இருநூறு ரூபாய்த் தாளை இப்போது காணல்லே அண்ணே!
விசாரணைக் கமிசனிலை போய்ச் சொல்லுங்களே...!



# ஆசிரியர் பிரம்மாவா ருத்திரரா

நா.பார்த்திபன்



மாணவர்கள் இடைவிலக எல்லாக்காலத்திலும் ஆசிரியர்கள் காரணமாயிருந்துள்ளார்கள். இருப்பினும் அந்தக்காலத்தில் அண்ணளவாக மூன்று தசாப்த காலத்திற்கு முன்னர் இது அதிகளவில் நிகழ்ந்துள்ளது என்பதை குறிப்பிட்டே ஆக வேண்டும். இன்று பாடசாலைக்கு வந்த பின்னர் தான் பிரம்பு எடுத்து அடிப்பார்கள் ஆசிரியர்கள். அன்று பாடசாலைக்கு வரும்போதே வீட்டிலிருந்து பிரம்போடே வந்துள்ளார்கள் ஆசிரியர்கள். வாத்தியார், சட்டம்பியார், என்றெல்லாம் விசேடமாக அழைக்கப்பட்டார்கள் அவர்கள். மாடாட்டுக்கு அடிப்பது போல, கள்ளருக்க அடிப்பது போல அடித்துத் திருத்த வேண்டுமென்று அவர்கள் நினைத்திருப்பார்கள். போலிருக்கிறது. வேட்டியும் நஷனலும் அணிந்து, கையில் பிரம்போடு அவர்கள் வலம் வருவதைப் பார்த்தே அநேகமான மாணவர்கள் பள்ளிக்கு கள்ளம் போடுபவர்களாக இருந்தார்கள். பள்ளிக்கூடம் போனாலும் பாடத்தில் கேள்விகள் கேட்டு அடி. அனேகமான ஆசிரியர்கள் அடி தான் படிப்பிக்க உகந்த வழி என்று நம்பியிருப்பார்கள் போலிருக்கின்றது. அடி...அடி...எதற்கும் அடி தான் மருந்து.

போதாக்குறைக்கு, அடியாத மாடு படியாது, மாடு படிக்கிறது என்பது வேறு அர்த்தம். ஆனால் அன்றைய ஆசிரியர்களுக்கு மாணவர்கள் மாடுகள் என்று நினைத்து படிக்கிறதுக்கு இந்த மாடுகளுக்கு அடிச்சாத்தான் சரி வரும் என்று அர்த்தப்படுத்திக் கொண்டு விளாசித்தள்ளுவதுண்டு. மேலும் கல்வி என்னும் பயிருக்கு தண்ணீர் என்னும் மழை வேண்டுமெனவும் கூறிக்கொள்வதுண்டு. விளைவு பள்ளிக்கு போய் கண்ணீர் மழை பெய்வது தான் மாணவர்களின் தலைவிதியாய் போனது. இன்னம் மறதிக்கு மருந்து மாஸ்டர்ர பிரம்பு என்றொரு வாக்கு. எழுபது, எண்பது காலங்களில் கிராமப்புற பாடசாலைகளில் ஆசிரியர்களின் அட்டகாசங்களைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளலாமென்ற நினைப்பில் இக்கட்டுரை எழுதப்படுகின்றது. அதீத அக்கறை தான் காரணமென்றாலும் ஆறாத ரணங்களாய் அலை மாறிய சம்பவங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

வீரகத்தி வாத்தியாரின் தோற்றத்தை இப்ப நினைத்தாலும் வயிற்றைக் கலக்கும், ஆறடி உயரமும் அதற்கேற்ற பருமனும் தடித்த புருவங்களும் மீசையுமாய் அவர் நடந்து வருவதைப் பார்க்கும் போது யாருக்கும், பொலிஸைப் பார்த்த திருடனைப் போல ஓர் உணர்வு தோன்றும். போதாக்குறைக்கு, மேலும் கீழுமான ஒரு முறைப்பான பார்வை " டேய் நீ வல்லிபுரத்தின்ரை மகன் தானே" என்று கேட்டு உன்ரை அப்பனையும் எனக்குத் தெரியுமென முன் கூட்டியே ஒரு வெருட்டல் "ஓம்" என்று சொல்லவும் வார்த்தை வாராது தொண்டைக்குள் குரல் அடைத்துப் போக ஒரு தலையாட்டல் எல்லா ஆசிரியர்களும் ஊரவர்களாக இருப்ப தால் குடும்ப விபரங்களும் சில வேளை உறவு முறைகளும் கூடத் தெரிந்திருக்கும்.


ஒருநாள் தமிழ்ப்பாடம். வீரகத்தி வாத்தியார் வகுப்புக்குள் நுழைந்து விட்டார். வாக்குண்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல மனமுண்டாம் என்ற பாடலை பாடமாக்கிக் கொண்டு வரச் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. முதல் நாள் அரவும் பலமுறை சொல்லிப் பார்த்து. காலையும் எழுந்து நாலைந்து முறை சொல்லிப் பார்த்தும், வகுப்புத் தொடங்க முன்னர் பக்கத்திலிருந்த மாணவர்களி டம் சொல்லிக்காட்டியும் தயாராகத்தான் எல்லோரும் இருந்தோம். வீரகத்தி வாத்தியார் வந்ததும் "எல்லோருக்கும் பாட்டுப் பாடமோ" என்று கேட்டார். "ஓம். ஓமோம்" என்று எல்லோரும் கோர லாக சொல்லி கொண்டோம். அவர் ஒவ்வொருவரது முகத்தை பார்த்துக் கொண்டு வகுப்பைச் சுற்றி வலம் வருகின்றார். பின் வகுப்பின் முன் வந்து "உனக்குப் பாடமோ?" என்று கேட்க, அவன் "ஓம் கரைந்த பாடம்" என்று கூறுகிறான். அப்படியே முகங் களை அளந்து பார்த்துக் கொண்டு வந்தவர். "கணேசா நீ சொல்லு" என்று கூறுகின்றார். அவனும் ஆயத்தமாகத் தான் இருந்தான் இருந்தாலும் வாத்தியார் கேட்டவுடன் சற்றுப் பதற்றமடைந்தான். இனி வாத்தியார் "சொல்" என்று கட்டளை இட்டதால் வாக்குண்டாம் நல்ல குணம்டாம் என்று பதட்டத்தில் கூறிவிட்டான். முதற் கோணல் முற்றிலும் கோணல் என்று சொல்வார்களே. அது வேறு எந்தக் காரியத்திலும் எப்படியோ தெரிய வில்லை. ஆனால் ஆசிரியர் கேட்டு. முதலில் தவறியதோ பின்னர் தொடர்ந்தும் தவறும் தான்.

'வா....வா....நீ பொய் தானே சொன்னனி "என்று கூறி அவனை வகுப்பின் முன்னுக்கு வரச்சொல்ல, கணேசனுக்கு இன்று முழுவியளம் சரியில்லை. என்பது விளக்கிக் கொண்டது. அவன் பயந்து முன்னுக் குச் செல்ல, அவனுக்கு உதவ முடியாமல் மற்றவர்கள் பார்த்துக் கொண்டிருக்க "ஆ, இப்ப சொல்லு" என்று கூறுவதோடு வீரகத்தி வாத்தி யாரின் பிரம்பு ஆட்டம் போடுகிறது. கணேசன் எங்களைப் பாரப்பதும், வீரகத்தி வாத்தியாரை பார்ப்பதுதும். வீரகத்தி வாத்தியாரைப் பார்ப்பதுமாக நின்றான். "சொல்லன்ரா " என்று பிரம்பை ஓங்கி அடிப்பது போல பாவனை செய்கிறார் வாத்தியார். கணேசன் மீண்டும் 'வாக்குண்டாம் நல்ல குணம்டாம் " என்கிறான். "ஓ உனக்கு நல்ல குண்டு தான் தேவை" என்று கூறி, அவனை மேசைக்கு கீழ் குனிந்து கழுத்தைக் கொடுக்கச் சொல்லி பின் பக்கத்தில் ஓங்கி அடிக்கிறார் வாத்தியார். ஒன்று, இரண்டு.... மூன்றாவது அடிக்குமுன்னர் கணேசன் மேசைக்குள்ளால நுழை ந்து மறுபக்கம் வந்து வகுப்புக்கு வெளியே ஓடிவிட்டான். ஓடியவன் வெப்பியாரம் தாங்காமல் "நீயும் உன்ரை அடியும், நீ வா, உன்னை வெளியில கவனிக்கிறன்" என்று சொல்லியபடி ஓடிவிட்டான். அன்று ஓடியவன் தான் அதற்குப்பிறகு அந்தப்பள்ளிக்கூடப் பக்கமில்லை .....வேறு எந்தப் பள்ளிக்கூடத்திற்கும் போகவில்லை. வீரகத்தி வாத்தியாருக் கென்ன, ஒரு கணேசன் ஓடினால், யோகன் இல்லையோ, சந்திரன் இல்லையோ....அவரது பிரம்புக்கு இரையாக....



ஆனால், கணேசன் இன்று பெரிய புறோக்கராகி, வான்,ரக்டர், காணி, வீடு....என்று பெரிய பணக்காரன். அவனுக்குப் பின்னால் நாலைந்து உதவிப் புறோக்கர்கள். மிகவும் கெட்டித்தனமாக உழைத்து முன்னேறிவிட்டான். இன்னும் எனக்குள்ளே இருந்து கொண்டிருக்கும் கேள்வி, வீரகத்தி வாத்தியார் குறிப்பிட்டது போல உதுகள் மொக்குகள், ஒரு இழவும் விளங்காது, எருமைமாடுகள், சோம்பறியாடுகள்..... என்பது உண்மையா....? சரியா.....?

முருகேசு மாஸ்டர் ஆங்கிலம் படிப்பிப்பார். ஆங்கில ஆசிரியர் என்பதால் வெள்ளைக்காரன் போல (அந்தக்காலத்தில் அப்படித்தான் கூறுவார்கள்) வெளிக்கிட்டு வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அவர் கையில் பிரம்பில்லை. அப்பாடா நிம்மதி என்று நினைக்கக் கூடாது. அவர் குட்டுகின்ற குட்டும், நுள்ளு கின்ற நுள்ளும் ....... உயிர் போகும். போதாக்குறைக்கு பக்கத்தி லுள்ள மாணவரைக் குட்டச் சொல்லு வார். அன்றும் அப்படித்தான் அவர் படிப்பித்துக்கொண்டிருந்து விட்டு "இங்கிலீ சுக்கு ஸ்பெலிங் பண்ணு பார்ப்பம்"என்று மூர்த்தியைக் கேட்டார். மூரத்தி இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மூர்த்தி எழுந்து எதனையும் பார்க்காது INGL...என்று சொல்லத் தொடங்க ...உனக்கு I.N.G...இது தான் விடிய விடிய ராமன் கதை, விடிஞ்செழும்ப ராமன் சீதைக்கு என்ன முறை என்று கேட்க நல்ல நித்திரை கொண்டவன் எழும்பி முழிச்சானாம் என்று கூறியபடி மூர்த்திக்கு பக்கத்திலிருந்த தவராசாவி டம் "குட்டடா அவன்ர தலையில்" என்று கூறினார்.சினேகிதனின் தலையில் எப்படி இறுக்கிக் குட்டுவது என நினைத்த தவராசா மெல்லக் குட்டினான். "டேய் உனக்கு குட்டத் தெரியாதோ சத்தம் கேட்க வேணுமென்று" முருகேசு மாஸ்டர் கூறுகிறார்.

தவராசா மீண்டும் மெல்லமா கக் குட்டினான். "இவனுக்குக் குட்டத் தெரியாது" என்று கூறிக்கொண்டு வந்த மாஸ்டர், தவராசாவின் தலையில் தலையில் சத்தம் கேட்கும் வண்ணம் இறுக்கி குட்டிவிட்டார். தலையில் கை வைத்து அம்மா என்று குழறிய படி, அழுத கண்களோடு தவராசா முருகேசு மாஸ்டரின் வகுப்புக்கு முன் செல்ல பின்பன்னம் வகுப்பறை வாசலில் நின்று கொண்டு " உனக்கு இங்கிலீஸ் சொல்லக் கொடுக்கத்தான் விட்டிருக்கு எப்படி குட்டுவது என்று சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை" என்று பேசியபடி வெளியே ஓடிவிட்டான். "போடா,போடா,புண் ணுக் கு வருத்தமோ மருந்துக்கு வருத்தமோ" என்று முருகேசு மாஸ்டர் கேட்டது இப்பவும் காதில் ஒலிக்குது. ஆனால் தவராசா இன்று பெரிய புள்ளி. வசதிகள், வாய்ப்புக்களோடு சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கிறான். சமூக சேவையும், சகலருக்கும் பயனுள்ளவ னாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கி றான். அன்று அவனைப் பாடசா லையை விட்டு ஓடச் செய்த முருகேசு மாஸ்டரின் செயற்பாடுகள் பொருத்தமா னதா?

வேலுப்பிள்ளை சட்டம்பியார் அடித்தற்கு , தங்கராசாவின் தந்தை பொலிஸில் முறைப்பாடு செய்ய பொலிஸ் பாடசாலைக்கு வந்து விசாரனை நடத்திய போது சின்னப்பிள்ளை ரீச்சரும் நின்று கதைத்ததால் பார்த்துக் கொண்ட சண்முகன் வீட்டிலே போய், சின்னப்பிள்ளை ரீச்சரைத் தேடித்தான் பொலிஸ் வந்தது என்று கூறிவிட்டான். சண்முகனின் தாய் பாடசாலை விட்டுச் சென்று கொண்டிருந்த சின்னப்பிள்ளை ரீச்சரிடம் "நீ ஒரு பெண்ணாய்ப் பிறந்து நீ, உப்பிடி அடிக்கிறதே, பொலிஸ் தேடி வாறளவுக்கு அடிக்கிறதே" என்று இலவசமாக புத்தி சொல்லிவிட்டார். அடுத்த நாள் வகுப்பில் சின்னப்பிள்ளை ரீச்சரின் பாடத்தின் போது , அவர் "மாணவர்கள் மூன்று விதம். அதில பாருங்கோ பிள்ளைகள் கபட மாணவர் கள் மாணாக்கர் என்று ஒரு கூட்ட முண்டு. அது. அவன் சண்முகன் போல உள்ள கழிசடையள் தான் " என்று கூறினார். ரீச்சர், அப்படி கூறும் போது ரீச்சருக்காகச் சிரிக்கும் ஒரு கூட்டம் சிரிச்சு, கபட மாணாக்கன் என்பதை பட்டப் பெயராகக் கூப்பிடத் தொடங்க, அன்று பள்ளிக் கூடத்தை விட்டுப் போனவன் தான் சண்முகன். நாவினால் சுட்டவடு ...சூடு பட்டால் தான் தெரியும் அதன் வலி.

சண்முகனின் நிலை இன்று சொல்லுந்தரமன்று. சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய். இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்று கூறிய பாரதியின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த மாணாக்கன். ஆக, சின்னப் பிள்ளை ரீச்சரின் கோபமும், குற்றப் பத்திரிகைச் சமர்ப்பிப்பும் இன்று என்னவாகிப் போனதோ?

மொத்தத்தில், அன்றைய ஆசிரியர் ஒரு சிலரால் இடைவிலக்கப் பட்ட மாணாக்கர் இன்று வாழ்கின்ற வாழ்க்கையைப் பார்க்கும் போது ஆசிரியத்துவம் என்பது குற்றம் களைகின்ற, குற்றமற்றவர்களால் செய்யப்படும். உயர்ந்த பணிதானா என்று கேட்கத் தோன்றுகிறது. இன்று



விலை கூடினது தான் கூடினம்.... அடுத்த வீட்டு அண்ணாச்சி கூட நம்மளைத் தேங்காய்ச்சி எண்ணு சொல்ல ஆரம்பிச்சிட்டாங்க.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட சுமை தூக்கும் பிள்ளைகளை பயிற்றுவிப்பது போல, ஒருவர் சொன்னது போல UKG ,LKG என்று சுமைகள் கூடிய கல்வி போல கல்வி மாறக் கூடாது.

ஆசிரியர்கள் தொடர் பான நகைச்சுவை துணுக்குகள், கேலிப் பேச்சுக்களும் பாதிக்கப்பட்ட மாணவர் களால் தான் உருவாக்கப் படுகின்றன போலும் .இதை உணர வேண்டும் ஆசிரியர்கள். அந்த ஆசிரியரால் தான் நான் இன்று இந்த நிலையில் இருக்கிறன் என்று ஒரு மாணவன் சொல்லும் போது எந்த நிலையில் மாணவன் நிற்கிறானோ அந்த நிலைக்கு ஆசிரியர் பொறுப்புக் கூற வேண்டும். அந்த நிலைக்கு ஆசிரி யர்கள் தலை நிமிர்ந்து நிற்பதா, தலை கவிழ்ந்து போவதா என்பது ஆசிரிய னின் கைகளில் தானே உள்ளது. நீங்கள் ஆக்குகின்ற பிரம்மாவா அழிக்கின்ற ருத்திரா......

# சொல்லுங்க அண்ணை



ஒரு இலக்கியவாதியுடன் ஒரு நாள் வீதியில் கதைத்துக் கொண் டிருந்தேன்.

பணம் இருந்தாலும் வாழ்க்கையில் பலருக்கு அமைதி இல்லை.

பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு பெறுக என வாழ்த்தினா லும் அவர்களால் அவ்வாறு வாழ முடியவில்லை. கதை தொடரந்தது.

நண்பர் சொன்னார், 'ஔவையார் தசரதச் சக்கரவர்த்தி ஆகியோர் சொன்னதை நினைத்துக் கொண்டால் நாம் பிரச்சினை யின்றி வாழலாம்.

'எப்பிடிங்க...??

எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது என ஔவையார் சொன்னார். அதன்படி சென்றால் வெற்றி நிச்சயம்! நாங்கள் பல தொழில்கள் செய்து வெற்றியடையப் பார்க்கிறோம். ஒரே யொரு தொழிலைச் செய்து வந்தால் வெற்றி நிச்சயம்!

தசரதச் சக்கரவர்த்தி கைகேயியைப் பார்த்துக் கேட்டான். 'மற்றது ஒன்று மற என்று!

எந்தக் கட்டத்தில்? இராம னைக் காடேகக் கைகேயி கேட்கக் கூடாது என்ற கட்டம் தான் தம்பி...

'அதை இப்ப ஏன் சொல்றே'

'அந்த ஒன்றை மற' என்பது தசரதன் வாக்கியமாகக் கருதக்கூடாது. நாம் பலர் மது அருந்துகிறோம் கொள்ளையடிக்கிறோம். வாழ்க்கையில் எமது குடும் பத்தை மறந்து வறுமையில் வாட விடுகின்றோம். கொலை செய்யப் போய் நாங்களே மரணதண்ட னைக்கு உள்ளாகிறோம். இப்படி பல வாழ்க்கையில் நாம் நிம்மதியாக வாழ வேண்டு மெனில் நம்மில் இருக்கும் அந்தக் கெட்ட (1)ஐ மறந்து விட வேண்டும்!

அண்ணே நல்லாச் சொன்னீங்க.... இன்றில் இருந்து சிகரெட் குடிப்பதை நிற்பாட்டி விடுகிறன்.

- நோக்கண்ணா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமிருக்க பயமேன்



# முருகன் அருளால் வெற்றி நிச்சயம்!
# கிழக்கிழங்கையில் சக்திமிக்க வசியம்

கந்தசஸ்டி கவசம் ஒரு நாளைக்கு 36 தடவை 6 நாட்களுக்கு 216 தரம் ஓதி உறுதிப்படுத்திய கந்தர் சர்வலோக வசிய மந்திரம் யந்திரத்துக்கு 1008 உருவேற்றி பக்குவப்படுத்திய யந்திரங்கள் யந்திரங்கள் கைவசம் உள்ளது.

இந்த இயந்திரத்தைச் சுரையில் அடைத்து நாடாக் கயிற்றில் கோர்த்து வலது கையில் பிடித்து கிழக்கு, வடக்காகாவோ வடக்கு தெற்காகவோ ஆடச் சொன்னால் ஆடும் நிற்கச் சொல்லிவிட்டு வட்டமாகச் சுற்றச் சொல்லுங்கள் சுற்றினை நிற்கச் சொல்லுங்கள் நிற்கச் சொல்லுங்கள் நிற்கும் இவ்வாறான சர்வசக்தி மிக்க இயந்திரத்தை பரீட்சித்தப் பார்த்து வாந்தி வாழ்வில் ஒளி மயமான எதிஜர்காலத்தை ஏற்படுத்துங்கள்!



யாருக்கு? எதற்காக?

இந்த இயந்திரத்தை தம் வசம் வைத்துக் கொள்வதால் விரும்பிய தொழில் பெற திருமணத்தடை நீங்க மிக நீண்ட நாட்கள் தடைப்பட்ட கருமங்கள் கை கூடி வர மனோவியாதி தீர்ந்து, மனமகிழ்ச்சி வாங்கி சத்துரு பயம் நீங்கி சத்துருக்கள் கிட்ட அணுகாமல் இருக்க இந்த இயந்திரம் வழி வகை செய்யும்!

இந்த இயந்திரம் தீட்டு நீக்கிச் செய்யப்பட்டது. எந்த நிலையிலும் சிறிதாக முறிசு ஏற்படாது என்பதை உறுதிப்படுத்துகின்றோம். இதனைத் தபால் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



## தெய்வங்களில் வலிமை மிக்கவர் முருகப் பெருமான்!

*கிழக்கிலங்கையின் பிரசித்தி பெற்ற மாந்தீரிகச் சக்கரவர்த்தி முருகுப்பிள்ளை*

*தொடர்புகள் :-*

சுவாமி விசுவலிங்கம் முருகுப்பிள்ளை

(ஆராய்ச்சியார்) பனங்காடு, அக்கரைப்பற்று

தொ.பே: 067 7914512, 077 7857484, 071 7345633



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெர்னாட்ஷாவின் நகைச்சுவைகள்!

அருணா சுப்ரமணியம்

வேடிக்கையாகவும், விளையாகவும் பளிச்சென்று பதிலளிப்பதில் பெர்னாட்ஷாவை யாரும் மிஞ்ச முடியாது. ஏலவே ஷாவின் அவதாரம், நாடகங்களின் தாற்பரியங்கள், நோபல் பரிசை பெற மறுத்தமை, நாடகங்களில் காணும் புதுமை, ஷாவின் நகைச் சுவை போன்றவற்றை சுவைத்திரள் வாசகர்கள் விரிவாக அறிந்து கொள்வது இங்கு உசிதமாகும்.

ஆங்கில மொழியில் சிறந்த நாடகங்கள் எழுதிய ஜோர்ஜ் பெர்னாட்ஷா அயர்லாந்துக்காரர்களில் தலை சிறந்தவர். அயர்டப்ளின் நகரில் இருபத்தாறு ஜூலை ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தாறில் பிறந்தார்.



தாயின் பலம் பெற்ற இசை அறிவு லண்டனில் 'திஸ்டார்' என்ற பத்திரிகையில் சங்கீத விமர்சகராகப் பணியாற்ற உதவியது. ஷா சங்கீத விமர்சகராகப் பணியாற்றியதுடன் "தி சண்டே ரிவ்யூ" (THE SUNDAY REVIEW) என்ற ஆங்கில இதழில் நாடகங்கள் பற்றிய விமர்சனங்களையும் எழுதி வந்தார். அவர் எழுதிய விமர்சனங்கள் ஐந்து தசாப்த காலங்களுக்குப்பிறகு கூட போற்றத்தக்க சிறந்த விமர்சனங்களாக அமைந்தனவாம்.

ஷா பின்னர் தானே நாடகங்களை எழுதத் தலைப்பட்டார். இசையாளரின் உணர்ச்சி அவரிடமிருந்ததால் நாடக வசனத்தைக் கேட்பவர்களுக்கு இன்பம் அளிக்குமாறும் அமைத்து எழுதினார். இக்காரணத்தால் தான் எவ்வளவு நீண்ட உரையாடல்களும் வெறுப்புத் தட்டாமல் கேட்பவர்களுடைய கவனத்தைக் கவர்ந்தன.

லண்டனில் தங்கியிருந்த ஷாவிற்கு எழுத்தையே நம்பி பிழைப்பது கஷ்டமாக இருந்தது. இதனால் பத்தாண்டு காலம் அவருடைய அன்னையின் வருமானத்திலே பிழைக்க நேர்ந்தது. இக்கால கட்டத்தில் தான் ஷா தனது எதிர்காலவாழ்க்கைக் கட்டடத்தின் அஸ்திவாரத்தை அமைத்துக் கொள்ள தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ளலானார். அரசியல் கழகங்களில் சேர்ந்தும், பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றியும் வந்தார்.

ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்காம் ஆண்டு லண்டன் மாநகரில் அமெரிக்க பொருளாதார நிபுணர் 'முன்னேற்றமும் ஏழ்மையும்' என்ற நூலின் ஆசிரியர் ஹென்றி ஜோர்ஜ் என்பவர் பேசிய கூட்டத்திற்குச் சென்றிருந்தார். அவருடைய பேச்சு ஷாவை பொதுவுடமைவாதியாக மாற்றியது. இதனால் முதலாளித்துவ எதிர்ப்பு கழகமான பேபியின் கிளப்பில் ஷா இணைந்து கொண்டார். முதலாளித்துவத்தைப் போக்க வேண்டும் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேபியின் கழகம் விரும்பியது. கார்ல் மார்க்ஸின் "தாஸ் காபிடல்" என்ற நூலை ஷா பிரெஞ்சு மொழியில் படித்தார். முதலாளிகளின் ஆதிக்கம் பெற்ற, நாகரீகத்தின் மேலுள்ள அவருடைய பொறுப்பு இன்னும் அதிகரித்தது. அந்நேரம் இந்திய சுதந்திரத்திற்கு ஆதரவு அளித்து வந்த அன்னி பெஸன்ட் அம்மையாரை ஷா சந்தித்தார். ஷாவின் விசிறியாக விளங்கிய இந்த அம்மையார் பெர்னாட்ஷாவை பேபியின் கழகத்தில் உறுப்பினராக்கினார்.

பெர்னாட் ஷாவின் நடவடிக்கைகள் திடமான எண்ணங்கள் ஆஸ்திகவாதியைப் போலவே இருந்தன. அவர் வாழ்க்கையில் புனிதத் தன்மை, தூய்மையான வாழ்வு, மிருகங்களிடத்தே அன்பு செலுத்துதல், புலால் உண்ணாமை, மது அருந்தாத நிலை, புகை பிடிக்காமை முதலியன அவருடைய மதக்கோட்பாடுகளை வெளிப்படுத்தின.

பெர்னாட் ஷாவிற்கு நாற்பத்து இரண்டாக இருக்கும் போது நாடகங்களை எழுத ஆரம்பித்தார். "மனைவி இழந்தோர் இல்லங்கள்" என்ற நாடகத்தை லண்டனில் அரங்கேற்றினார். ஆயி ரத்து தொள்ளாயிரத்து நான்காம் ஆண்டு முதல் ஆயிரத்து தொள்ளாயிரத்து ஏழாம் ஆண்டுவரை ஷாவின் பதினாறு நாடகங்கள் எழுநூற்றுப் பதினொரு தடவை நடத்தப்பட்டன. "ஜோன் புல்லின் மற்றொரு தீவு" என்ற அயர்லாந்து அரசியல் பற்றிய நகைச் சுவை நாடகம் பிரசித்தி பெற்றது. "மனிதனும் மேம்பட்ட மனிதனும்" என்ற நாடகம் லண்டன் கோர்ட் தியேட்டரில் நடைபெற்றது.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐந்தாம் ஆண்டு தொடக்கம் பெர்னாட்ஷா உலகப்புகழ்பெற்ற நாடகாசிரியராக விளங்கினார். ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து மூன்றில் அவர் எழுதிய 'செயின்ட் ஜோன்' நாடகம் ஷாவின் புகழை உயர்த்தியது. ஆனால் 'மெதுசலாவுக்கு மீண்டும்' என்ற நாடகமே மிகச்சிறந்த நாடகமாக ஷா கருதினார். ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தைந்தாம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு ஷாவுக்கு கிடைத்தது. இருபத்தொன்பதில் "ஆப்பிள் வண்டி" என்ற நாடகத்தை எழுதினார்.

கிடைப்பதற்கரிய நோபல் பரிசை ஷா முதலில் ஏற்க மறுத்து விட்டார். நோபல் பரிசை ஏற்கத்தான் வேண்டும் என்று அவரது விசிறிகள் வரிந்து கட்டி நின்றார்கள். ஷாவுக்கு வேறு வழியில்லை. பரிசை ஏற்றார் எண்ணாயிரம் பவுண் அவருக்கு கிடைத்தது. "நீரில் மூழ்கியவன் மூச்சுத்திணறி கரையேறிய பிறகு அவனுக்கு பாதுகாப்பு 'பெல்டடை' எறிகிற மாதிரி இந்தப்பணம்" என்ற ஏளனமாக கலை, இலக்கிய வளர்ச்சிக்காக வழங்கிவிட்டார்.

பெர்னாட் ஷாவைக் குறித்துப் பலர் பலவிதமாகக் கூறினார்கள். ஷாவை விட ஒரு மேதாவி கிடையாது என்று ஒரு சாரார் கூறினார். அவர் ஒரு கோமாளி! உலகத்திற்கு மாறாக ஏதாவது சொல்லிச் சிரிக்க வைக்கும் விகடன் என்றனர். சிலர் மற்றவர்கள் காலால் நடந்தால் இவர் தலையால் நடப்பார்! என்றும் கூறினர்.

இனி பெர்னாட்ஷாவின் நகைச் சுவை பற்றி சிறிது ஆராய்வோம்.

பெர்னாட்ஷாவிற்கு மலர்களின் மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்ட ஒருவர் அவர் வீட்டிற்குச் சென்றார். ஆனால் அங்கு பூக்களையோ, மலர் ஜாடிகளையோ காண முடியவில்லை வியப்படைந்த அவர் ஷாவை நோக்கி "உங்களுக்கு மலர்கள் மீது மிகுந்த பிரியம் என்றல்லவோ கேள்விப்பட்டேன்" என்றார்.

"ஆமாம் இல்லையென்று யார் சொன்னது? எனக்கு குழந்தைகள் மீதுதான் பிரியம் அதற்காக அவர்களின் தலையைக் கொய்து என் வீட்டு அலங்கார ஜாடிகளை அழகு செய்ய வேண்டுமென்பதில்லையே" என்றார்

ஷாவிடம் "நீங்கள் ஏன் குடியை வெறுக்கின்றீர்கள்? என்று ஒருவர் கேட்டார்.

"என் குடும்பத்தில் உள்ள முன்னோர் என் போல் பலருடைய பங்குகளையும் சேர்த்து தாங்களே குடித்து விட்டிருக்கிறார்கள். ஆகையால் எனக்கு அதில் பங்கு இல்லாமல் போயிற்று" என்று பதிலளித்தார்.

## தேங்காயின் சிந்தனை



முடியோடை மனிசன் போனாலும் எவரும் பார்க்கிறானில்லை யடி...
முடி இல்லாம நாம கிடந்தாலும் நம்மைத்தான் பார்க்கிறார்களடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேக்ஸ்பியரைப்பற்றி குறை கூறிக்கொண்டிருக்கும் பெர்னாட் ஷாவை மட்டம் தட்ட வேண்டும் என்ற நோக்கில் ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் அதில் ஷாவையும் பேச அழைத்திருந் தனர்.

ஷா நல்ல நகைச்சுவையுடன் கூறிக்கொண்டிருக்கும் பெர்னாட் ஷாவை மட்டம் தட்ட வேண்டும் என்ற நோக்கில் ஷேக்ஸ்பியரின் அபிமானி கள் அதில் ஷாவையும் பேச அழைத்தி ருந்தனர்.

ஷா நல்ல நகைச்சுவையுடன் தான் பேசினார் என்றாலும் வேண்டு மென்றே ஒருவரும் அவர் பேச்சிற்கு கைதட்டவில்லை. அத்துடன் தலைமை தாங்கியவரும் அவரைப் பற்றி கிண்டலாகப் பேசினார்.

ஷேக்ஸ்பியருக்காகச் சொற் பொழிவாற்ற வந்ததும் அவரது அபிமானிகள் கைதட்டி சிரிப்பொலி கிளப்பினர். ஷாவுக்கு சரியான மூக்கு டைப்பு என்று முணுமுணுத்தனர்.

பெர்னாட் ஷா மீண்டும் எழுந்து நின்று பேசினார். ஷேக்ஸ்பியர் அபிமானிகளே! நான் இப்போது பேசிய நகைச்சுவை பேச்சு சுவையாக இல்லை என்று குறை கூறப்படுகின் றது. "இப்போது நான் பேசியது என் சொந்த நகைச்சுவை அல்ல. ஷேக்ஸ்பி யரின் காலத்தில் நடந்தாகக் கூறப்படும் ஷேக்ஸ்பியரின் சொந்த நகைச்சுவை தான் அது. உங்களுக்கு சிரிப்பு வராததற்கு நான் பொறுப்பாளி அல்ல.

ஷேக்ஸ்பியர் அபிமானிகள் முகத்தில் ஈயாடவில்லை. பேரழகி ஒருத்தி பெர்னாட்ஷாவை மணக்க முன் வந்தாள். "நீங்கள் பேரறிஞர் நான் பேரழகி இருவருக்கும் பிறக்கப் போகின்ற குழந்தை உங்கள் அறிவும் எனது அழகும் நிறைந்திருக்குமல் லவா?" என்றாள் அவள்.

"யார் கண்டார்கள் ஒரு சமயம் உங்கள் அறிவும் என் அழகும் சேர்ந்து விட்டால்...?" என்று ஷா கூறியதும் அப்பெண்மணி பேசா மடந்தையாய் வந்த வழியே சென்றுவிட்டாள்.

இன்னொரு சமயம் மற்றொரு வடிவழகி ஒருத்தி ஷாவோடு பேசிக் கொண்டிருந்தாள். "மிஸ்டர் ஷா எனக்கு என்ன வயது இருக்கும் சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றார் கேலியாக. ஷா பதிலளித்தார்.

"உன் பல்லைப் பார்த்தால் பதினெட்டு வயது என்று கூறலாம். உன் கூந்தலைக்கண்டால் பத்தொன் பது வயதுக்கு மேல் இருக்க முடியாது. உன் உடலைப் பார்த்தால் பதினான்கு வயது போல் தெரிகின்றது"

'கடகட என்று சிரித்து பூரித்தாள்' அவள் "ஆக மொத்தம் எல்லாம் சேர்த்து ஐம்பத்தொரு வயதைக் காட்டுகிறது." என்றார் ஷா அலட்சியமாக.

பெர்னாட்ஷா ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். விருந்துக்குச் சென்றி ருந்தார் விருந்து முடிந்ததும் வயலின் வித்துவான் ஒருவரின் கச்சேரி நடந்தது. அதனைச் ஷா உட்காரந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

விருந்து வைத்த பெண்மணி அவர் பக்கம் வந்து "வித்துவானைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர் கள்?" என்று கேட்டார். "இவர் கச்சேரியைக் கேட்கும் கோது வின்சண்ட் சேர்ச்சில் ஒரு வயலின் வித்துவான் இல்லையே?' என்றாள். "இவர் மட்டும் என்னவாம்?" என்று கேட்டாரே ஷா ஒரு கணமும் தாமதியா மல்.

ஷாவைத் தமது வீட்டில் விருந்து சாப்பிட வரும்படி வேறு ஒரு ஸ்திரீ அழைத்தார். "திங்கட்கிழமை யன்று உங்களால் வர முடியுமா? என்று கேட்டார் அந்தப் பெண்மணி.

"மன்னிக்க வேண்டும் அன்று என் டாக்டரைப் பார்க்கப் போகின்றேன். "அப்படியானால் விருந்தைச் செவ் வாய்க்கிழமை வைத்துக் கொள்ள லாமே?"

"இல்லை என் நண்பர் ஒருவர் உடம்பு சுகமில்லாமல் இருக்கிறார். அன்று அவரைப் பார்க்கப்போக வேண்டும்." "அப்படியானால் கட்டாயம் புதன்கிழமை வருவீர்கள் இல்லையா?"

"அடடா அன்று நான் கிராமத் துக்கு வருவதாக வாக்களித்து இருக்கிறேன்." அந்த மாது அப்படியும் விடுகிற வழியாக இல்லை.

"சரி அப்பொழுது வியாழக் கிழமை விருந்தை வைத்துக்கொள்ள லாம்." அன்று என் நாடகம் ஒத்திகை நடக்கிறது. நான் அதற்க கண்டிப்பாகப் போக வேண்டும்." "சனிக்கிழமை?"

"அய்யோ, அன்று நான் ஒரு கலியாணத்திற்குப் போக வேண்டும்." அப்படியானால் கட்டாயம் ஞாயிற்றுக் கிழமை வைத்துக் கொள்வோம்."

பெர்னாட் ஷாவினால் பொறுக்க முடியவில்லை. ஞாயிற்றுக் கிழமை நான் விருந்துக்குச் செல்ல லாமா? விடலாமா, என்று பாதிரியாரிடம் கேட்க எண்ணியுள்ளேன் என்று அமைதியாகவே ஷாவிடமிருந்து அப்பெண்மணிக்கு பதில் கிடைத்தது.

ஒரு நாள் பெர்னாட்ஷா தம் வீட்டிற்கு வந்த விருந்தினருடன் சிறப்பாக பல விசயங்களைப்பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் அவர் பேச்சை அவருடைய மனைவி சிறிதும் அலட்சியம் செய்யாது தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந் தார். இதற்கான காரணத்தைப் பேச்சின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் அவர் மனைவியிடம் விருந்தினர் கேட்க, அவர் மனைவி, தான் இவருடைய பேச்சை ஆயிரம் தடவை கேட்டுவிட்டேன். இன்று அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும் போது என் கைகள் தையல் வேலையைச் செய்து கொண்டிருக்காமல் இருந்தால் அவர் கழுத்தை தாமாகவே சென்று நெரித்திருக்கும்" என்றார் ஏளனமாக. சீனாக்காரர் ஒருவர் பெர்னாட் ஷாவைப் பார்க்க வந்தார். அவருக்கு ஷாவினால் ஆகவேண்டிய காரியம் ஏதோ இருந்தது அதனால் ஷாவைப் பெரிதும் புகழ்ந்தார்.

"உங்களுடைய தேக உறுப்புக்கள் எல்லாமே கவர்ச்சியாகக் காண்கின்றன. உங்கள் முகம், மார்பு, கண்,கை, கால் என்று அடுக்கிக் கொண்டே போனவரைத் தடுத்து நிறுத்திய ஷா அது இருக்கட்டும் என் பற்கள் எப்படி, அபிப்பிராயம் என்னவென்பதைத் தெரிவிக்கவும்" என்றார்.

"அப்படியா, சரி மறுபடியும் நான் கேட்கிறேன்" என்றார் ஷா. அவ்வளவு தான் உடனே அந்த இளம் எழுத்தாளர் தாம் கையோடு கொண்டு வந்திருந்த கையெழுத்துப் பிரதிகளை எடுத்துப் படிக்கத் தொடங்கினார். படித்துக் கொண்டிருந்த வேளை பக்கத்தில் குறட்டை ஒலி கேட்கவே பதட்டம் அடைந்த நிலையில் அருகில் கண்ணோட்டத்தைச் செலுத்தினார்.

அவருக்கு பெரிய ஏமாற்றம். ஷா நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். வாசிப்புச் சத்தம் திடீரென நின்றதினால் ஷா விழித்துக் கொண்டார். "தங்களின் கருத்தை அறியவேண்டும் என்றல்லவா வந்தேன்" என்றார் அந்த இளம் எழுத்தாளர்.

"நான் தான் என் கருத்தைத் தெரிவித்து விட்டேன்" என்று ஷா கூறியதும் எழுத்தாளர் முகம் சுருங்கியது.

ஒரு நாள் ஜோர்ஜ் பெர்னாட் ஷாவிற்கு ஒரு கடிதம் வந்தது முகவரி எழுதியவர் 'ஷா' என்பதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் "ஷாம்" என்று எழுதி விட்டார். ஷாவிற்கு ஒரே கோபம் 'உலகம் பிரசித்தி பெற்ற என் பெயரை சரியாக உச்சரிக்கவோ எழுதவோ தெரியாத ஜடம் என்று கூக்கிரலிட்டார்.

பெர்னாட்ஷா ஒற்றையடிப் பாதை ஒன்றில் சென்று கொண்டிருந்தார். அவர் வருவதைப் பார்த்தவுடன் எதிர்ப்பக்கம் வந்து கொண்டிருந்த ஒருவன் ஒதுங்கி நின்றான். பெர்னாட் ஷா அவனருகில் வந்தவுடன் "நான் முட்டாள்களுக்கு வழிவிடுவதில்லை" என்றான்.

பெர்னாட்ஷா உடனே அவன் பவ்வியமாக, "நான்வழி விடுவதுண்டு" என்றார்.

பெர்னாட்ஷா ஒருமுறை அமெரிக்கா சென்றார். அதிக நாட்கள் தங்காமல் விரைவில் திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்தார் இதை அறிந்த நபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். சரமாரியான கேள்விக்கணைகளைத் தொடுத்தனர். சலிக்காமல் பதில் கொடுத்தார்.பெர்னாட்ஷா "அமெரிக்காவில் நீங்கள் எதை விரும்புகின்றீர்கள்?" என்று நிருபர் கேட்டதற்கு ஷா பெருமிதமாக இதைவிட்டு வெளியேறுவதை" என்றார் பளிச்சென்று.

"இலங்கை தான் உலகிலே மிகவும் அதிசயமான தேசம்" என்று பிரிட்டிஷ் ராஜதந்திரி லொயிட் ஜோர்ஜ் சொல்லியிருக்கிறாரே அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? என்று பத்திரிகை நிருபர் கேட்டதற்கு "அந்த அரசியல் வாதி தான் விஜயம் செய்கின்ற எல்லாத் தேசங்களைப் பற்றியுமே இவ்வாறு கூறுவது வழக்கம். இதைக்கேட்டு யாரும் ஏமாற வேண்டாம்" என்று ஷா பதிலளித்தார்.

ஷா நோய்வாய்ப்பட்டிருக்கும் வேளையில் பத்திரிகை நிருபர் அவரை அணுகி "உங்களுக்கு என்ன வியாதி?" மக்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள்" என்று கேட்டார்.

"ஏன் இவ்வளவு பதட்டம்? ஷா இறந்து விட்டதாகவே சொல்லிவிடுங்கள், எனக்கு எவ்வளவோ தொல்லைகள் குறையும்" என்றார் ஷா.

ஒரு சமயம் வின்ஸ்டன் சர்ச்சிலின் மனைவி ஷாவை விருந்துக்கு அழைத்தார். அதற்கு ஷா தந்த பதில் இதுதான் "நான் வரமுடியாததைப் பற்றி வருந்துகிறேன். நான் செத்த பிராணிகளைச் சாப்பிடுவது இல்லை."

ஷா ஜெனீவாவிற்கு சென்றிருந்த சமயம் ஒருவர்" உலகிலேயே யார் முட்டாள்?" என்று அவரைக் கேட்டார்.

பொதுவுடமை பற்றி அறிவுள்ள நங்கைக்கு வழிகாட்டி (INTELLIGENT WOMEN'S GUIDE TO SOCIALISM) என்ற என்னுடைய புத்தகத்தை யார் படிக்கவில்லையோ அவன்தான் முட்டாள் என்று ஷாவிடமிருந்து பதில் வந்தது. இனி ஷாவின் பொன் மொழிகளிலொன்றைப் பார்ப்போம்.

வக்கீல்கள் கத்தரிக்கோலின் இருபக்கங்களைப் போன்றவர்கள் அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ள மாட்டார்கள் ஆனால் நடுவில் அகப்பட்டுக்கொண்டு தபிக்கும் இரண்டு பக்கக் கட்சிக்காரர்களையும் நன்றாக வெட்டி விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு பெண்ணை கல்யாணம் செய்யிறதென்டா பொன் உருக்குச் சடங்கு நடத்துறாங்க....இந்த

ஆம்பிளைங்க என்ன 22 கரட்டா! பொன் உருக்கிற அன்றே பெண் மெலிஞ்சு இளைச்சிப் போயிடுறாள். பொன்னுருக்குக்குப் பிறகு இருக்கிற பொன் எல்லாம் சீதனமா வாங்கிடுறாங்க....நிலம், புலம், சீதனம், இனாம் எண்டு எல்லாம் பறிச்சிடுறாங்க.... அப்புறம் பெண் மெலிஞ்சு தடியாகாதா? எல்லாத்தையும் பறிச்சுப்போட்டு அம்மி ஒண்டையும் கொண்டு வந்து, அருந்ததி நட்சத்திரமும் காட்டுறானவை. இந்தப் பழக்கமெல்லாம் எப்பதான் நாசமாய்ப் போகப் போகுதோ?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலைகள் இல்லாமல் நிற்றுக்கொள்.

வாகனம் ஓட்டக் கற்றுக்கொள், வளமான வாழ்வு வாழவும் கற்றுக்கொள்.

எல்லோரும் வாகனம் ஓட்டலாம் ஆனால் சரியான வழி முறை ஊடாக வாகனம் ஓட்டக் கற்பதே உண்மையான வழிக்கல்வி.



மட்டக்களப்பில் வாகனம் ஓட்டக் கற்க வேண்டுமா?

# நாடுங்கள்

# வாருங்கள்

# ஐங்கரன் லேணர்ஸ்

இல.61,புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.

தொலைபேசி இல : 060 2650608 கையடக்க தொ.பே.இல : 0773138372

---


பெண்களுக்கு வாகன ஓட்டப் பயிற்சிகள் அவதானமாகவும், பொறுப்புடனும் பயிற்றுவிக்கப்படும்.

எம்மால் பயிற்றுவிக்கப்படும் வாகனப் பயிற்சியாளர்கட்கு ஓய்வு பெற்ற வீதிப்பரிசோதகர்களால் பயிற்சி நடத்தப்படும்.

யாரும் வாகனம் ஓட்டலாம் ஆனால் ஆபத்தும், விபத்தும் இன்றி எந்தரக வாகனத்தையும் ஓட்டுபவர் எவரோ அவரே சமுதாயத்தின் காவலர். இவர்களால் ஓட்டப் பழக்கப்படும் வாகனங்கள்

கனரக வாகனங்கள். பாரமற்ற வாகனங்கள். ஆட்டோ. மோட்டார் வாகனங்கள்.

அனுபவம் ஓய்வு பெற்ற பொறியியலாளர்களால் மெக்கானிக் பயிற்சியுடன், லைசன்ஸ் பெற்றுத்தர உதவி செய்கின்றோம்.



## தொடர்புகளுக்கு....

# ஐங்கரன் லேணர்ஸ்

இல.61, புகையிரத நிலையக் குறுக்கு வீதி

மட்டக்களப்பு.

தொ.பே.இல : 0602650608




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டுத் தரும் குட்டிக் கதைகள்

கிண்ணியா அலிஅக்பர்

## இறைவனுக்குத்தான் புரியும்

சோலையன்பன் என்றால் எழுத்தாளர்கள் மட்டத்தில் எல்லோருக்கும் தெரிந்த ஒரு பிரபல்யமான கவிஞர். இவரின் கவிதைகளை எல்லோருமே விரும்பிப்படிப்பார்கள். கவிதைப் போட்டிகளில் சில விருதுகள் பெற்றுக் கொண்டவர் தான் இவர். திறமையுடைய சிலருக்கு இறைவன் ஏதோ ஒரு குறைபாட்டையும் வைக்கத் தான் செய்கிறான். ஆமாம் இவரிடமுள்ள குறைபாடு அவருடைய கவிதையைப் போலில்லாமல், கையெழுத்து படுமோசமாக இருந்ததுதான்.

இதனால் சோலையன்பன் அழகான கையெழுத்தில் எழுதக்கூடிய ஒரு கையாளைத் தன்னோடு வைத்துக் கொண்டுதான் கவிதைகளை சொல்லி எழுத வைத்து பிரபல்யமாகிக் கொண்டிருந்தார். ஒரு சமயம் தனது உறவினர்களுடன் சேர்ந்து சோலையன்பன் 15 நாட்கள் கொண்ட இந்தியாச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

தனது கையெழுத்தைத் திருத்தி அழகாக எழுத முயன்றும் சோலையன்பனுக்கு கைவராத கலையாகவே போனது. ஒரு பத்திரிகைக்கு தொடர்கவிதை எழுதிவந்த சோலையன்பனுக்கு அவசரமாக கவிதையை எழுத வேண்டி வந்தது. தனது கையால் எழுத இல்லாததால் பெரிதும் சிரமப்பட்டு அனுப்பவேண்டிய கவி தையை எப்படியோ எழுதி அனுப்பியும் விட்டார்; குறிப்பிட்ட பத்திரிகை அலுவலகத்தின் பதிப்பாசிரியருக்கு.

சோலையன்பனின் கைப்பட எழுதியனுப்பப்பட்ட கவிதைத் தொகுப்பைப் பதிப்பாசிரியருக்கோ, அச்சுக் கோர்ப்பவருக்கோ ஒரு வரியைக் கூட வாசித்தறிய முடியாமல் போய் விட்டது. இதனால் அதனை மீண்டும் சோலையன்பனுக்கே திருப்பி அனுப்பி வைத்தார் பதிப்பாசிரியர்.

சோலையன்பனுக்கு அனுப்பப்பட்ட அக்கவிதையை அவரே எடுத்து படிக்க முயன்றார். என்ன புதுமை அவர் எழுதியதை அவருக்கே படிக்க முடியாமல் போய்விட்டது. அப்படியும், இப்படியும், திருப்பித் திருப்பியும், பக்கத்திலும் சற்றுத் தொலைவிலும் பிடித்த வண்ணம் படிக்க முயன்றார். தன்னால் எழுதப்பட்டதை ஒரு வரி கூடப் புரிந்து கொள்ள முடியாமல் மிகவும் அவஸ்தைப் பட்டார்.

அப்போது அவரின் மனதில் தோன்றியது இது தான் "இதை எழுதும் போது என்ன எழுதினேன் என்று எனக்கும் இறைவனுக்கும் தான் தெரிந்திருந்தது. ஆனால் இப்போது எனக்குப் புரியவில்லை அந்த இறைவனுக்கு மட்டும் தான் புரியும்"

## போலிகள்

அன்று அந்த நடிகையின் வீட்டில் ஒரே குதூகலம், காரணம் அவள் புதிதாய் கட்டிய வீட்டில் புதுமனை புகுவிழா. இவ்விழாவிற்கு அவளுக்குத்தெரிந்த நெருங்கிய உறவினர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். திருப்தியாக விழாவும் முடிவுற்று வந்திருந்த அனைவரும் கலைந்தும் சென்று விட்டார்கள். மிகவும் சந்தோஷமடைந்தாள் அந்த நடிகையும்!

இவைகள் எல்லாம் நிறைவுற்று நடிகையின் தனிப்பட்ட அறையில் அவளின் தோழியுடன் சுவாரஷ்யமாகப் பேசிக்கொண்டிருந்தாள். ஏதோ ஒரு ஞாபகம் வரவே, அந்த நடிகையிடம் கேட்டாள், ஆமான்டி உன்னுடைய கட்டுரையொன்று பத்திரிகையொன்றில் பிரசுரமானதே! உண்மையைச் சொல்லடி உனக்கு யார் அதை எழுதிக் கொடுத்தது. உன்னைப் பற்றித் தான் எனக்கு நன்றாகத் தெரியுமேடி என்றாள்.

நீயும் உண்மையைச் சொல்லடி, என்னுடைய கட்டுரைதான் என்று உனக்கு யாரடி வாசித்துக் காட்டியது. உன்னைப் பற்றியும் எனக்குத் தெரியாதா! என்னைப் போல நீயும் ஒரு போலி என்று என்றாள் அந்த நடிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எத்தனை யுகங்கள் சென்றாலும் எம்.ஆர்.ராதா போன்ற நடிகரை பார்க்கவே முடியாது


பாலசங்கர்பிள்ளை

எத்தனை யுகங்கள் சென்றாலும் எம்.ஆர்.ராதா போன்ற நடிகரை பார்க்கவே முடியாது. தமிழ்த்திரையுலகில் எத்தனையோ நடிகர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களில் பலர் குறிப்பிட்ட காலம் வரை திரையுலகில் இருந்து விட்டு காணாமல் போயிருக்கிறார்கள். இன்னும் சிலர் சாதனைகள் பல படைத்தாலும் கடைசி காலத்தில் சோதனை வேதனைகளுடன் மறைந்திருக்கிறார்கள். ஆனால் நடிகவேள் எம்.ஆர்.ராதா சற்று மாறுபட்டவர். திரைப்படங்களில் சீர் திருத்தக்காரராகவும், நாடகத்தில் கலைக்காரராகவும் அரசியல் மேடையில் சீறினால் இடியாகவும் தனிமையில் சீண்டினால் வெடிப்பவராகவும் தனிக்காட்டு ராஜாவாக வாழ்ந்து மறைந்தவர் தான் எம்.ஆர்.ராதா.

மதராஸ் ராஜகோபாலன் ராதா கிருஷ்ணன் என்பதன் சுருக்கம் தான் எம்.ஆர்.ராதா. எம்.ஜி.ஆர் என்ற மூன்று எழுத்துக்கு எவ்வளவு பயபக்தி மரியாதை இருந்ததோ அந்தளவு செல்வாக்குடன் திகழ்ந்த எம்.ஆர்.ராதா வுக்கு எழுதப்படிக்கத் தெரியாது. சிறிய வயதிலேயே வீட்டுக்கு அடங்காத பிள்ளையாக இருந்தமையினால் படிக்காமல் நாடகக்குழுவில் போய் சேர்ந்தார். 'நல்லதங்காள்' நாடகத்தில் கிணற்றில் வீசியெறியவும் குழந்தைகளில் ஒன்றாக முதன்முதலாக நடித்தார்.

1937 முதன் முதலாக 'ராஜசேகரன்' என்ற படத்தில் தோன்றி நடித்தவர் 1979ல் 'பஞ்சாமிர்தம்' என்ற படத்தில் கடைசியாக நடித்தார். இவர் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்த 'தாய் சொல்லைத் தட்டாதே', 'நீதிக்குப் பின் பாசம்', 'பெற்றால் தான் பிள்ளையா', 'என் கடமை', 'தாயின் மடியில்' உட்பட பல வெற்றிப்படங்களில் சேர்ந்து கலக்கியிருக்கிறார். சிவாஜி கணேசனுடன் 'பலே பாண்டியா', 'படித்தால் மட்டும் போதுமா', 'பாகப்பிரிவினை', 'சாந்தி', 'பாலும் பழமும்', போன்ற படங்களில் வாழ்ந்துகாட்டினார். 118 படங்களில் நடித்த எம்.ஆர்.ராதா 1963ல்





சாதனையாக 22 படங்களில் நடித்தார். அவற்றில் அநேகமானவை வெற்றிப் படங்களாகும். எம்.ஜி.ஆரை 'ராமச்சந்திரா' என்றும் சிவாஜியை 'கணேஷா' என்றும் அழைக்கும் அதேவேளை மற்றவர்களை வாடா, போடா என்று தான் அழைப்பார். ராதாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. எவ்வளவு நீளமான வசனங்களாக இருந்தாலும் யாராவது வாசித்தால் அப்படியே மனதுக்குள் வாங்கிக் கொண்டு ஏற்ற இறக்கத்துடன் தனது பாணியில் பேசி அசத்திவிடுவார். இவரிடம் மிகை நடிப்பெல்லாம் கிடையாது. மிக இயற்கையாகவே இவரின் நடிப்பு இருக்கும்.

தற்போதைய தமிழக முதல்வர் மு.கருணாநிதிக்கு கலைஞர் கருணாநிதி என்று அழைத்து பட்டம் கொடுத்தவர் எம்.ஆர்.ராதாதான். ராதாவின் நலை முடியும் நடிக்கும் என பாராட்டினார் கலைஞர் கருணாநிதி. இவர் கதாநாயகனாக வேடமேற்று நடித்த 'ரத்தக் கண்ணீர்' நாடகம் பின்னர் திரைப்படமாக தயாரிக்கப்பட்ட போது அது 100 நாட்கள் ஓடி வெற்றிப் பெற்றது. அந்த படத்தில் இந்த வசனங்கள் மிகவும் பிரபல்யம். "அடியே காந்தா.. பாரின்காரன் நீராவியில கப்பல் விடுகிறான். நீங்க நீராவியில புட்டு செஞ்சி வயித் துக்குள்ள விடுறீங்க... உள ருக்கு ஒரு லீடர். அவனவனுக்கு ஒரு கொள்கை. அவனவனுக்கு ஒரு பட்டினிப்பட்டாளம், நான் சென்ஸ்..." இந்த நாடகம் 3 ஆயிரத்து 21 நாட்களும், தூக்கு மேடை நாடகம் 800 நாட்களும், லட்சுமிகாந்தன் நாடகம் 760 நாட்களும் அரங்கேற்றப்பட்டன.

பளைமௌத், அம்பாஸடர், இம்பாலா எனப் பல கார்களை வைத்திருந்தார். ஒருமுறை இம்பாலாவில் எருமை மாட்டுக்கு வைக்கோல் எடுத்துச் சென்றதை பலரும் ஆச்சரியத்துடன் பார்த்தார்களாம். நமக்கு பயன்படுத்தறதுக்குத்தானப்பா கார், தகரத்துக்கு கலர் பெயிண்ட் அடிச்சதுக்காக தலையிலயா தூக்கிட்டுப் போக முடியும் என்று கேட்டாராம்.

இவர் ராமாயணத்தை அதிகமாக கிண்டலடித்தார். "கீமாயணம்" என்று நாடகம் போட்டார். ராமன் வேடத்திலிருக்கும் போது கைது செய்யப்பட்டார். மனம் புண்படுகிறது என வழக்குப் போடப்பட்ட போது மனம் புண்படுபவர்கள் யாரும் வர வேண்டாம் என விளம்பரம் செய்தார். எம்.ஜி.ஆரும், M.R.ராதாவும், பெற்றால் தான் பிள்ளையா, படத்தில் ஒன்றாக நடித்தப் போது தான் தயாரிக்கவிருக்கும் சொந்தப்படத்தில் எம்.ஜி.ஆர் நடிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். எம்.ஜி.ஆர் சம்மதித்தார். காவல்காரன் படம் தயாரான வேளையில் எம்.ஜி.ஆருக்கும் ராதாவுக்குமிடையில் தகராறு ஏற்பட்டது. எம்.ஜி.ஆரை அவரது 'ராமாவரம்' தோட்டத்தில் வைத்து துப்பாக்கியினால் சுட்டுவிட்டு தானும் சுட்டுக்கொண்டார். இந்த வழக்கில் ராதாவுக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. எம்.ஆர்.ராதாவின் மகனான M.R.R.வாசு சில காலம் தமிழ் சினிமாவில் கொடிகட்டி பறந்தார். ஆனால் குடி அவர் குடியையே கெடுத்து உயிரை எடுத்துவிட்டது.

M.R.ராதா தண்டனைக் காலம் முடிந்து வெளியே வந்தாலும் முன்னரைப்போல அவரால் திரைப்படங்களில் நடிக்க முடியவில்லை. அவர் உடல் தளர்ச்சியடைந்திருந்தது. இவர் கடைசியாக 1979ல் பஞ்சாமிர்தம் படத்தில் நடித்தார். தமிழ் திரைப்பட நடிகர்களிலேயே துணிச்சல்மிக்க இவரின் மறைவுக்குப் பின் இவரின் வாரிசுகளான எம்.ஆர்.ராதாரவி, எம்.ஆர்.ராதிகா, வாசுவிக்ரம் போன்றவர்கள் தற்போது திரையுலகில் ஆட்சி செலுத்தி வந்தாலும் கூட M.R.ராதா அளவுக்கு அவர்களால் பிரகாசிக்க முடியவில்லை. எந்த வேடத்தைக் கொடுத்தாலும் அந்த பாத்திரமாகவே மாறிவிடும் M.R.ராதா 'சித்தி' என்ற படத்தில் மிகச்சிறந்த தரமான நடிப்பினை வழங்கியிருந்தார். நகைச்சுவை நடிகனாக, வில்லனாக, குடும்பத்தலைவனாக குணச்சித்திரமாக ஏன் கதாநாயகனாகக்கூட இவரால் மிகச்சிறந்த யதார்த்தமாக நடிக்கமுடியும். இரட்டைக்குரல்களில் இவர் கனீரென பேசி நடிக்கும் விதம் போற்றத் தக்கது. பாராட்டத்தக்கது. எத்தனை யுகங்கள் சென்றாலும் இப்படியொரு நடிகனை இனி நாம் பார்க்கவே முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI VINAYAGAR ENTERTAINMENT

No. 440, H P Road, Sinnaputhukulam, Vavuniya.

T.P:- 024-2226272

- Browsing
- Game Playing, Game CDs
- Calls
- Computer Repairing Used Computer for Sale
- Photocopy
- Fax
- DVD, VCD's Whole Sale...... Black CD, DVD Whole sale.....
- Phone Cards Dialog, Mobitel, Airtel, Suntel, Lanka Ball & Reloads......
- தமிழ், ஆங்கிலம், சிங்கள பட DVDக்கள், VCDக்கள்
- பழைய, இடைக்கால, புதிய MP3, DVD, VCD பாடல்களுடன் Remix, Non stop பாடல்களும்.
- குழந்தைகளுக்கான பாடல்கள், கதைகள் அடங்கிய DVDக்கள்.
- ஜாதக கணிப்புடன் பலன்களும், திருமண பொருத்தங்களும் பார்த்து தரப்படும்.

சோதிட கலாநிதி : சிவஸ்ரீ மு. க. கந்தசாமி குருக்கள் J.P

**MEGA SALE FOR 11.04.2011 to 16.04.2011**
**BUY 01 DVD + Get *FREE* 01 VCD (Offer Pack)**
**BUY 05 Offer Pack + Get *FREE* 01 MP3**
**BUY 05 VCD + Get *FREE* 01 MP3**

அனைவருக்கும்

**"ஸ்ரீ விநாயகர் என்டர்டைன்மென்ட்" இன்**
**NO 440B, HPறோட், சின்னபுதுக்குளம்,**
**வவுனியா.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமை நினைவுகள்

-மாஸ்டர் சிவலிங்கம்-


6



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

## சொர்க்கலோகம் சென்று வந்தேன்!

நான் சிறுவனாக இருந்த காலத்திலே எனது மஞ்சந்தொடுவாய்க் கிராமத்திலே மாலை வேளையிலே பலவித விளையாட்டுக்கள் விளையாடுவது வழக்கம். தட்டுக் கோடு, பிள்ளையார் கட்டை, அடி பந்து, கிட்டிப்புள் முதலிய விளையாட்டுக்கள் அக்காலத்தில் பிரசித்தி பெற்றவை. நான் அயல் வீட்டுச் சிறார்களுடன் மேற்படி விளையாட்டுக்களில் ஆர்வத்தோடு ஈடுபடுவது வழக்கம்.



ஒரு நாள் ஏதாவது புது வித விளையாட்டு விளையாட வேண்டும் என்ற ஆவல் எங்களுக்கு ஏற்பட்டது. என்ன விளையாட்டு விளையாடலாம் என்று சிந்தனையில் ஆழ்ந்தோம். நாங்கள் அமர்ந்திருந்த இடத்திற்குப் பக்கத்திலே பெரிய முந்திரிய மரம் ஒன்று நின்றது. அதன் பெரிய கிளையொன்று முறிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு ஒரு வித விளையாட்டு மனதில் உருவானது. நண்பர்களுக்கு விளக்க ஆரம்பித்தேன். எனது சொர்க்கலோக விளையாட்டை.

"முறிந்து தொங்கிக் கொண்டிருக்கும் முந்திரிய மரக் கிளையிலே ஒருவர் ஏறி அமர்ந்து கொள்ளவேண்டும். மற்றவர்கள் பெரிய முட்டுக் கம்பு ஒன்றின் உதவியுடன் அந்த மரக்கிளையை மேலே உயர்த்தி, முட்டுக்கம்பின் அடிப்பகுதியை நிலத்திலே பதித்து விட வேண்டும். நிலத்தில் நிற்பவர்கள் மண்ணுலகில் உள்ளவர் சொர்க்கலோகம் செல்லுவனர். மேலே உள்ளவர் சிறிது நேரம் சொர்க்கலோகத்தில் அமர்ந்திருப்பார். பின்பு முட்டுக்கம்பை மெதுவாக இழுத்து சொர்க்கலோகம் சென்றவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணுலகத்திற்குக் கொண்டுவர வேண்டும். ஒவ்வொருவராகச் சொர்க்கலோகம் சென்று வரலாம்". இப்படி நான் விளக்கியதும் "அருமையான விளையாட்டு" என்று கூறி அனைவரும் துள்ளிக் குதித்தனர். முறிந்து தொங்கிய மரக் கந்தின் மூலம் ஒவ்வொருவராகச் சொர்க்கலோகம் சென்று வந்தனர். கடைசியாக எனது முறை வந்தது.


சொர்க்கலோகம் செல்லும் வாகனமாகிய மரக்கொம்பிலே ஏறி அமர்ந்தேன். முட்டுக் கம்பின் உதவியுடன் அதனை மேலே உயர்த்திவிட்டனர். முட்டுக்கம்பு நிலத்தில் நன்றாக ஊன்றப்பட்டது. நான் மேலே சொர்க்கலோகத்திலே அமர்ந்து தொலைவில் தென்படும் காட்சிகளை நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்தேன். அதே நேரத்தில்...! "இதுவரை சொர்க்கலோகம் சென்றவர்களை மெதுவாக இழுத்தே மண்ணுலகம் கொண்டுவந்தோம். இப்போது வேகமாக முட்டுக்கம்பை இழுத்து சொர்க்கலோகம் சென்ற கிளையிக்கத்தை விரைவாக மண்ணுலகத்துக்குக் கொண்டு வருவோம்" என்று கூறியபடி முட்டுக் கம்பை மின்னல் வேகத்திலே இழுத்துவிட்டான் ஒரு பையன். முற்றிலும் எதிர்பாராத விதத்தில் முட்டுக்கம்பு வேகமாக இழுக்கப்பட்டதும் மரக்கொப்பிலே நின்ற நான் நிலைதடுமாறி அலறியபடி கீழே விழுந்தேன். இடது கை எலும்பு உடைந்துவிட்டது. எவ்வளவு நேரம் மயக்கத்திலிருந்தேனோ தெரியாது. கண்களைத் திறந்த போது வீட்டுக் கட்டிலிலே படுத்திருந்தேன். கட்டிலைச் சுற்றி உறவினர்கள் பலர் சோகமே உருவாக என்னைப் பார்த்தபடி நின்றனர். எலும்பு முறிவினால் ஏற்பட்ட வலி பொறுக்க முடியாது முனகியபடியே கிடந்தேன். எலும்பு உடைந்த கையில் ஏதோ ஒரு வித நோவெண்ணெய் பூசப்பட்டிருந்தது.

அடுத்த நாள், கல்வயலில் இருந்த பிரபல எலும்பு முறிவு வைத்தியர் சரவணைமார் செல்லத்துரை என்பவரிடம் கொண்டு செல்லப்பட்டேன். எவ்வாறு கையெலும்பு உடைந்தது என்பதைக் கேட்டு அறிந்துகொண்ட வைத்தியர், "தம்பி! இன்னும் சொர்க்கலோகத்துக்குப் போகும் ஆசை இருக்கிறதா?" என்று நயமாகக் கேட்டுக்கொண்டே வைத்தியத்தினை ஆரம்பித்தார்.

எலும்பு முறிந்த கைக்கு அடுக்கடுக்காகப் பலவிதமான பற்றுக்கள் போடப்பட்டன. முட்டைப் பற்று, வைரப்பற்று இப்படிப் பல பற்றுக்கள் சுமார் ஆறு மாதங்களின் பின்பே அந்தக் கை சுகமடைந்தது. "குறுக்கு வழியிலே சொர்க்கலோகம் செல்ல முயன்றால் இப்படித் தான் படாதபாடு படவேண்டி ஏற்படும் போலும்!" என்று எண்ணிக்கொண்டேன்.


(தொடரும்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எஞ்ஜினியர்** : குளங்கள் உடையும் என்பதை தூர நோக்கால் அறிந்து அணை கட்டத் தெரியாதவர்கள்.

**டாக்டர்** : அரசாங்க ஆஸ்பத்திரியில் பகலிலும் தனியார் ஆஸ்பத்திரியில் பிற்பகலிலும் நோயாளர்களுக்கு ஊசி ஏற்றுபவர்கள்.

**நேர்ஸ்** : வீட்டில் கணவனையும் பிள்ளைகளை யும் பராமரிக்க முடியாத 'கிளியா பாட்ராக்கள்'

**நீரழிவு** : இலங்கையில் எத்தனை வீதம் ஆண்மை மிக்கவர்கள் எண்பதை நிர்ணயிக்கப் போகும் கொடிய நோய்.

**கையடக்கத் தொலைபேசி** : கதை பெருக்கி

**மகாத்மா காந்தி** : சிலையில் வாழும் ஜீவன்

**பிரம்பு** : ஆசிரியர்கள் தூர எறிய வேண்டிய துயரக் கண்ணாடி

**தேங்காய்** : வெளிநாட்டுக் காசு புளங்கினாலும் வாங்கும் போது விலையால் மனம் நோகச் செய்யும் வினோதக் குண்டு.

**இசை** : பசியால் வாடுவோர் ரசிக்க முடியாத நல்ஓசை

**தோசை வடை** : 'அப்பிட்ட எப்பா' எனச் சிங்கள மக்கள் சொல்ல மறந்த தீன் பண்டங்கள்.

**கடாபி** : பதவியில் இருந்து விலக முடியாதோர் தனது குடி மக்களைக் கூட வகை தொகை இன்றிக் கொலை செய்வர் என்பதை எடுத்துக் காட்டும் மேட்டுக் குறுடன்.

**பெர்லூஸ்கோனி** : நான் ஒரு சிறிய துஷ்டன் என ஒப்புதல் வாக்குமூலம் அளித்த உலகத் தலைவர்களில் ஒருவர்.


**பிரேமானந்த சுவாமிகள்** : ஆச்சிரமம் அமைத்து ஆன்மீகம் வளர்க்க விரும்புவோர் படிக்க வேண்டிய முதல் கையேடு.

**மரணதண்டனை** : தற்கொலை அதிகம் செய்யும் நாட்டில் மதிப்பிழந்த சொல்.

**மணிக்கூடு** : அடுத்த நூற்றாண்டில் கூட இலங்கையர்களால் உருவாக்கப்பட முடியாத விஞ்ஞானச் சொல்.

**புத்தகம்** : சி.டி வந்ததால் கற்பிழந்து போன கண்ணகி

## பள்ளிப் பகிடி




எமது பள்ளிக்கூடத்தில் தமது படிப்பிப்பவர் மனோகரன். அவரே எமது வகுப்பாசிரியரும் கூட ஆசிரியர் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் கூப்பிட்டு உங்களின் தகப்பனார் என்ன தொழில் செய்கிறார் எனக் கேட்டு வைத் தார். பிள்ளைகள் ஒவ்வொருவராக எழும்பி மேசன், டாக்டர், என்ஜினியர், விவசாயம், வாகனம் ஓட்டல், கராஜ் வேலை, கடை.... இவ்வாறு பலவும் கூறினர் கடைசியாக எமது வகுப்பில் படித்த பிள்ளை ஆசிரியரைப் பார்த்துச் சொன்னது, எங்கடை அப்பா தேன் காய்ச்சி விற்பவர்.

– அமிர்தப்பிரியா –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஜனரஞ்சக எழுத்தாளர் திரு.பாலசுப்பிரமணியம் பிள்ளை

# துள்ளித் திரிந்தக் காதல்

(ஒரு இலட்சிய மனிதனின் உயிரோட்டமான கதை)

பாலசுப்பிரமணியம் பிள்ளை எழுதிய துள்ளித் திரிந்த காதல் என்ற தொடர்கதை இந்த இதழில் ஆரம்பமாகின்றது. பாலசுப்பிரமணியம்பிள்ளை ஒரு ஜனரஞ்சக எழுத்தாளர். இவரின் சிறுகதைகள், நாவல்கள், சினிமா சம்பந்தமான ஆக்கங்கள் [illegible] வெளிவந்து [illegible] சந்தித் [illegible]

சுவாரஸ்யமான இந்தக் கதையைச் [illegible] பாலசுப்பிரமணியம் புது [illegible] இனிக் கதைக்குச் செல்லலாம்.

புதைகபிரதம் - கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படும் போது - மணி நள்ளிரவைத் தாண்டியிருந்தது. அடுத்து வரும் இரண்டு நாட்களும் விடுமுறை நாட்களாக இருந்தபடியினால் அதிகம் கூட்டமாக இருந்தது. பாலமுருகன் - மிகவும் கஷ்டப்பட்டு யன்னல் பக்கமாக அமர்ந்துக் கொண்டார். கடந்த 15 வருடங்களாக கொழும்பில் ஒரு தனியார் நிறுவனமொன்றில் கணக்காளனாக பணி புரிந்துவிட்டு ஐம்பத்தைந்தாவது வயதில் ஓய்வு பெற்று சொந்த ஊரான நுவரெலியாவை நோக்கிப் பயணமாகிக் கொண்டிருக்கிறார்.

பாலமுருகன் - நன்றாக சாய்ந்து அமர்ந்தார். "திரு.பாலமுருகன் - கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனத்தில் கணக்காளராகப் பணி புரிந்து விட்டு தன் சுய விருப்பத் தின் பேரில் வேலையை விட்டு செல்வது எமக்கெல்லாம் வேதனையைத் தந்தாலும் தவிர்க்க முடியவில்லை. கடந்த காலங்களில் எமது நிறுவனம் முறையான கணக்குப் பதிவேடுகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப் படாமையினால் பல்வேறு வகையில் நஷ்டத்தினைச் சந்தித்து வந்த நிலையில் திரு.பாலமுருகன் கணக்காளராக பதவியேற்றதன் பின் - பன் மடங்கு லாபத்தினை எட்டிப்பிடித்த விடயம் உங்களுக்கெல்லாம் தெரியும். இவரின் அயராத கடுமையான உழைப்பு. நேர்மை மற்றும் முறையான ஆலோசனைகள் என்பவை எம்மை மிகப்பெரிய வெற்றிக்கு எம்மை இட்டுச் சென்றுள்ளது. இவரின் பிரிவு எமக்கெல்லாம் கவலையை ஏற்படுத்தினாலும் இவர் போகும் இடத்தில் இவருக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்க வேண்டுமென நான் நெஞ்சார பிரார்த்தனை செய்கிறேன்...."

பாலமுருகன் - மெதுவாக கண்களை திறந்து வெளியே பார்வையை ஓட்டினார். எங்கும்பிருட்டாக இருந்தது. கொழும்புக்கு வந்து கிட்டத்தட்ட 15 வருடங்கள் ஓடிவிட்டன. காலம்தான் எவ்வளவு சீக்கிரமாக ஓடி விட்டது. அவர் நுவரெலியாவிலிருந்து கொழும்புக்குப் புறப்படும்போது அவருக்கு வயது 27 இருக்கும். இப்போது 37தான். ஆனால் -50 வயதானவரைப்போல மிகவும் தளர்ந்து போய் விட்டார். இந்த 37 வயதுவரை அவர் வாழ்வில் எத்தனையோ அனுபவங்கள் அர்ச்சனா, மனர்மதி. 'சூரியகலா' என மூன்று பெண்கள் அவர் வாழ்வில் குறுக்கிட் டார்கள். ஆனால் - கடைசியில் சந்தர்ப்ப



சூழ்நிலை மற்றும் தவறான சில முடிவுகளால் எல்லாமே கானல் நீராகி விட்டது. எல்லோரையும் போலவே அவரும் இளமை காலத்தில் இல்லாத கற்பனைகளையெல்லாம் செய்து எந்நேரமும் கனவுகளில் மிதந்தவர் தான். ஆனால் - என்ன செய்வது அவரொன்று நினைக்க தெய்வம் வேறொன்றையல்லவா கொடுத்து விட்டது!

அவர் மறுபடியும் சாய்ந்து உட்கார்ந்தவாறு கண்களை இறுக மூடிக்கொண்டார். கடந்து போன சம்பவங்களை அவர் கண்முன்னே படம்போல ஓடத்தொடங்கியது.

"அம்மா நான் க.பொ.த. சாதாரண தரத்தில் நல்ல பெறுபேறுக ளோடே பாஸாயிட்டேன்...."

பாலமுருகனின் தாய் கொழுந் துக்கூடையை சுவரிலிருந்த ஆணியில் மாட்டிவிட்டுத் சட்டென திரும்பினாள். "என்ன பாலு உண்மையாவா சொல்லுற... உன்னைப் படிக்க வைக்க நான் ரொம்ப சிரமப்பட்டுட்டேன். குடிகார புருஷன், ஊதாரியா மூத்தவன், கல்யாண வயசுல ரெண்டு தங்கச்சி மார், இவங்களை வச்சிக்கிட்டு உன்னை போராட்டங்களுக்கு மத்தியி லத்தான் படிக்கவச்சேன். இனி கவலை யில்ல. உன்னோட படிப்புக்கு எங்கே யாவது நல்ல வேலை கிடைக்காமலா போகும்...?

பால முருகன் - தன் தாய் பார்வதியை ஏமாற்றத்துடன் நோக்கி னான். அவன் குறிக்கோளே தொடர்ந் துப்படித்து பல்கலைக்கழகம் போய் பட்டம் பெற வேண்டுமென்பது. ஆனால் தாயின் எண்ணமோ இப்படியிருக்கிறதே! என்ன செய்வது அவளை குற்றம் சொல்லியும் பயனில்லை தனியாளாக அவள் எத்தனைக்காலம்தான் சுமைகளை தூக்கிக்கொண்டு கஷ்டப்படுவாள். அவன் தந்தை எப்போது பொறுப்பில் லாமல் ஊதாரியாக உளர் சுற்றத் தொடங்கினானோ அப்போதே கஷ்டக் காலம் ஆரம்பித்துவிட்டது.

அவன் தீர்மானித்துவிட்டான். இனியும் தாய்க்கு சிரமம் கொடுக்கக கூடாது. எங்காவது வேலையொன் றைத் தேடிக்கொண்டு பிறைவேற்றாக படித்து கா.பொ.த உயர்தரம் பரீட்சை எடுப்பது. நுவரெலியாவில் அவனு டைய தூரத்துச் சொந்தமான அண்ணா மலை கிழங்கு வியாபாரம் செய்து வந்தார். கிழங்குத் தோட்டமும் இரண்டு மூன்ற லொரிகளும் கூட இருந்தன. அவருக்கு கணக்கு வழக்குப்பார்க்க பொறுப்பானதொரு ஆள் தேவைப்பட்டது. பாலமுருகனை அவருக்குத் தெரியும். தற்காலிகமாக ஒரு ஆள் இருந்தாலும் பாலமுருக னைப்போல சுறுசுறுப்பான படித்த ஒருவனைத்தான் அவர் தேடிக்கொண் டிருந்தார். கடைசியில் அவனே அவரிடம் வேலைத்தேடி போகவும் உடனடியாக அவனை வேலையில் சேர்த்துக்கொண்டார். கடையில் கணக்கு வழக்குப் பார்ப்பது, தோட்டத் தில் வேலை வாங்குவது, கொள்முதல் செய்வதென்று சுறுசுறுப்பாக இயங்கிய அவனை ஒருமுறை தன் வீட்டுக்கு அழைத்துச்சென்றார். மலையடி வாரத்தில் அந்த பெரிய வீடு இருந்தது. வீட்டின் முன்புறம் அழகாக பூக்கள் பூத்துக்குலுங்கின. பக்கவாட்டில் ஏராளமான மரங்கள் உயர்ந்து வளர்ந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அவனை வீட்டினுள்ளே அழைத்துச் சென்றார். அவன் தயக்கத்துடன் மெதுவாக நடந்தான் "கூச்சப்படாம உள்ளே வா பால முருகா... நம்ம வீடு தானே... ஏய் தனலட்சுமி.. அடிக்கடி கேட்டியே அந்தத் தம்பியை கையோடே அழைச்சிட்டு வந்திருக்கேன்... அப்போது உள்ளேயி ருந்து சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க அந்த பெண்மணி வெளியே வந்தாள். முகத்தில் லட்சுமீகரம் இருந்தது.

'வாங்க தம்பி... உங்களைப் பத்திதான் இவரு சொல்லிக்கிட்டேயிருப் பாரு. நீங்க வந்த துக்கப்புறம்தான் இவரு கொஞ்சம் ஓய்வு எடுக்கிறாரு. ஒழுங்கா நேரத்துக்கு சாப்பிடுறாரு. நீங்க வேறு சொந்தமா போயிட்டாங்களா எனக்கும் ரொம்ப சந்தோஷமா போயிடுச்சி. உட்காருங்க இன்னைக்கி பகல் சாப்பாடு இங்கதான். ஏய்... கலா... இங்க வா... பாலா தம்பி வந்திருக் காரு..."

அப்போது - மற்றொரு அறை யிலிருந்து அவள் வந்தாள். துருதுரு வென அலைமோதிய கண்கள். சாட்டைப் போல இடைவரை தொங்கும் சடை. நல்ல சிவப்பு. இதழ்களில் நிரந்தரமானதொரு புன்னகை. அவள் அவனை நேருக்க நேர் பார்த்துவிட்டு சட்டென தலை குனிந்தாள். 'இவ என்னோட இரண்டாவது மகள் . பெயர் சூரியகலா. பாக்கிறதுக்கு சாது மாதிரி இருக்கா - ஆனா வாயாடி. அடுத்த வருஷம் பத்தாவது பரீட்சை எடுக்கப் போறா. மூத்த மகள் 'கயல்விழி' போங்க வேலை.. ஏய் கலா... மச மசன்னு நிக்காம வந்து சமையல்ல உதவி செய்... வா...'

பாலமுருகன் அவள் போவ தையே பாரத்துக்கொண்டிருந்தான். அவன் இப்படியொரு அழகியை இதுவரை சந்தித்ததில்லை. என்ன வொரு அழகு. ஆண்டவன் பெண் களை படைக்கும் போது மட்டும் சற்று விஷேட கவனம் செலுத்துவாரோ..."

"அப்புறம்... பாலமுருகா... இந்தமுறை கிழங்கு நல்லா வந்திருக் குது. லாபம் அதிகமா கிடைக்குமுன்னு நினைக்கிறேன். உனக்குப் போக வர ஒரு பைக் வாங்கித்தந்திடுறேன். நீ கடைசிவரை என்னோடயேயிருந் திட்டா வியாபா ரத்துல ஓகோன்னு வந்திடுவேன்...."

பாலமுருகன் கூச்சத்தோடு அவரைப் பாரத்தான். "எனக்கு சில கடமைகளும் இருக்கு... தங்கச்சிமா ரோட எதிர்காலத்தையும் பார்க்கனும்... நீங்க குடுக்கிற சம்பளம்தான் இப்போ எங்க வீட்ல அருப்பெரிய உதவது....

(தொடரும்)

## யாழ் நிலை வாதம்



நீங்கள் சங்கிலியன் ராஜ பரம்பரை தானேங். சங்கிலியைத் தாங்க...
குத்தாமல்வுற்றல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.பொன்னம்பலம் - உடப்பு

# பள்ளிப் பகுதி



ஆசிரியர் :- உலகம் உருண்டை என்பதை உதாரணத்துடன் சொல் பார்க்கலாம்

மாணவன் :- சற்று விரக்தியுடன் எங்கெங்கோ உங்களை மாற்றினாலும் திரும்பவும் இதே பாடசாலைக்கு வந்து விடுகிறீர்களே!




ஆசிரியர் :- உனக்குப் பிடித்த மலர் ஒன்றின் பெயர் சொல்?

மாணவன் :- அரியமலர் சேர்

ஆசிரியர் :- அது எங்கே இருக்கிறது?


மாணவன் :- பக்கத்து வகுப்பில் இரண்டாவது வரிசையில் சேர்.



ஆசிரியர் :- நாளையார் வாறார் கவனம்!

புது மாணவன்:- ஏதும் கவிதை கேட்டு விடுவாரோ?


மாணவன் :- இல்லை...... மாணவர்களிடம் எதுசரி எனக் கேள்வி கேட்டு நாலு அடி அடிக்காமல் விடமாட்டார்



அதிபர் :- அந்த மாணவனை ஏன் எப்படிப்போட்டு அடிக்கிறீர்?

தமிழாசிரியர் :- 'ஊக்கமது கைவிடேல்' என்பதைப் பிரித்து விளக்கம் எழுதுமாறு கேட்டேன் அவன் எழுதியிருப்பதை நீங்களே பாருங்கள்.

> 'ஊக்கம் + மது + கை + விடேல்'
> ஊக்கம் தருவது மது அதைக் கை விடக்கூடாது



ஒருவன்:- அதோ போறாரே அவர்தான் 'மூத்தக்குடிகாறன்'

மற்றவர் :- அவ்வளவு பெரிய குடிகாறரா அவர்?

மற்றவர் :- இல்லை - இல்லை - கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து மூத்த குடிமகன் தானென பிதற்றுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமும் கருத்தும்




சங்கத்தமிழ் மூன்றும் தா எனச்சொல்லி ஔவையார் வெண்பாவில் பாடினார். இதனால் ஔவையார் சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர் அல்ல என நிச்சயமாகக் கூறலாம். எப்படி என்று கேட்கிறீர்களா?

சங்ககாலத்தில் அவர் இருந்திருந்தால் சங்ககால இயல், இசை, நாடகத்தைத் தரும்படி கேட்டிருக்கமாட்டார். மட்டக்களப்பில் வாழும் ஒருவர் மட்டக்களப்பு மரமுந்திரிகம் பருப்புத்தா எனப் பாடி இருக்கமாட்டார். ஏனெனில் அதுதான் காலடியில் இருக்கிறதே!

-அமிர் வல்லி-


## சன் பான்ஸி ஹவுஸ்

மோனலிசா சித்திரம் தொடங்கி மோகனமான பான்ஸிப் பொருட்கள்
அத்தனையும் உண்டு இவர்களிடம்!
மட்டக்களப்பு காவல் நிலையத்துக்கு அருகில், திருமலை வீதியில்
கண்ணைக் கவரும் கவின் கலைக் கடை அது!
கைவளையல்கள் தொடங்கி பிளாஸ்டிக் கதிரைகள் மேசைகள் வரையில், புதிய
உலகை வரவேற்கும் புதுமைப் பொருட்கள் யாவும் நிதான விலையில்!
கண்காட்டும் பொம்மைகள், கை அசைந்தால் உலகை அசைக்கும் விளையாட்டுப்
பொருட்கள் சிறுவருக்கான வடிவமைக்கப்பட்ட சிருங்காரப் பொருட்கள், நவீன
டிசைன்களில் எவர் சில்வர் பாத்திரங்கள் குத்து விளக்குகள், வண்ண
விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஐந்து சமயக் கடவுளர்கள், புத்தர்,
இயேசு பிரான் படங்கள் ஒரே குடையின் கீழ்ப் பெற்றுக் கொள்ள... நாடுங்கள்
தேடி வாருங்கள்.




சன் பான்ஸி ஹவுஸ்
183, திருமலை வீதி, மட்டக்களப்பு.
தொ.பே : 0652223092 / 0779604264




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மை சிந்திய மனிதங்கள்



அன்புள்ள ஆசிரியருக்கு எழுதிக்கொள்வது,

சுவைத்திரளை சுவைத்தேன். சுவையான தேனைச் சுவைத்தது போல இனிப்பாக இருந்தது. இருந்தாலும் சஞ்சிகையை முழுவதுமாக வாசித்து முடிக்கவில்லை. காரணம் ஏனைய சஞ்சிகைகள் நாளிதழ்களை வாசித்து முடிப்பது சுலபம்; சுவைத்திரளை வாசித்து முடிப்பது கஷ்டம்; ஏனென்றால் ஒரு பகிடியைப் படித்துவிட்டு அதை மற்றவர்களுக்கு காட்டிச் சிரிப்பதிலேயே அதிகநேரம் போய்விடுகிறது. அந்த அளவுக்குப் பகிடிகள் தரமானவையாக இருக்கின்றன. தரமான எழுத்தாளர்கள் சுவைத்திரளில் எழுதுவதும் சிறப்பான அம்சமாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

அட்டை படத்திலும் "நாட்டுக்கருடன் பதில்" என்ற பகுதியிலும் அயல்நாடு பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அவை தொடர்பான சில சிந்தனைகளைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். சீனா, இந்தியாவின் சில பிரதேசங்களைப் பிடித்துத்தனது நாட்டுடன் சில பிரதேசங்களைப் பிடித்துத்தனது நாட்டுடன் சேர்த்துக் கொண்டுள்ளது. (அதாவது இந்திய, சீன யுத்தத்தின் போது) பாகிஸ்தானையும் சமாளிக்க முடியவில்லை. காஷ்மீரில் கலவரம் கட்டு மீறிப் போகின்றது. பங்களா தேசத்தில் இருந்து களவாக வருவோர் இந்தியாவில் அத்துமீறிக் குடியேறி வருகின்றார்கள். உலகிலுள்ள ஒரே இந்து நாடான நேபாளம் இந்தியச் செல்வாக்கில் இருந்து விடுபட்டு சீனாவின் செல்வாக்கு மண்டலத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கின்றது. அயல்நாட்டுக்கோ அதெல்லாம் பெரிய விடயமாகத் தோன்றவில்லை. தமிழ்நாட்டு மீனவர்களையும், இலங்கைத் தமிழர்களையும் அவமதிப்பதிலேயே அவர்கள் குறியாக இருக்கின்றனர்.

எம்மவர் சிலர் என்ன சொல்கின்றார்கள்? எமது மதமும் அவர்களின், மதமும் ஒன்றுதானாம்; எமது கலாச்சாரமும் ஒன்றுதானாம்; அவர்களின் நாடுதான் எமக்கும் தாய்நாடாம் என்றெல்லாம் இவர்கள் சொல்வதுதான் இந்த நூற்றாண்டின் மிகச்சிறந்த நகைச் சுவையாக உள்ளது.

சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், ஆகிய முத்தரப்பினரும் பிரச்சினைகளைப் பேசித்தீர்த்து சகோதரர்கள் போல் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அந்நியர் புகுந்து விளையாடுவதைத் தவிர்க்க முடியாமல் போகும் என்பதே எனது அபிப்பிராயம் ஆகும்.

பொங்கல் சிரிப்பு அபாரம் தகப்பன் பொங்கல் பொங்கிக்கொண்டு நிற்க மகன் அடுப்புக்குள் யானை வெடியைப் போட்ட விவகாரம் எமது வீட்டில் வெடிச்சிரிப்பை ஏற்படுத்தியது.

ஆற்றிலே முழுகப்போனவளைக் காப்பாற்றிக் கரையேறிவிட்டார் ஒருவர். அதனால் அவள் முழுகாமல் இருப்பதற்கு இவர்தான் காரணம் என்று அவப்பெயர் ஏற்பட்டு விட்டதாம். இதுவும் ஒரு நல்ல பகிடி.

"கட்டினால் இவளைக் கட்டணும்டா" என்ற எனது சிரிகதையினையும் எனது புகைப்படத்தையும் பிரசுரித்தமைக்கு மிகவும் நன்றி. மை சிந்திய மனிதங்கள் பகுதியில் எனது இரு கடிதங்கள் பிரசரிக்கப்பட்டமைக்கும் நன்றி நன்றி

சுவைத்திரளின் தரம் இமயத்தை எட்டிவிட்டது. இதுபற்றி மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கிழக்கு மாகாண மக்களுக்கும் (தமிழ்,முஸ்லிம்) இலங்கையில் வாழும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குமிடையே ஒரு பாலமாகச் செயற்படுகின்றீர்கள் அதையும் ஒரு Plus Point ஆக நான் பார்க்கின்றேன்.

அனைத்துலக தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் மாநாட்டுக்கு தாங்கள் வரமுடியாமற் போனதையிட்டு மிகவும் கவலையடைந்தேன். அடுத்த மாநாட்டை வெளிநாடொன்றில் நடத்துவார்களோ தெரியவில்லை.

இத்துடன் "பிறந்தநாள் பரிசு" என்ற பெயரிலான "சிரிகதை" யொன்றை அனுப்புகின்றேன். இதனையும் பிரசுரித்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**கா.தவபாலன்**
**கன்னொறுவ**

அன்புள்ள ஆசிரியர் சுவைத்திரள்
மாதம் மும்மாரி மண்ணுக்கு
தருபவர் வருணபகவான்
பாருக்கு வெளிச்சம் பகலில்
தருபவர் சூரியபகவான்
ஊருக்கு வெளிச்சம் இரவில்
தருபவர் சந்திரபகவான்
வீசும் தென்றலை பாரெல்லாம்
பரப்புவார் வாயுபகவான்
ஜோக்குகளை ஜோராய் தருபவர்
தர்மகுலசிங்கத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரளாக தருவது சுவைத்திரள்
சுவைத்திரள் வாழ
வாழ்த்தி மகிழ்பவர்

**கா.தவபாலன்.**

✍ அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய நன்பனும் சுவைத்திரள் ஆசிரியரு மான திரு.தர்மகுலசிங்கம் அவர்க ளுக்கு தீபாவளி மலர் கண்டு மனம் நிறைவு கண்டேன் சிரித்திரன் சுந்தர் அவர்களை ஆத்ம குருவாகக் கொண்டு பல சிரமங்களுக்கு மத்தியிலும் சுவைத்திரளை வெளிக் கெணர்வதையிட்டு எனது வாழ்த்துக் கள். முதன் முறையாக தரமான தாள்களில்தற்கால நிஜங்களின் அட்டை படத்துடன் வெளிவந்து மெரு கூட்டிச் செல்கிறது. ஒரு சபாஷ் "சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டினிலே" "செமினி" மார்கிரெட் செல்லதுரையின் சில பக்கங்களை சுவைத்திரள் தாங்கி வருவது பத்திரிகையின் தரத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றது.
மகுடியின் கேள்வி பதில் பானியிலேயே கருடன் பதில்கள் அமைவது சுவைத்திர ளின் இன்னுமெரு பரினாமம் எனலாம்.


**திரு.பாலரத்தினம்.**
**கண்டி.**

✍ அன்புள்ள சுவைத்திரள் ஆசிரியருக்கு,
அனைத்து சுவைகளையும் திரட்டிக் கொண்டு சற்றுத் தாமதமாய் வந்து சேர்ந்தது சுவைத்திரள். எல்லாப் பகுதிகளும் இனிமை அருமை. என் எழுத்துக்களை தொடர்ந்து பிரசுரித்து வரும் ஆசிரியருக்கு என் மனம் நிறைந்த நன்றியும் வணக்கங்களும். மிகுந்த சிரமங்களுக்கிடையேயும் சுவை குன்றாது சுவைத்திரளை ஆக்கித்தரும் ஆசிரியருக்கு என்றென்றும் எங்களால் இயன்ற ஒத்துளைப்பினை வழங்க இறைவன் அருள்புரியட்டும்.

**மார்க்கிரட் செல்லத்துரை**

✍ அன்புள்ள ஆசிரியர்
சுவைத்திரள் வணக்கம் தாங்களால் அனுப்பிவைக்கப்பட்ட பங்குனி - 2011 சுவைத்திரள் கிடைத்தது. நன்றி.
சுவைத்திரளின் அட்டைப்படம் முதல்
அனைத்துப் பகுதிகளும்
அர்த்தம் பொதிந்தனவாய்
அமைந்து
சிரிக்கமட்டுமல்ல
சிந்திக்கவும் தூண்டும்
சிறப்புக்கள் கொண்டனவாய்
திகழ்கின்றன.
சிரித்திரன் வளர்த்த
சுவைத்திரளே
அதன்
அடிச்சுவட்டில் தொடரும்
பழத்திரளே
சில நரிகளுக்கு
எட்டாக்கனியாக புளித்தாலும்
சிரிக்க விரும்பும் மனிதர்களுக்கே
நீ -
கொட்டும் மலைத்தேனருவி

**ஷெல்லிதாசன்**
**திருகோணமலை.**



"என்ன யோசிக்கிறீங்க
பனை மரத்தடியில"

ஒ எதிர்காலத்திலை
கள்ளுச்சீவ மனிசன்
கிடைக்க மாட்டான்...
குரங்குகளுக்கு சீவ
பழக்கலாம் எண்டு



"அப்பா நீங்க சிறுவர் நலன்புரி நிலையத்திலை வேலை செய்யிறீங்களாமே... பாலியல் பிழை ஏதும் விட்டு நம்ம குடும்பத்துக்கு இழிவு தேடிடாதையுங்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைத்த கிளி

கபீர்



கலைத்திரனின்
இம்மாத "ஸ்டார்"
கவிஞர்.

வெள்ளத்தின் போதொருநாள்
பள்ளத்தில் வீழ்ந்தெழுந்து,
பதறி விரைந்தடைந்தேன்.
பள்ளியொன்றைத் தஞ்சமென!

சேற்றில் புதைந்த புதுச்
செருப்பெடுக்கத் துணிந்தபோது,
ஆற்றில் பெருகி வந்த
ஆற்றுநீர் பள்ளமெங்கும்!
செருப்பிழந்த வேக்காடும்,
இருப்பிழந்த நோக்காடும்
இதயத்தைப் பிழிந்தெடுக்க
இமைமூடிக் கண்ணயர்ந்தேன்.

'ஹாண்ட்கட்'டை மீட்டிணைக்கக்
கல்லடித்துச் சென்றுமச்சான்,
'வாள்'டெடுத்துக் கண்டு சென்ற
வளர்ப்பு மகள் இருவருமே
வீடுதிரும்பாத,' 'போன்' கூட எடுக்காத
விக்கினத்தில் விழிகசிந்தேன்!
போதாக் குறையாய் என்
ஆதாரமாய் இருந்த
வீட்டிலிருந்த கிளி
விடை பெற்றவழி அறியேன்!

அன்றாடம் என்னோடு
அரை நொடியும் பிரியாமல்,
அண்டிக் கிடந்த கிளி!
ஆசைமிகு அழகுகிளி!
பல மொழிகள் தெரிந்தகிளி!
பதிலுரைக்கத் தெரிந்தகிளி!
நினைவாற்றல் உள்ளகிளி!
நித்தரையே அற்றகிளி!
இத்தரையில் எத்திசையில்
பத்திரமோ? செத்ததுவோ?
நித்திரையும் கொள்ளாமல்
நிலைகுலைந்து போய்விட்டேன்!


வெள்ளம் வடிந்து சில
நாட்கள் கடந்த பின்னர்
வெளிச்சத்தில் புவிசிரிக்க.....
வெளியேறி முன்னர் என்
செருப்பறுந்த வீதியிலே
செருப்புழுதி விழிபடர
செல்கின்ற வேளையிலே
செல்லமாய் வளர்த்த கிளி
சேற்றுள் பெரும்பகுதி
சென்னிவரை புதைந்து
கிடந்த நிலை கண்டு
பட, படப்புடன் எடுத்து
கனிமனப் படலத்தைக்
கைகளினால் சுழற்றி,
மார்போடணைத்தபடி
மருத்துவமனை விரைந்தேன்!

புள்ளினங்கள் நோய்தீர்க்கப்
புதிதாய் திறந்த மனை!
கைதேர்ந்த மருத்துவத்தில்
கவர்கண்ட சிறந்த மனை!
மருத்துவரிடம் கிளியை
மனமுருகிக் கையளித்தேன்!
மன்றாடிக்கேட்டேன்!
மருத்துவரும் அவசரமாய்
"சத்திர சிகிச்சைக்குச்
சம்மதமா?" எனக்கேட்டார்!
'சம்மதம்' எனப் பகர்ந்தேன்!
'சரி' யென்று செயல் தொடர்ந்தார்!

கிளியின் வயிற்றை அவர்
கீறிக் குடலெடுத்து,
தேடிப் பல பொருட்கள்
சேர்த்து வயிற்றறைக்குள்
நாடி பிடித்தபடி,
நரம்பலைவைப் பார்த்தபடி.....
கிளியைப் படுக்கவைத்து
மூடி மறைத்தபின்னர்,
மூக்குத் துவாரத்தில்
"சேலைன்" குழாய் செருகி,
சக்தி, வலு மிகைத்த
சாற்றை உறுஞ்சவிட்டார்!
விநாடிப் பொழுதுகளும்
நிமிடங்களாய், மணியாய்
மாறத் தொடங்கியதும்
மாற்றத்தைக் கிளி உடலின்
தோற்றத்தில் கண்டு
தோள்குலுங்கச் சிரித்துவிட்டேன்!

குழாய் இணைப்பைத் துண்டித்து,
துலாக்கமாய மருத்துவரும்
கிளியின் செஞ்சொண்டைச்
செல்லமாய் நுசுக்கிவிட்டார்!
மறுகணமே விழி மலர்ந்து,
ஒருகணம் தன் உடலசைத்து
என் உதடு, செவிப்பறை மேல்
தன்னுடலால் வருடியது!

பேசத் தொடங்கியது!
பாடத் தொடங்கியது!
செல்லமாய் நான் வைத்திருந்த
'செல்போன்' எனும் கிளிதான்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சி பயணம் போகிறாள்

– செங்கை ஆழியான் –

**தொடர் சிரிப்பு நவீனம்** (சென்ற இதழ்த் தொடர்ச்சி.....)

ஆச்சி பயணம் போகிறாள் என்ற இந்தச் சிரிப்பு நவீனம் அதிக ஆண்டுகட்கு முன்பு பிரபல்யமான எழுத்தாளர் செங்கை ஆழியானால் எழுதப்பட்டது. புதிய வாசகர்களுக்காக [illegible] அவரின் அனுமதியுடன் மீண்டும் இந்தத் தொடர் கதையை வெளியிடுகின்றது. (ஆ-ர்)





'செங்கை ஆழியான்' எழுதிய ஆச்சி பயணம் போகிறாள் என்ற சிரிப்பு நவீனம் பழைய கதைதான். இக் கதையை வாசித்து நல்ல சிரிப்புக் கதையெனப் பாராட்டாதவர்கள் எவரும் இல்லை. முதலில் விவேகி என்ற ஏட்டிலும், பின்பு பிரபல்யமான நகைச்சுவை ஏடான சிரித்திரனிலும் இப்போது ஜீவநதியிலும் அது பிரசுரமாகின்றது. இப்போதும் கதைக்கு நல்ல வரவேற்புத்தான்!

வாசகர் சிரிப்புக்கருதி புதிய சிரிப்பு நவீனம் ஒன்றை உருவாக்கித் தருமாறு அவரை நாம் கேட்டு உள்ளோம். அவரும் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

இன்றைய இலக்கிய உலகில் இம்பவனாகத் திகழும் இவருடைய புதிய சிரிப்பு நவீனத்தை இந்த ஆண்டு வாசகர்கள் எதிர்பார்க்கலாம்.
(ஆ + ர்)

பண்டாரவளையில் இருந்து புறப்பட்ட பஸ், அடுத்து கொஸ்லாந்தை என்ற இடத்தில் தங்கியது. கொஸ்லாந்தையில் இருந்து இரு மைல்கள். வெல்லவாயா எனும் இடத்திற்குச் செல்லும் வீதியில், ஓர் அற்புதமான காட்சி இருக்கிறது.

ஏறத்தாழ 4800 அடி உயரத்தில் அமைந்துள்ள அவ்விடத்தில், அமார் 312 அடி உயரத்தில் இருந்து நமது காலடிவரை ஓர் அற்புதக் காட்சி விரிகின்றது.

கொஸ்லாந்தையில் இருந்து புறப்பட்ட பஸ், இரு மைல்கள் வந்ததும் திடீரெனக் கரைப்புறமாக நின்றது. டிரைவர், கொண்டக்டர் யாவரும் இறங்கினர். பிரயாணிகள் பலரும் இறங்கினர்.

வெளியே 'சோ' என்ற இரைச்சல் எழுந்தது.

சிவராசா பஸ் யன்னலூடாக வெளியே தலையை நீட்டிப் பார்த்தான். அற்புதம் உண்மையிலே அற்புதந்தான்.

வானம் பொத்துக் கொண்டதுபோல பெரும் நீர் வீழ்ச்சி ஒன்று 'சோ' வென்ற இரைச்சலோடு கீழிறங்கியது.

"என்ன ராசா?" என்று கேட்டாள் ஆச்சி.

"நீர்வீழ்ச்சி ஆச்சி... இறங்குங்க பார்ப்பம்..."

எல்லோரும் இறங்கினர்.

"நல்லா இருக்கு..." என்றாள் செல்வி.

"ஆகாச கங்கையடா" என்றாள் ஆச்சி.

ஒரு செங்குத்தான மலைப் பாறை முன்னால் உயர்ந்து நின்றது. அதன் மேல் விளிம்பில் இருந்து நீர்வீழ்ச்சியாக இறங்கியது. இறங்குகின்ற இடத்தில் நீராவியும், இடையில் வெண்புகாராகவும், வீழ்ந்த இடத்துப் புகாராகவும் அதன் காட்சி இருந்தது. இவ்வளவு நீர் எங்கிருந்து தான் வருகின்றதோ?

"இது தியலுமா நீர் வீழ்ச்சி... 312 அடி உயரம்" என்றார் ஒருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தியலுமாவா...?" சிவராசா விற்கு புரிந்து விட்டது "இது கிரண்டி ஓயா என்ற நதியில் அமைந்திருக் கின்றது.... செல்வி! வெல்லவாயாவிலி ருந்து திசைமாறாகமவிற்குச் செல்கின்ற வீதி, கிரண்டி ஓயாவின் வலது கரையோரமாக அமைந்தி ருக்கின்றது. இனி நாங்க போகப் போகிற பாதையுமிதுதான்...."

டிரைவர் பஸ்ஸை 'ஸ்ராட்' பண்ணினான். எல்லாரும் போய் ஏறிக் கொண்டோம்.

வெகு தூரத்திற்கு தியாலுமா வீழ்ச்சியின் இரைச்சல் கேட்டுக் கொண்டே இருந்தது.

"இப்ப இதில் நீர் குறைவு.... சில காலங்களில் பார்க்க வேண்டும்.... பொங்கிப் பிரவாகித்துக் கொண்டு விழும்..." என்றார் ஒருவர்.

"இலங்கையில் எத்தனை அற்புத இடங்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்து மக்கள் கிணற்றுத் தவளைகள் தாம். எல்லைச் சண்டையிலும், சீதனம் சேகரிப்பதி லும், வீடு கட்டுவதிலும்தான் அவர்க ளுக்குக் கவனம்..." என்றாள் செல்வி.



என்ன மகனைக் கண்டதும் ஒழிக்கிறீங்க.....
நான் சாராயம் குடிக்கிறது அவனுக்குத் தெரிஞ்சிடக் கூடாது பார்....



'முந்தி இப்படித்தான்...'

"சிங்களவர் முற்றிலும் மாறு... ஆணும் பெண்ணும் சுற்றுப் பிரயாணம் செய்யத் தவறு வதில்லை.... வாழ்க்கையை அனுபவிக்கிறார்கள்....! அவர்கள் வாழ்வதற்காக உழைக்கிறார்கள்... தமிழர் உழைப்பதற்காக வாழ்கிறார் கள்...." என்றான் சிவராசா.

"எங்கடை ஆக்கள் உதை யெல்லாம் வந்து பார்க்கத்தான் வேணும்" என்றாள் ஆச்சி.

"இந்த நீர்வீழ்ச்சிப் பாறையில் கீழே இருந்து ஒரு வெள்ளைக்காரன் மேலை ஏறினவன்..." என்று ஒருவர் யாருக்கோ கூறினார்.

"வெள்ளைக்காரர் இங்கை இப்பவும் இருக்கினமோ?" என்று ஆச்சி சிவராசாவைக் கேட்டாள்.

"இருக்கினம்... இங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் பல இன்னும் அவர்களிடம் உள்ளன... பல தோட்டங்கள் இலங்கையருக்கு இன்று சொந்தமாக, இலங்கையரின் நிர்வாகத் தின் கீழ் வந்துள்ளது..."

"இங்கை இருந்து போன வெள்ளைக்காரர் ஆபிரிக்காவில் தேயிலைத் தோட்டங்களைத் தொடங்கி யுள்ளனர். அனுபவம் உடைய அவர்களை இலங்கை அரசாங்கம் போகச் சொன்னதாலேயே, உள்ளூர் காரார் அனுபவமில்லாது இருப்பதும், அனுபவமுடைய அவர்களால் செய்யப் படும் புதிய நாட்டுத் தேயிலையுடனும் போட்டியிட வேண்டியிருக்கிறது..." என்றாள் சொல்வி.

"அதே பிழையைத்தானே அரசு மீண்டும் செய்ய இருக்குது.... மலைநாட்டுத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களைப் பிடித்து அனுப்ப விழைகிறது... அவர்கள் போய் அந்தமானிலும் நிக்கோபாரிலும் தோட்டங்களில் வேலை செய்தால் இலங்கைத் தேயிலைத் தோட்டங்கள் அவ்வளவு தான்.... சிங்களத் தொழிலாளரின் முதுகு வளையும் என்றால் அது முடியாது..... பொருளாதார அறிவற்ற அரசியல்வாதிகளால், சட்டப் புத்தகங்களைத்தான் புரட்ட முடியும்..." என்றான் சிவராசா.

"இப்ப நேரம் என்ன?...."

"நாலே முக்காலாகுது...."

"இனி வாற இடம் என்ன?"

"வெல்லவாயா....."

"அங்கிருந்து கதிர்காமம் எத்தனை மைல்...?" - இது செல்வி.

"ஏறத்தாழ ஐம்பது மைல் இருக்கும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணி விடாய்க்குத'டா..." என்றாள் ஆச்சி.

"வெல்லவாயாவில் குடிப்பம்..."

தூரத்தில் வெல்லவாயா என்று எழுதியிருந்த கல் தெரிந்தது.

**வெ**ல்லவாயாவில் இருந்து திசைமாறாவிற்குச் செல்கின்ற வீதி ஓரளவு நேரானது; மலைப்பாதையன்று சமதரையை நோக்கி இறங்குகின்ற பாதை அது.

"இனிக் கதிர்காமம் வரையுள்ள பாதை ஒரே காடுதான், ஆச்சி! ஓரளவு யானைகளும், எருமைகளும், பன்றிகளும் நிறைந்த காட்டுப்பாதை... இடையிடையே குடியிருப்புகள் உள்ளன.... சேனைப் பயிர்ச் செய்கைக் குடியிருப்புகள்..."

"முருகா..." என்றாள் ஆச்சி.

செல்வி அவனோடு நெருக்கமாக வந்து அமர்ந்து கொண்டாள்.

மாலை வெயில் மஞ்சள் பூசிக் கிடக்கின்றது. இரு பக்கங்களிலும் காடுகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. சற்று முன்தான் அவ்விடத்தில் மழை பெய்தது என்பதற்கு அறிகுறியாக மழைத்துளிகள் மரங்களில் கவிந்து கிடந்தன.

இருந்தாற்போல கானகத்தின் நடுவே இருந்து ஒரு பெரும் சத்தம் எழுந்தது. செல்வி பயந்து போனாள்.

"அது என்ன?..."

"யானை ஒன்றின் பிளிறல்..."

"ஆனையா....? எங்கேடா..." என்று பயந்து போய் ஆச்சி கேட்டாள்.

"காட்டுக்குள்ளை... ஏன் பயப்படுகிறியள்... அதுகள் றோட்டுக்கு வந்தால்தான் என்ன? தன் பாட்டில் போய்விடும்..."

வெல்லவாயாவிலிருந்து திசைமாறகமத்திற்குப் போகின்ற பாதையில் மூன்று தடவைகள் புதிய அனுபவங்களை ஆச்சியும் ஏனையவர்களும் உணர்ந்தனர். புதுறு வாகலை என்ற இடத்திற்கும் தெலுவில்லை என்ற இடத்திற்கும் இடையில் பஸ் விரைந்து கொண்டிருந்தபோது, முதல் அனுபவம் ஏற்பட்டது.

"மழை தூறி இருக்கு.... ஆனையள் றோட்டுக்கு வரலாம்..." என்று யாரோ ஒருவர் பஸ்ஸிற்குள், கூறினார். கூறிமுடிப்பதற்குள், விரைந்து கொண்டிருந்த பஸ் மெதுவாக நின்றது.

"என்ன என்ன?...." என்று எல்லாரும் திகைப்போடு கேட்டனர்.

டிரைவர் சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றியபடி பஸ்ஸை ஓட்டினான். திரும்பவும் சிறிது தூரம் விரைந்த பஸ் நின்றது.

"என்ன.....?"

"சிகரெட் குடிக்கவாக்கும்...."

"இல்லை.... அதோ ஒரு ஆனை"

"அலியா.....?"

உண்மைதான் 200 யார்களுக்கு அப்பால் வீதியோரத்தில் ஒரு குன்று அசைந்து கொண்டிருந்தது. பஸ் வந்து தூரத்தே நின்றதை அந்த யானை கவனித்து இருக்க வேண்டும். மெதுவாகத் துதிக்கையை ஆட்டியபடி வீதியில் ஏறியது.

"முருகா... அப்பனே?..."

"சண்முகா...."

"விநாயகா...."

- பஸ்ஸினுள் முருகனின் நாமம் ஒலித்தது.

"அரோகரா.... அரோகரா...."

"தனி யானைதான் பொல்லாதது... கூட்டமென்றால் பயமில்லை... தன்பாட்டிற்குப் போய்விடும்...."

டிரைவர் பயந்ததாகத் தெரியவில்லை. அவன் அமைதியாகச் சிகரெட்டைப் புகைத்து எறிந்தான்.

யானை அசையவில்லை. திடீரென பஸ் எஞ்சினை இரைச்சலோடு ஸ்ராட்பண்ணிய டிரைவர், முன் 'லைற்'றுகளை ஒளியோடு பாய்ச்சினான்.

அவ்வளவுதான்.....

வெருட்சியடைந்த அந்த யானை மெதுவாகக் காட்டிற்குள் இறங்கி மறைந்தது. எல்லாரும் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டனர்.

கதி கலங்கிப் போயிருந்த செல்வி, "அது போயிட்டுதா?" என்று கேட்டாள், "முந்தி இப்படித்தான்... கதிர்காமத்திற்குப் போகிறதென்றால் கால் நடையாக வருகிறவை... ஒரே காடும் ஆனையளும்தான்... ஒரு முறை என்ரை அப்புவின்ரை ஒன்றுவிட்ட தம்பி கால்நடையாகப் புறப்பட்டு வந்தார். ஒரு யாத்திரீகள் கூட்டத்தோடு... அவருடைய கால்களில் வாதக்குணம்... அவர் புறப்பட்டார்... எல்லாரும் தடுத்துப் பார்த்தார்கள்.... கேட்கவில்லை... வழியிலை அவருடைய கால்கள் வீங்கிவிட்டன. அப்படியும் அவர் நடந்து வந்தார்.... முடியவில்லை.... 'முருகா முருகா' என்ற நாமகரணம்தான் கால்கள் வீங்கியிருந்தது.... அப்படி இருக்கேக்கை ஆனை ஒன்று எதிர்ப்பட்டது... யாத்திரீகர்கள் முருகா, முருகா என்றபடி நின்றனர்... அது அவர்களை நோக்கி வந்ததாம்... வந்து கால் வீங்கி இருந்த அவரைத் தூக்கிக் கொண்டு காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டது...."

"ஐயோ..." என்றாள், கதையைக் கேட்ட செல்வி "சாக்காட்டிப் போடுதோ?"

"சீச்சீ... முருகனைத் தேடி வந்தவர்களை அவர் கை விடுவாரே? யாத்திரீகர்கள் துக்கத்தோடு வந்தார்கள்... அங்கே ஆளை தூக்கிச் சென்ற அவர் கும்பிட்டுக் கொண்டிருக்கிறாராம்... மாணிக்க கங்கையிலை குளித்ததால் கால் வீக்கமும் வற்றி விட்டது.... எப்படி வந்ததென்று அவருக்கே தெரியாதாம்...."

பஸ் விரைந்தது.

"பொத்..." என்று ஏதோ பஸ்ஸில் குதித்த சத்தம் கேட்டது.

"யானை குதிச்சிட்டுது..." என்றாள் செல்வி.

"எங்கைபிள்ளை?" என்று கேட்டாள் ஆச்சி.

"பஸ்ஸிலை யானை குதிக்குது... விஷர் அது குரங்காய் இருக்கும்..."

உண்மைதான், ஒரு குரங்கின் வால் யன்னலுக்கு வெளியே பாம்பாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

"பஸ் யாத்திரை செய்கிறார் போலிருக்கிறது...." என்றான் சிவராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உதுகளுக்கு பயமில்லையே?" என்று கேட்டாள் ஆச்சி.

"உதுகளுக்கு ஏன் பயம்? எங்களுக்கெல்லோ பயம்".

வீதியின் இரு மருங்குகளிலும் சில குடியிருப்புகள் காணப்பட்டன.

குடியேற்றப்பட்ட மக்கள் ஆங்காங்கு கட்டப்பட்டிருந்த சிறு வீடுகளில் காணப்பட்டனர். வயல்கள் பரந்து, பற்றை நிறைந்து கிடந்தன.

"எவ்வளவு கஷ்டமானது வாழ்க்கை." என்றாள் ஆச்சி.

தனமல்விலை எனும் இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தபோது மூன்றாவது அனுபவம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஒரு கூட்டம் எருமை மாடுகள் வீதியின் குறுக்கே படுத்துக் கிடந்தன. பத்து நிமிடங்கள் வரை வழிவிடாது கிடந்தன.

"உதுகளேன் வழிவிடாது கிடக்கின்றன..." - செல்வி.

"எருமைகள் தானே?" - சிவராசா.

இரவு எட்டரை மணிக்கு பஸ் திசைமாறகமவிற்கு வந்து சேர்ந்தது.

"இன்னும் ஒரு மணித்தியாலத்துள் கதிர்காமத்தை அடைந்து விடலாம்" என்றான் சிவராசா.

ஆச்சி நன்றாக நிமிர்ந்து அமர்ந்தாள்.

"என் அப்பனை, இன்னும் ஒரு அரை மணித்தியாலத்துள் சந்திக்கப் போகின்றேன்" என்றாள் ஆச்சி. அவள் உடலும் உள்ளமும் ஒருங்கே பூரித்தன.

"தண்ணி விடாய்க்குது..." என்றாள் செல்வி.

"என்ன வேண்டும், செல்வி?" என்று அன்போடு கேட்டான் சிவராசா.

"சோடா ஒன்று வாங்குங்க..."

"பார்லியா?"

"இல்லை சோடாதான்..." என்று சிரித்தாள் செல்வி.

பஸ் ஒன்பது மணிக்குப் புறப்பட்டது.

"இங்கிருந்து முந்தி நடந்துதான் போகவேண்டும். ஆச்சி! இப்ப கதிர்காமத்திற்கு திசைமாறகமவிலிருந்து நல்ல பாதை இருக்கிறது...."

"கதிர்காமக் கோயில் கட்டிடம் பெரிதோ?....."

"இல்லை, ஆச்சி! மிகமிகச் சிறியது. சாதாரணமான ஊர்களிலுள்ள சிறிய கோயிலைப் போன்றதே... கோபுரங்களோ, கலசங்களோ கிடையாது. சிறிய கோயில் என்றாலும் கீர்த்தி பெரிது. இப்போது மதில்கள் எல்லாம் கட்டி ஓரளவு பெரிதாகவுளது... முன்பு காட்டின் மத்தியில் ஏகாந்தமாக இருந்தது... இன்று லைற்றுகள் எல்லாம் போட்டு, பழையநிலை இல்லை... புதுமையுளது..."

"ஆண்டவன் எங்கெங்கு எல்லாம் வந்து இருக்கிறான்..."

"பக்தர்களைத் தேடிவர வைப்பதற்காகத்தான்..."

பஸ் நின்றது.

"இறங்கு ஆச்சி... செல்வி, நித்திரையா? கதிர்காமம் வந்துவிட்டுது..."

"முருகனிடம் வந்து விட்டோமா?"

புனிதமான அத்தலத்தில் பக்தியோடு கால்களைப் பதித்தனர். இறங்கிய ஆச்சியின் வழிகளிலோ இருந்த பிரகாசம் சொல்லுந்தரமன்று.

ஆச்சி சுற்றுமுற்றும் பார்த்தாள்.

கடைகள், பஸ்நிலையம், பெற்றோல் செற்.... மின்சாரம் இருளைப் பகலாக்கிக் கொண்டிருந்தது.

"இதுதான் கதிர்காமமா?"

ஆச்சி இருண்டதொரு காட்டைக் கற்பனை செய்திருந்தாள் போலும், சிறியதொரு நகர்போலிருந்த அந்த இடம், ஆச்சி எதிர்பார்த்த இடமன்று.

"கேயில் எங்கே...."?

"கொஞ்சத் தூரம் உள்ளே போகவேணும்... வாங்க..."

பஸ் நிலையத்தில் இருந்து சிறிது தூரம் உள்ளே இறங்கி நடந்தால், முதலில் குறுக்கிடுவது மாணிக்க கங்கையாகும். மாணிக்க கங்கையைக் கடந்து அக்கரைக்குப் போவதற்கும் பாலம் ஒன்றுளது. பாலத்திற்கு அப்பால்' மாணிக்க கங்கையின் வலது கரையில் முருகன் எழுந்தருளி இருக்கிறான்.

"இதுதான் மாணிக்க கங்கை, ஆச்சி..."

"திராத நோய் எல்லாம் தீர்க்கும் கங்கை" என்றாள் ஆச்சி.

"இந்தப் பாலத்தால் அப்பக்கம் போனால் கோயில் மாமி!" என்றாள் செல்வி.

"முந்தி நீ வந்தனியா?"

"ஓம்.... கன வருஷத்திற்கு முன்.."

"இந்தப் பாலத்துக்குப் பக்கத்தில் இருக்கிற படித்துறைக்குத்தான் 'லைற்' இருக்கு.... கங்கையில் குளித்து விட்டுப் போவோம்...."

"இப்பவா... குளிருமே?"

"குளிராது, செல்வி... குளித்துப் பாரேன்... சூடாயும் இராது...."

கார்கள், வான்கள் என்பன மாணிக்க கங்கைக் கரையோரம் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. கலகலப்பு அப்பிரதேசத்தில் ஆட்சி செலுத்தியது.

படித்துறையில் மூவரும் இறங்கினர். மகிழ மரங்கள் மாணிக்க கங்கையின் இரு புறங்களிலும் செழித்து வளர்ந்திருந்தன. அமைதியாக நீர் கங்கையில் ஓடிக்

அடுத்த இதழில் செங்கை
ஆழியான் எழுதிய
ஆச்சி காட்டிய
யாழ்ப்பாணம் என்ற
நகைச்சுவை நவீனம்
ஆரம்பமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது.

சூட்கேசைத் திறந்து உடைகளை எடுத்துக் கொடுத்தான் சிவராசா.

ஆச்சி குளிப்பதற்கு ஆயத்தமாகிவிட்டாள். செல்வி பேசாது நின்றாள்; சிவராசாவும் தான்.

"உடுப்பை மாற்றுங்களேன்...." என்றாள் ஆச்சி.

சிவராசா துவாயைக் கட்டிக் கொண்டான்.

"உடையை மாற்றேன், செல்வி உனக்கு வெட்கமாக இருந்தால் நான் அங்கால் போகட்டுமா?..."

"வேண்டாம்..."

வெட்கத்தினால் குன்றிப் போனாள், செல்வி. அவனுக்கு அவள் முன் சேட்டில்லாமல் நிற்க வெட்கமாக இருந்தது.

மாணிக்க கங்கையில் பலர் அந்த இரவிலும் குளித்துக் கொண்டிருந்தனர்.

"ஆழமோ?" என்றாள் ஆச்சி.

"இல்லை... பயப்படாது இறங்கணை முழங்கால் மட்டுந்தான்..."

ஆச்சியின் கையைப் பற்றி இறக்கிவிட்ட சிவராசா, செல்வியையும் பற்றி இறக்கி விட்டான்.

"அற்புதமான நீர்..."

சிவராசா நீச்சல்போட முயன்றான்.

"ஐயையோ.... நடுவுக்குப் போகாதீங்கோ..." என்று பதறினாள் செல்வி.

"புருஷனிலே கவனம்தான்...." என்றாள் ஆச்சி.

சிவராசா சிரித்தான்.

ஆச்சி எதை எதையோ எல்லாம் வேண்டித் தீர்த்தமாடினாள்.

மூவரும் எறி உடையை மாற்றிக் கொண்டு, பாலத்தைக் கடந்து கோயிலை நோக்கி நடந்தனர்.

"இப்ப நேரே கோயிலுக்குப் போய்க் கும்பிட்டுவிட்டு, மடத்துக்குப் போய்ப் படுப்போம். விடிய கோயில்களுக்கு எல்லாம் போவம் ஆச்சி".

வாயில் சிகரவேல் மின்லைற்றுகளால் தூரத்தில் வரும் போதே தெரிந்தது.

"முருகா..." என்றாள் ஆச்சி.

கோயில் வாசலில் போவதும் வருவதுமாக மக்கள் இருந்தனர்; சாணியின் மணம் நிறைந்திருந்தது; மாடுகள் படுத்துக் கிடந்து அசை போட்டுக் கொண்டிருந்தன.

சிறிய, எழிலார்ந்த கோயிலது. ஆச்சி மெய்மறந்து வணங்கினாள். செல்வி உளமுருக வேண்டினாள்.

"அதுதான் ராமகிருஷ்ண மடம் வாங்க போவம்".

கந்தன் ஆலயத்திற்கு மிக அருகிலுள்ள மடம் ராமகிருஷ்ண மடமாகும்.
கதிர்காமத்தில் பெரிதும், சுத்தமானதும், நல்ல முறையில் இயங்குவதும் ராமகிருஷ்ண மடமாகும். புதிதான கட்டிடம்.

மடத்திற்குள் காலடி வைத்ததும் அங்கு நின்றிருந்த ஒருவர், "சாப்பிட்டீர்களா...? முதலில் உள்ளே போய்ச் சாப்பிடுங்கள்.... பந்தி நடக்கிறது. பிறகு தங்குவதற்கு அறை எடுக்கலாம்..." என்று உபசரித்தார்.

ஆகா.. எவ்வளவு இனிமையான வரவேற்பு? உறவினர்களை அன்புடன் வரவேற்பது போல, ராமகிருஷ்ண மடத்தினர் வரவேற்றனர். மக்கள் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்த ராமகிருஷ்ண பரமகம்சரின் அடியார்கள் வேறு எவ்வாறு இருப்பார்கள்?

அன்பான வரவேற்பே வயிறாற உண்ட திருப்தியைத் தந்தது.

"எவ்வளவு புண்ணியமான பணி..." என்று வியந்தாள் ஆச்சி. எவ்வளவு பேர் மடத்தில் தங்கியிருக்கிறார்கள்?

சாப்பிட்டுவிட்டு அறை ஒன்றில் படுத்திருந்தபோது ஆச்சி கேட்டாள்.

'இம்மடத்தைக் கட்டியது, யார்!"

"ராமகிருஷ்ண பரமஹம்சர் எனும் மகான், மக்களின் நல்வாழ்விற்காக ஆத்மசோதனை செய்த பெரியார்... அவரது வழியைப் பல மகான்கள் பின்பற்றினர், அவர்களில் சுவாமி விவேகானந்தர் முதன்மையானவர்.... அவர் ஸ்தாபித்தவைதான் ராமகிருஷ்ண மடங்கள்... இத்தகைய மடங்கள் உலகு எங்கும் பரந்துள்ளன. மக்களுக்காகத் தொண்டாற்றி வரும் அத்தகைய மடங்களில் ஒன்றுதான் இந்தப் புனித மடம், ஆச்சி! இந்த மடத்தில் சாதி சமய வேறுபாடுகள் கிடையாது. எவரும் வரலாம். தங்கலாம். உணவருந்தலாம்... எல்லாம் இலவசமே... போகும் போது விரும்பினால் ஏதாவது நன்கொடை வழங்கலாம்"

"வேறு இப்படி மடங்கள் இங்கை இல்லையே, ராசா!"

"பல இருக்கின்றன...."

"சாதாரண நாட்களிலேயே இங்கு எவ்வளவு சனம்" என்றாள் செல்வி.

இருந்தாற்போல சிவராசா கேட்டான்.

"செல்வி, ராமகிருஷ்ண பரமஹம்சரையும், அன்னை சாரதா மணி அம்மையாரையும், விவேகானந்தரையும் பார்க்கப் போகிறாயா?"

"என்ன?.... அவர்கள் எப்பவோ அமரர்களாகி விட்டார்களே?"

"ஓமோம்.....! அவர்களின் உருவச் சிலைகளை இம் மடத்தின் முன் அறையில் செய்து வைத்திருக்கின்றார்கள்..... தத்ரூபமாக அவர்கள் உயிரோடு இருப்பது போலவே உளது.... நாளைக் காலை பார்ப்போமே.....?"

'சரி... ம்... நித்திரை கொள்ளுங்கோ.... குஞ்சல்லா....?"

"செல்வி....!"

"நித்திரை.... கொள்ளுங்களேன்"

சிவராசா வலிந்து விழிகளை மூடினான்.

**தொடரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் சிரித்திரன் காலம்



- தொடர் கட்டுரை - திக்கவயல்

8

(சென்ற இதழின் தொடர்ச்சி)

### சிரித்திரனுக்கு பெருமை தந்த எம்.எஸ்.இராமையா!

சிரித்திரன் சஞ்சிகையின் ஆரம்பகால கட்டங்களில் பல சிறுகதைகளை ஆக்கித்தந்தவர்கள் பலர். அம்மையப்பன், பொ.சண்முகநாதன், திக்கம் எஸ்.கே. பாலா, திக்கவயல், தர்மு, பொ.பாலசுந்தரம், சொங்கை ஆழியான், அந்தனி ஜீவா, சங்கு வேலின் கந்தசாமி... இவ்வாறு அந்தப் பட்டியல் நீண்டு செல்லும்.... 1969ம் ஆண்டுக் காலப்பகுதியில் எம்.எஸ்.எம். ராமையா எழுதிய நிலவைப் பிடித்து என்ற கதை நகைச்சுவைக்கு ஒரு மைல் கல்லாக அமைந்துள்ளது. நிலவுக்கு அமெரிக்கர் சென்று வெற்றிக் கொடி நாட்டிய கால கட்டத்தில் நம்நாட்டு நிலையை நகைச்சுவையாக இக்கதை நகர்த்திச் செல்கின்றது. அதனை முழுமையாக இப்போது பிரசுரம் செய்துள்ளோம்.

### நிலவைப் பிடித்து....

ரேடியோவில் இடைவேளை முடிந்து அடுத்த நிகழ்ச்சிக்கான அறிவிப்பு கூறப்பட்டுக் கொண்டிருந்தது. அடுத்த வீட்டிலிருந்து 'கந்தா!' என்று



குரல் கொடுத்தான் முத்து. வாயச் சோற்றோடு இருந்த கந்தையா சரமாக விழுங்கி விட்டு வாசலைப் பார்த்து உரத்த தொனியில் என்ன என்றான். நேரம் எரி சுருக்கா வா

சாப்பிட்டுக் கொண்டிருந்த சோற்றை அப்படியே வைத்து விட்டு அவன் எழும்புவதைக் கவனித்த கந்தையாவின் தகப்பன் வேலு 'என்னது' என்றான்.

'சந்திரனுக்கு கப்பலிலே மூனுபேரு போகப்போறாங்க அதைப் பத்தி ரேடியோவிலே சொல்றாங்களாம்.

'சந்திரனுக்கா?'

'ம்'

வேலு சிரித்துக் கொண்டான்.


கந்தையா கையைக் கழுவி ஈரத்தை வேஷ்டியில் துடைத்தவாறு டிராங்குப் பெட்டி மீது கிடந்த தினசரி ஒன்றை எடுத்துக் கொண்டு அடுத்தா வீட்டுக்குப் போனான்.

'எங்கே போறானாம்?' என்றாள் அவனுடைய தாய்.

ஏளனத்தோடு சிரித்தவாறு 'மனுசன் சந்திர லோகத்துக்குப் போறானாம் அதை ரேடியோவிலே கேட்க இவன் அடுத்த காம்பிராவுக்குப் போறான்' என்றான் வேலு' அவன் சொன்ன விதத்தை அனுபவித்தோஅன்றி மனிதர்களின் 'அகலக்காலை' நினைத்தோ, அவளும் சிரித்துக் கொண்டாள். தொடர்ந்து 'மலையிலேயும் அப்பிடித்தான் பேசாக் கெடந்துச்சு... ஆமா நெசமாப் போக முடியுமா?' என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'நீ ஏன்னு! மானத்தைப் பொத்துக்கிட்டு மேலே போயி சந்திரலோகத்திலே எறங்கிறதுன்னா என்ன லேசா? பேசுறாங்க பேச்சு'

'அதானா'

'புராணத்தில் தான் எல்லாம் சொல்லி வச்சுட்டாங்களே? கடுமையான தவசு பண்ணித்தான் இந்திரலோகம், சந்திரலோகம் எல்லாம் போகலாம். இவன் பன்றி எறைச்சி திம்பிறபய... இவனுக்கு எல்லாம் போக முடியுமா?'

'என்னமோ நான் என்ன கண்டேன்? தோட்டம் பூரா 'கொல்' லுன்னு இதான் பேச்சா இருக்கு...'

அடுத்த வீட்டில் ரேடியோவிலிருந்து விதவிதமான சப்தங்களோடு 'வாய்ஸ் ஆப் அமெரிக்காவின் அஞ்சலும் சமகால மொழி பெயர்ப்பும் ஒலி பரப்பாகத் துவங்கின.

கந்தையாவும், முத்தம்மாவும் அன்றைய தினசரி பேப்பரை விரித்து வைத்துக்கொண்டு அதிலிருந்த விண்கலம் ஆகியவற்றின் படங்களைப் பார்த்த வாறு கேட்டுக் கொண்டிருந்தனர்.

வானொலி அறிவிப்பாளர் பெருமிதம் கலந்த தொனியில் விளக்கமாகச் சொல்லிக் கொண்டிருந்த விஞ்ஞான விளக்கங்கள் எல்லாம், பரிபூரணமாக புரியா விட்டாலும் புரிவது போன்ற உணர்வும் அதே சமயத்தில் அதிக ஆர்வத்தையும் தந்து கொண்டிருந்தது.

'சந்திரனுக்கு போயிடுவாங்களா?' என்றான் கந்தையா.

அவனுக்குச் சந்தேகமாக இருந்தது. முத்து சிரித்தான். 'போயிடு வாங்களா இல்லையாங்கிறது என் பிரார்த்தனை. அப்படியே போக முடியாட்டியும் இந்த மூணு பேரும் நல்ல சோகத்தோட பூமிக்குத் திரும்பிடணும் அது போதும்'

'ஆமாப்பா! பாவம்' என்றான் கந்தையா என்ன துணிச்சல் என்ன சாகசம்! நமக்கு இந்த லயத்துக்கு பரத்திலே முப்பது நாப்பது அடி ஏறவே கை, கால் ஆடிப்போகுது'...

வாசலில் காலடிச் சத்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். வேலு நுழைந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் கையிலிருந்த பீடியை காலுக்குள் போட்டு பாதத்தில் நசுக்கினான் கந்தையா.

'என்ன சொல்லுது ரேடியோ?' என்றவாறு வேலு அங்கு கிடந்த கட்டிலில் அமர்ந்தான். 'இன்னம் கொஞ்ச நேரத்துலே ரொக்கட்டு பயணம் வச்சுருமாம் இப்பச் சொன்னாங்க' என்றான் முத்து.

'இன்னைக்கே போயிடுவாங் களா?'

'இல்லே மூணு நாள் புடிக்குமாம்'

'சரி. மூணு நாள் கழிச்சாவது போயிடுவாங்களா? என்று வேலு கேட்ட போது தான் அவனது நையாண்டி 'சுருக்' கென்று பட்டது முத்துவுக்கு. கந்தையாவைப் பார்த்தான். தகப்பன் பக்கம் முதுகைக் காட்டிக் கொண்டிருந்த கந்தையா கண்ணைச் சிமிட்டினான்' கிழடுகள்! விட்டுத் தள்ளு...'

வானொலியில் விண்கலம் புறப்படும் வர்ணனை ஆரம்பமாயிற்று. 'ரொக்கட் பயணம் வச்சுட்டுது..' என்றான் முத்து. 'அந்தா.. சத்தம் கேட்குது...' வானிலை கோளாறு காரணமாக எழும்பிய சப்தத்தை அவர்கள் ரசித்துக் கேட்டார்கள்!

பரம ஞானியைப் போல வேலு கண்களை மூடிக்கொண்டு சப்தத்தைக் கேட்டுக் கொண்டிருந்தான். முகத்தில் ஏளனப் புன்னகை மாறாமல் இருந்தது. வானொலி அறிவிப்பாளர் பரபரப்பான குரலில் 'இதோ விண்கலம் புறப்படத் தயாராகிறது எல்லாம் சரியாக இருப்பதாக விண்வெளி வீரர்கள் அறிவிக்கின்றார்கள். இன்னும் பத்து வினாடிகளில் விண்கலம் புறப்படும். அதற்கான சமிக்ஞைகள் கட்டளை இடப்படுகின்றன என்று கூறிக்கொண்டிருந்த போது முத்துவும், கந்தையாவும் ஒருவரை ஒருவர் பார்த்து வெட்கத்துடன் சிரித்துக் கொண்டனர். 'இன்னம் போகலே இப்பத்தான் சாகப் போகுது' என்றான் கந்தையா.

வானொலியில் ஆங்கிலத்தில் தலைகீழாக எண்களை எண்ணப்படும் குரல் கேட்டது. 'டென் நைன்டின்... எய்ட்... செவன்...' என்று வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருவர் :** அண்ணே! ஒரு 10 ரூபா மாத்தித் தருவியளே.

**மற்றவர் :** அதுக்கென்ன.

**ஒருவர் :** உங்களிட்டைக் காசு இருக்கோ என அறியத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். தயவு செய்து ஒரு இரண்டு ரூபாத் தந்து விட்டுப்போங்கோ.

**மற்றவர் :** ? ? ?

- திக்கவயல் தர்மகுலசிங்கம் -

'ஸீரோ' என்று சிரித்த போது சிம்ம கர்ஜனையாக உறுமல் ஒலியோடு **விண்ணும்** புறப்பட்டு விட்டதாக **வானொலி** அறிவிப்பாளர் அறிவித்தார்.

வேலுவுக்கு இடப்பக்கத்திலிருந்து பல்லி ஒன்று 'கிச் கிச் சென்று ஒலி கொடுத்தது. உம் வந்த திக்கைப் பார்த்துஉதடோடு உதட்டைப் பிதுக்கிக் கொண்டு தலையை ஆட்டிக் கொண்டான் வேலு. 'ரொக்கட்டு கௌம்பிடுது என்றான் முத்து. 'அடடா இரு தம்பி! இவனாவது பரலோகம் போறதாவது! என்னமோ ஏரோப்பிளான் ரி ஒரு மிஸினிலே போறான். இதுலபோய் கொஞ்சநேரம் விட்டு 'ஆத்தாடி'ன்னு கீழே விழுவான் பாரு...' என்றவாறு வேலு எழும்பினான். மேலே நோக்கிப் பின்னால் கந்தையா முத்துவும் தலையில் அடித்துக் கொண்டானர்.

1921,1969

வேலு நாட்டுப் பக்கம் போய் விட்டுத் திரும்பியிருந்த கண்கள் ஜில்லென்று சிவந்தன. உடல் காற்றுப் போல ஏகி அசதி அமுக்கிக் கொண்டிருந்தது. சம்பளத் தினத்தன்று செலவு பார்க்கும் போது உயிரைப்பிடித்துக் கொள்ள வேண்டும் போல இருப்பது வழக்கென்றாலும் இந்த 'மாமூல்' வாங்குவதில்லை; சாப்பிட்டு முடித்து திண்ணையில் படுக்கை விரித்து உடலைக் கிடத்தாது பக்கத்து வீட்டில் சானி அதிகமாகக் கேட்டு இன்று ரேடியோ கேட்பதற்கு நிறையக் கூட்டம் போலிருக்கி றது. வேலுவுக்கு எரிச்சலாக இருந்தலால் 'என்ன பைத்தியாரத் தனம்! நடக்க முடியாத விசயத்தைப் புடிச்சிக்கிட்டு இதுகள்ளாம். கூத்தாடுதுக.' என்று எண்ணியவாறு எழும்பினான். அடுத்த வீட்டுப்பக்கம் போய் எட்டிப் பார்த்தான். அதே லயத்தைச் சேர்ந்த இரண்டொரு வாலிபர்களுடன் தன்னைப்போல இரண்டு மூன்று கிழட்டுக் கட்டை களையும் பார்த்த போது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவனும் உள்ளே நுழைந்தான்.

வாங்க... வாங்க...' என்று முதியவர்கள் அவனை வரவேற்றார்கள்.

'என்ன ரேடியோ கேக்கவா?' 'ஆமாங்க என்னமோ ஊரு, ஒலகம் பூரா 'டும்மு டும்முன்று இருக்கே... மனுசன் சந்திர லோகத்துக்கு போறானாம்..." என்றான் மாணிக்கம் என்ற கிழவன்.

'ஆங்' கிழிச்சான்!... அவன் சொல்றான்னு நீங்களும் ரேடியோ கேக்க வந்துட்டீங்க...' என்றான் வேலு முத்து கந்தையாவைப்பார்த்து 'ஆரம்பிச் சுட்டுது!' என்றான் மெல்லிய குரலில்.

கல்யாணவீடு மாதிரி கீழே பாய் விரிக்கப்பட்டிருந்தது. வேலு உட்கார்ந்து கொண்டான்.

'என் ஆயுசுக்கு இந்த மாதிரி விசயமெல்லாம் இப்பத்தான்' கேள்விப் படறேன்" என்றான் மாணிக்கம் அவனுக்கு புருவங்கள் மீசை எல்லாம் சம்பூர்ணமான நரை.

'இதெல்லாம் நல்லதுக்கன்னா நெனைக்கிறீங்க... ஒலகம் அழியறத் துக்கு' என்றான் வேலு. தொடர்ந்து 'வெளியே போயி கொஞ்சம் எட்டிப் பாருங்க. மோர்ப்பானையிலே கெடக்கிற மெதப்பு மாதிரி இருக்கு நெலா அதுலே போயி இவன் நாத்தம் புடிச்ச காலை வைக்கப் போறேன்னு சொல்றானே... இவனாலே முடியுமா... திமிருல்ல இது...'

'அதுவும் நம்ம பூலோகம் மாதிரிதான் இருக்குன்னுல்ல சொல்றாங்க'

யாரு பார்த்தாங்களாம்? அதெல்லாம் சும்மா! ஒரு யுகம். முப்பத்து முக்கோடி தேவருங்க இருக்கிற எடம் என்ன கல்லும் மண்ணுமாவா



**நண்பர்:** பார்த்தீர்களா? சொன்னபடி சொன்ன நேரத்துக்கு அம்புலி வீரர்கள் பசுபிக் சமுத்திரத்தில் அதிசயிக்கும்படி இறங்கி விட்டார்கள்.

**மற்றவர்:** இதென்ன அதிசயம் நேற்று நான் புறப்பட்டு வந்த யாழ்தேவி சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்து விட்டதே.

- ச.ரா.பா.சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும்?'

மாணிக்கம் ரொம்பவும் வீரச மான நகைச் சுவையைக் கேட்டது போல கண்களைச் சுருக்கிக் கொண்டு சிரித்தான். தெரியாத ஒன்றைப் பற்றி மிகத் தாராளமாகவும் மதிப்புக் கொடுத் தும் பண்ணிய இம்மாதிரிக் கற்பனை களை அவனும் நம்பியதுண்டு தன் வீட்டுச் சிறசுகளுக்குச் சொன்னது முண்டு. ஆனால் இப்போது அந்தச் சிறசுகள் தான் பேப்பரைப் பார்த்து என்னென்னவோ சொல்கின்றன!

முத்து அவசரமாகக் கையை ஆட்டினான் 'கொஞ்சம் பொறுங்க என்னமோ அறிவித்தல் போகுது' என்றான். வானொலி அறிவிப்பாளர் விண்கலத்திலிருந்து 'ஈகிள்' பிரியப் போகும் விஷயத்தை அறிவித்து விட்டு 'இன்னும் சில மணி நேரங்களில் மனிதன் சந்திரனில் இறங்கும் அந்த மகத்தான சம்பவம் நடைபெற இருக்கி றது. எல்லாம் சரியாக நடை பெற்றால் இந்த சாதனை மனிதகுல வரலாற்றில் ஓர் இணையற்ற சாதனையாக இருக்கும் என்று பிரகடனம் பண்ணிக் கொண்டிருந்தார்.

'ம் க்கும்' என்று முனகிக் கொண்டான் வேலு' எல்லாம் சரியா நடந்தாத்தானே? பய மகன்க ஆடி மாசத்திலேயில்ல புறப்பட்டிருக்கான் நாமல்லாம் அறிஞ்ச தெரிஞ்ச ஆடியிலே ஒரு காரியம் துவங்குவோமா?' என்றான்.

நாமதான் அதல்லாம் பார்க்கி றோம் வெள்ளைக்காரனுக்கு ஆடியா வது ஆவணியாவது!'

முத்துவுக்கு ரொம்ப நேரமா கவே எரிச்சல் குறிப்பாக வேலு மீது. 'அது தெரியல்ல! பேசாமே ரேடியோ வைக் கேளுங்க அவனெல்லாம் என்ன கொஞ்சப்படிப்பா படிச்சுட்டு இதையெல்லாம் செய்றான்?' என்றான்.

கிழவர்கள் மௌனமாயினர் முத்து 'சள''ளென்று விழுந்தது வேலுவுக்கு என்னபோ போலிருந்தது மெள்ள எழும்பினான்.

'என்ன எழும்பிட்டீங்க... ராவு மூணு மணி வரைக்கும் சொல்றானு களாம்' என்றான் மாணிக்கம்.

'இதைப் போயி என்னங்க கேக்கிறது... பாவம் அவன்க மூணு பேரும் அநியா யமா சாகப் போறாங்க அந்த லோகத்துலே போயி எறங்க முடியும்னா நெனைக் கிறீங்க' தீஞ்சு கருகிச் செத்துப் போகப் போறானுக' என்றவாறு வேலு வாசலை நோக்கி நடந்தான்.

அவன் தலை மறைந்தது 'அமெரிக்கக்காரன் சந்திரனிலே போய் எறங்கினா இவருக்கு என்ன கொறைஞ்சு போகுது ஏம்பா!.... கந்தையா...' என்றான் முத்து. கந்தையா வாசபுறம் பார்த்துவிட்டு 'இரவு பாட்டன் வீட்டு சொத்துல்ல. இருக்காதா பின்னே?' என்றான் எல்லோரும் சிரித்தார்கள்.

நேரம் செல்லச்செல்ல பரப்பில் 'சூடு' பிடிக்கத் துவங்கியது. மிகவும் பரபரப்பான குரலில்' கடந்த நான்கு நாட்களாக உலகம் பூராவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணம் வந்துவிட்டது. என்று ஒலிபரப்பாளர் தொடர்ந்து விண்கலத்திலிருந்து பிரிந்த 'ஈகிள்' இப்போது நிலா தரையை நோக்கி இறங்கி கொண்டிருக்கிறது. உங்கள் வீட்டில் உறங்கிக் கொண்டிருப் பவர்களை எழுப்பிச் சொல்லுங்கள் என்று உற்சாகமாகக் கூறினான் மாணிக்கம். எழும்பி வாசலருகிருந்து நின்று, அந்த வீட்டுத் திண்ணைக்கும் அடுத்த வீட்டுத் திண்ணைக்கும் மத்தியில் பலகை யால் தடுப்பு எழுப்பியி ருந்தால் கூரையைப் பார்த்தவாறு அண்ணே... வேலண்ணே..."

'என்னாங்க'

'தூக்கமா?'

'இல்லே முழிச்சிக்கிட்டு தான் இருக்கேன்

வாங்க கப்பல் எறங்கத் தொவங்கிட்டுதாம்...'

'இல்லே நீங்க கேளுங்க உனக்குத்தான் இங்கே நல்லா இருக்குதே' மாணிக்கம் உள்ளே வந்தான்.

ரேடியோவில் இரண்டு மூன்று குரல்கள் பதட்டமும் பரபரப்பு மாகக் கேட்கத் துவங்கின.

"இதோ சந்திரத் தரை தனக்குத் தெளிவாக நீல் ஆம்ஸ்ரோங் கூறுகிறார்.."

முத்து எழும்பி பரன்மீது கை யால் துழாவி தயாராய் தொங்கி வைத்தி ருந்த பட்டாஸ் கட்டு ஒன்றை எடுத்துப் பிரித்தான். விண்வெளி வீரர்கள் இருவ ரும் நலமாக நிலாத்தரையில் இறங்கி விட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டதும் வெளியே பட்டாஸ் சப்தம் படபடத்தது.

அதிகாலைச் சுருக்கலும் பட்டாஸ் சத்தமும் தீபாவளியை ஞாபக மூட்டின.

'ரெண்டு பேரும் எறங்கிட்ட னுங்களே! என்றான் மாணிக்கம்! அடுத்த வீட்டுக்கு அஞ்சல் செய்தான். 'சா, இப்பத்தானே இறங்கி இருக்கானுக! என்ன நடக்கப் போகுதுன்னு பார்த்து விடுவோமே! ஆனா ஒண்ணு மாத்திரம் திட்டம், இவங்க மூணு பேரும் உசுரோட திரும்ப மாட்டானுக, நீங்க வேணு முன்னா பாருங்க' என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே நுழைந்து கொண்டிருந்த முத்து நின்று அவன் சொல்வதைக் கேட்டுவிட்டு, ஆமா! போகவே முடியாதுன்னு சொல்லிக்கிட்டு இருந்தீங்க இப்பபோய் எறங்கிட்டான். இப்பவர மாட்டான்னு... சொல்றீங்களாக்கும்? என்றான்.

அப்பிடியும் சில விசயம் இருக்கப்பா! வந்தா திரும்ப போக முடியாது, போனாலும் திரும்ப வர முடியாது. என்று அழுத்தமாகச் சொல்லி விட்டு என்ன நான் சொல்றது வெளங்குதா? என்றான்.

மாணிக்கம் 'கெக் கெக் கெக்கென்று சிரித்தபோது முத்துவுக்க அசடு தட்டியது. 'சீ! ஊத்தைப் பேச்சு பேசுறது!' என்ற மெல்ல ?முனகி விட்டு உள்ளே நுழைந்தான்.

முத்து இன்னும் நிற்கிறான் என்ற நினைப்பில் 'என்னமோ போய்ட்டான்னு சொல்றீங்க... எப்பிடி வர்றான்னு பார்ப்பம் வந்துட்டான்னா நான் என் ஒரு பக்கத்து மீசையை வழிச்சிக்கிறேன்.' என்று வேலு சூளுரைத்தான்.

மாணிக்கம் அதை உள்ளே சொல்லிக் கொண்டிருந்தான்.

ஜுலை 24, 1969

ரேடியோவில் முடிவுரை கூறிக்கொண்டிருந்தார்கள் 'விண்வெளி யாத்திரை சம்பந்தமான இந்த விசேஷ ஒலிபரப்பு இத்துடன் முடிவடைகின்றது. விண்வெளி யாத்திரை சம்பந்தமான இந்த விசேஷ ஒலிபரப்பு இத்துடன் முடிவடைகின்றது. விண்வெளி வீரர்கள் மூவரும் மனித குலத்தின் பிரதிநிதிகளாக சந்திரயாத்திரை செய்து சுருக்கமாகத் திரும்பி பசுபிக் சமுத்திரத்தில் வந்து இறங்கி விட்டார்கள் இவர்களது சாதனைக்கு உலகம் பூராவும் வாழ்த்துக்கள் வழங்கும் இவ்வேளையில் நாமும் நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.' என்று கூறி அறிவிப்பாளர் ஒலிபரப்பை நிறுத்த முத்துவும் நீண்ட பெரு மூச்சோடு ரேடியோவை நிறுத்தினான்.

சிலைகளைப்போல ரேடியோவுக்கு முன்னால் அமர்ந்திருந்த அனை வரும் கனவிலிருந்து விழிப்பது போல உணர்வு பெற்றனர். வேலு பாயில் விரல்களால் தட்டியவாறு முகட்டைப் பார்த்த படி இருந்தான்.

இன்று மாணிக்கம் வரவில்லை. நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிடில் 'என்னமோ சொன்னீங்களே ...' என்று சிரித்துக் கொண்டே ஏதாவது சொல்லியிருப்பான். இருந்தது அத்தனையும் இளவட்டங்கள். ஒருவரும் ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால் அதுவே அவனைப் பார்த்து ரகசியமாய் சிரிப்பது போலிருந்தது.

வெளிறிய முகத்தோடு முத்துவைப்பார்த்து 'சாமீங்கிறோம் 'பூதமாங்கிறோம் எல்லாம் பொய்யாவுல்ல போச்சு!

## சிரித்திரனுக்குப் பெருமையளித்த காசி ஆனந்தனின் மாத்திரைக் கதைகள்.

1965ம் ஆண்டிலிருந்து சிரித்திரன் வெளிவரத் தொடங்கியது. சிரித்திரன் சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்ட போது அது ஒரு சிறிய வரைதல் கொப்பி போன்ற அமைப்பில் வெளிவந்தது. அந்த அமைப்பு ஒரு பரிசோதனை அமைப்பா கவே இருந்தது. இரண்டு ஆண்டுகளின் பின்பு அது தனது அளவுத் திட்டத்தை மாற்றியமைத்துக் கொண்டது. புதிய எழுத்தாளர்கள் பலர் களம் இறங்கினார்கள். அவர்க

**காதல் வாழ்க...**
ஒரு புத்தகத்தின் தலைப்பு
**கல்யாணம் ஒழிக...**
இப் புத்தகத்தில் ஒரு வாசக அன்பரின் குறிப்பு.

ளில் ஒருவர் பிரபல்யமான கவிஞர் காசி ஆனந்தனாகும்.

சிரித்திரனில் ஒரு புதிய வடிவமாக மாத்திரைக்கதைகள் என்ற கதையினை இவர் எழுதினார். சிரித்திரன் ஆசிரியர் தலையகத்துக்கு அருகாமையில் அவை பெட்டி கட்டிப்பிரசுரிக்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் தமிழ்த்தேசீயவாதம் அபரீதமாக வளர்ச்சியடைந்தது. அதற்கு ஏற்றவாறு மாத்திரைக்கதைகளும் வேகமாக வளர்ச்சியடைந்து வந்தன. 1980ம் ஆண்டுவரை இந்த மாத்திரைக் கதைகள் சிரித்திரனில் கோலோச்சி வந்தன.

அரேபியக்கதைகளில் உப கதைகள் உண்டு. பஞ்சதந்திரம், கம்பராமாயணம் உள்ளிட்டு உப கதைகள் இருக்கின் றன. அவைகள் மாபெரும் கதைக்குள் இருக்கும் கடுகுக்கதைகள். அந்தக் கதைகளுக்கும் மாபெரும் அர்த்தங்கள் உண்டு. ஆனால் படிப்பவர்கள் அதன் தன்மையை நோக்குவதில்லை. மாத்திரைக்கதைகள் சில உண்மைகளை நேரடியாகச் சொல்லாமல் பாத்திரங்களின் வாயிலாகவே சொல்லியது. அது எழுதியவரின் இலட்சியக் கோவையாக இருக்கிறது, ஆனால் சொல்லும் பாணியே மறை முகமாக உள்ளது.

சிரித்திரன் இதழில் அரைப்பக்கத்தையே தாண்டாது ஒன்று அல்லது இரண்டு மாத்திரைக்கதைகள் வெளிவந்தன. அவைகள் வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தன. இக்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வெளிவந்து பல ஆண்டுகளின் பின்பும் பலர் இக்கதைகளைச் சாதக மாகவும், பாதகமாகவும் விமர் சித்து உள்ளார்கள். அது எப்படி என்றாலும் இக்கதைகளின் இருப்புத் திட்டம் சரியாக அமைந்தமையால் இன்றும் விமர்சகர்கள் கல் எறியும் கதைகளாக இருக்கின்றன. கவிஞர் காசி ஆனந்த னின் பின்னால் மாத்திரைக் கதைக ளின் கதாநாயகனாகவும் கவிஞர் காசி ஆனந்தன் இருக்கின்றார். இவ்வாறு அவரால் எழுதப்பட்ட கதைகள் 250ற்கு மேல் உள்ளன. சிரித்திரனில் வெளியான பல மாத்திரைக் கதைகளைக் கீழே காணலாம்.

## மாத்திரைக் கதை

-காசி ஆனந்தன்-

### சரக்கு

பழங்களைத் தாங்கி நின்ற மாமரம் கர்வம் ஏதும் இல்லாமல் அணில்க ளுக்கும் பறவைகளுக்கும் அவற்றை வழங்கி மகிழ்ச்சியில் திளைத்திருந் தது.

மாமரத்துக்குப் பக்கத்தில் ஒரு கள்ளி மரமும் வாழ்ந்தது. எந்தப்பழ மும் இல்லாத கள்ளிமரம் தன் அருகில் யாரும் நெருங்காத படி நிறைய முட்க ளைத் தாங்கிச் செருக்குற்று நின்றது.

மாவின் கனிகளை உண்டு களித்திருந்த குயில் கள்ளியின் திமிர் கோலத்தைக்கண்டு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டது.

மாமரத்தைப் பாராட்டும் வகையில் அது கூறியது:

"சரக்குள்ளான் செருக்கில்லான்."

கவிஞர் காசி ஆனந்தனின் மாத்திரைக் கதைகள் சிரித்திரன் வளர்வதற்கும் துணை நின்றன.

-காசி ஆனந்தன்-

## மாத்திரைக் கதை

### உயர்வு

சாமப் பொழுதில் பனித்துளி கள் பூமியில் விழுந்துகொண்டி ருந்தன. அப்பனித்துளிகளைப் புற்கள் அன்றாடம் தாங்கி உயர்ந்து வளர்ந்து செழித்து நின்றன.

"இந்தப் புற்கள் அழகாக உயர்ந்து செழிப்புற்றிருக்கின்றனவே. என்ன காரணம்?" என்று ஒரு நாள் காகத்தைப் பார்த்து மணிப்புள் கேட்டது.

ஒரு நிமிடம் காகம் அமைதி யாக இருந்தது. பின்பு அது மணிப் புள்ளைப் பார்த்து "தோழா! வானம் ஏங்கி விட்ட கண்ணீரை புல் தாங்கி வந்தது. அதனால் அது உயர்வுற்றது. "என்று அமைதியாகப் பதிலுரைத்தது. இரத்தினச் சுருக்கமாகக் காகம் சொன்னது:-

"ஏங்குவான் கண்ணீரைத்
தாங்குவான் உயர்வான்"

கவிஞரின் சிந்தனைக்கும் எழுத்தின் நடை தளமிட்ட சஞ்சிகையும் சிரித்திரன். இதன் மூலம் தமிழ்த் தேசிய வாதத்தை வளர்த்த பெருமை யும் சிரித்திரனுக்கே உரித்தாகின்றது.

### இலக்கியத்தில் சிரித்திரன் காலம்

சிரித்திரன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக வெளிவந்தபோது 1968ம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு குறு நாவல் சிரித்திரனில் வெளிவந்தது தீவகம் என்ற தலைப்பிட்டு எழுதி அன்னலட்சுமி இராசதுரை அவர்களால் அது எழுதப்பட்டது. வீரகேசரியின் துணை ஆசிரியராகப் பணியாற்றிய



அன்னலட்சுமி இராசதுரை

இவர் இதனை விடப் பல குறுநாவல்களையும் வெளி உலகில் எழுதியுள்ளார். அவற்றில் நெருப்பு வெளிச்சம் என்ற நாவலும் அடங்கும்.

சிரித்திரன் சஞ்சிகை பற்றிய ஆய்வில் ஈடுபட்டபோது 1968ம் ஆண்டுக்காலப் பகுதியிலேயே இவரு டைய ஆக்கங்கள் இடம் பெற்றிருந்தன. பின்பு காணப்படவில்லை.

### தமிழ் மக்களின் கலாசாரக் கட்டமைப்பில் பாரிய பணியாற்றிய மிஸ்டர் & மிஸிஸ்டாமோதரன்


சிரித்திரன் சஞ்சிகைக்கு அதிக பங்களிப்பு வழங்கிய பாத்திரங்களில் ஒன்று மிஸ்டர் & மிஸஸ் டாமோதரன் அவர்களாகும். சவாரித்தம்பர், மைனர் மச்சான் போன்ற பாத்திரப் படைப்புகள் தினகரன், வீரகேசரி, மித்திரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளிவந்து இருக்கின்றன. ஆனால் மிஸ்டர் & மிஸிஸ் டாமோதரன் என்ற பகுதி சிரித்திரன் சஞ்சிகையில் மாத்திரமே வெளிவந்தது. அவை 1967ம் ஆண்டுக் காலப் பகுதியில் இருந்து 1985 வரை தொடர்ச்சியாக வெளி வந்தன. அவை சிரித்திரன் ஆசிரிய ரால் சிந்திக்கப்பட்டுக் கருத்தும், கார்ட்டூனும் அவரேயாகச் சொல்லப்பட் டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மேட்டுக்குடியினர் எவ்வாறு தமிழ் மொழியினையும், கலாசாரத்தினையும் மறந்து வாழ்கின்றனர் என்பதை அடையாளப்படுத்திய சின்னங்கள் இவை. கடந்தும் பல ஆண்டுகள் வாழப் போகும் இந்தக் கார்ட்டூன் கருவூலங்களில் சிலவற்றைக் கீழே காணலாம்.

**M R S டா மோ டி ரா • ன்**




Mrs. டா :- டார்லிங்...

Mr. டா :- யேஸ் டார்லிங்.

Mrs. டா :- டமில் பாஷா சிலோனில் இருந்து அலிஞ்சு விடுமா?

Mr. டா :- வட் நொன்சன்ஸ்! எங்க போல தன்மான டமிலர் இருக்கும் வரை அலியாது.

**M R S டா மோ டி ரா • ன்**



Mrs. டா :- டார்லிங்...

Mr. டா :- யேஸ் டார்லிங்.


Mrs. டா :- வட்ஸ்யூ மீன் பை புள்ளடி டார்லிங்?

Mr. டா :- அது டார்லிங் அரசடி, நெல்லியடி புளியடி மாதிரி ஒரு பிளேஸ் டார்லிங்

Mrs. டா :- தாங்யூ டார்லிங்

Mr. டா :- வை நொட் டார்லிங்

**M R S டா மோ டி ரா • ன்**



Mrs. டா :- டார்லிங்...

Mr. டா :- யேஸ் டார்லிங்.


Mrs. டா :- வட்ஸ் தீவாளி டார்லிங்?

Mr. டா :- யூடோ நோ திஸ் டார்லிங்.... இது டார்லிங் தீ அணைக்கிற துக்கு யூஸ் பண்ற ஒரு வாளி டார்லிங்.

Mrs. டா :- அப்ப டார்லிங் தீ அணைக்க எங்கவீட்டிலை ஒரு தீவாளி வாங்கி வைப்பமா?

Mr. டா :- வை நொட் டார்லிங்

**M R S டா மோ டி ரா • ன்**



Mr. டா :- டார்லிங்...

Mrs. டா :- யேஸ் மை டியர்.


Mr. டா :- நாங் டமில்கலா மந்தம் அமைக்கப் போறன்.

Mrs. டா :- நீங்க ஒரு டமில் பிக்சர் கூடப் பார்க்கிறதில்லை.... வட் கலா மந்தம்?

Mr. டா :- பைத்தியக்காறி.... நாங்க 'செம்மீன்' படம் பார்தது மறந்து போனதா....

Mrs. டா :- ஐ ஆம் சொறி டார்லிங்.

**M R S டா மோ டி ரா • ன்**



Mrs. டா :- டார்லிங்... சாவகச்சேரி ஜாப்னா விலா? அல்லது பட்டிக்கலோவிலா?

Mr. டா :- டோக்ட் பீ சில்லி.... அது ட்றிங்கோமலியில்.

Mrs. டா :- ஒ ஐ சி..... தாங்யூ டார்லிங்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆண்கள் குணமே அப்படித்தான்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1977ஆம் ஆண்டில் சிரித்திரன் ஆசிரியர்



சிரித்திரன் சஞ்சிகையில் மகுடி என்றொரு பகுதி சிரித்திரனில் வெளியாகி இருந்தது. அது கேள்வி, பதில் பகுதியாகும். தமிழனைத் தட்டி எழுப்பியவர் யார்? என ஒரு வாசகர் மகுடியிடம் கேள்வி எழுப்பி இருந்தார். அதற்குப் பதில் கூறிய மகுடியார் அநுராதபுரத்தில் ரயில் ஏறிய சிங்களரே தமிழனைத் தட்டி எழுப்பி யவர் எனக்கூறி இருந்தார். நகைச் சுவை யாக அன்று தமிழ் உலகம் இந்தப் பதிலை ரசித்தது. இந்தப் பதிலால் திருப்தி அடையாது சினம் கொண்ட வர்களும் உண்டு.

1977ம் ஆண்டு யூலைக் கலவரத்தின்போது அநுராதபுரத்தில் ரெயில் வண்டி வந்து நின்றது அன்று உண்மையாகவே சிங்களக் காடையர்கள் தமிழ் மக்களைத் தட்டியே எழுப்பி விட்டார்கள். நித்திரையில் வீடு தேடி ஓடிய தமிழ் மக்கள் ஆண்களும், பெண்களும் நையப் புடைக்கப்பட்டார்கள் பெண்களின் கழுத்தில் கையில் இருந்த தங்க நகைகள் யாவும் உருவி எடுக்கப்பட்டன. பயத்தினால் தமிழ் மக்கள் நடுங்கினார்கள் பல பெண்கள் பயத்தினால் கண்ணீர் சிந்தி அழுதார்கள். பயத்தினால் பல பெண்கள் ரயிலில் சிறுநீர் கூடக் கழித்துவிட்டார்கள். சுமார் இரண்டு மணி நேரம் சட்டத்துக்குப் புறம்பாக இந்தக் களேபரம் அநுராதபுரத்தில் இடம்பெற்றது.

இந்த ரயிலில் சிக்கிய சிரித்திரன் ஆசிரியர் 1977ல் சொன்ன நேரடித் தகவல்கள் இவை. 1977ம் ஆண்டு இனக்கலவரம் பற்றி எழுதிய திரு. செங்கை ஆழியான் அவர்களும் இந்தச் சம்பவம் பற்றித் தனது 'ஆடிக் கலவரம்' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ் மன்னன் எல்லாளன் ஆண்ட அநுராதபுரத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இந்தச் சோகசம்பவமே பின்பு தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் ஆயுதமாக வெளிப்பட்டது என்பதை எவரும் மறுக்க முடி யாது.

அநுராதபுரத்தில் 1977ம் ஆண்டுக்கு முன்பு சிரித்திரன் பத்திரிகையும் பிரபல்யமான பத்திரிகையாக விற்பனையாகிக் கொண்டிருந்தது. வேம்படி அரசடி என்ற பெயரில் தமிழ் வட்டாரங்களே இருந்தன. அன்று அடித்துத் துரத்தப்பட்ட தமிழன் இன்றும் உள் வாங்கப்படவில்லை. வவுனியாவில் சிங்கள மக்கள் குடியேறி சிங்கள பிரதேச செயலகப் பிரிவுகளே செயற்படுகின்றன. ஆனால் அன்று கலைக்கப் பட்ட தமிழன் அநுராதபுரம் தமிழ்ப் பிரிவு என்ற பகுதிக்குள் கூட வாழவழியற்று அரசினால் மீள்குடியேற்றம் செய்யப்படாது அகதியாக்கப் பட்டதே உண்மை! இந்தக் காரணம் பற்றியே மகுடியார் தனது கேள்வி பதில் ஒன்றில் பின்வருமாறு கூறினார்.

கே: பெரும்பான்மை, சிறுபான்மை உறவு எப்படி அமைய வேண்டும்.

ப: தாயின் மடிபோல் இருக்க வேண்டும். தாயின் மடியில் உயர்வு தாழ்வு இல்லையே!

ஆங்கில இலக்கியத்தில் பேர்னாட்ஷா போல் தமிழ்க் கார்ட்டூன் உலகில் நின்று நிலை பெறத்தக்கவர் சிரித்திரன் சிவா. அவர் நாமம் வாழ்க.

### விஸ்கி அறிக்கை



இலங்கையின் வடக்குக்கிழக்குப் பகுதிகளில் ஜப்பான்காரர்கட்கு ரொம்ப அக்கறை. சுரக்காக 1?ஆ வை இலங்கைத் தமிழர்களுக்கு நல்லுபதேசம் செய்ய யசூசிஅக்காசி இலங்கைக்கு வந்திருந்தார். பாருங்கோ......இலங்கை வட கிழக்கிலை இவங்க அக்கறை எடுக்கிறதுக்குள்ள சுனாமி வந்து ஜப்பானின் வட கிழக்கிலை அக்கறை எடுத்திருக்குது. பல நகர்கள்அழிந்த பரிதாபம் நடந்திருக்கு.....

வட கிழக்கிலை அக்கறை கொண்ட யசூசி அக்காசி வீட்டிலையும் சுனாமி வந்து பாஞ்சதோ தெரியல்ல.... பத்திரிகைகளிலும் ஒரு ' நோட்' கூட வரவில்லை. யசூசி அக்காசி ஜப்பானின் வட கிழக்கைப் புனரமைக்க முயற்சி எடுப்பாராக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணபதிச் சித்தருடன் சிரியுங்கள்

**முதலாளி :** பாண் இருக்கிற கண்ணாடி பெட்டியினை பூட்டு போட்டு ஒட்டி வை. பாண் இனி களவு போக பாக்கும். யாரும் வந்து கேட்டால் பூட்டை திறந்து எடுத்துக் கொடுத்து ஒட்டிவிடு.

**தொழிலாளி :** சரிங்க முதலாளி

**ரவி :** நீ ஏன் இப்ப சாரம் கட்டு வதில்லை

**பாலு :** சம்சாரம் வந்தவுடன் விட்டு விட்டேன்.

**1ம் நாய் :** நாய்க்குணம் என்று மனிதர்கள் ஏன் சொல்கிறார்கள்.

**2ம் நாய் :** ஐஸ்கிறீமை நக்கிச் சாப்பிடுவதால்

**தூக்குத்தண்டனை கைதியை பார்த்து**

**பொலிஸ்:** உனது கடைசி ஆசை என்ன?

**கைதி :** சுவைத்திரள் பத்திரிகை வாசித்து சிரிக்கவேண்டும்.

**பக்தரின் நேர்த்தி**

பிள்ளையார் அப்பா உனக்கு 108 தேங்காய் உடைக்க நேர்த்தி வைத்தேன். தேங்காய் விலை குறைஞ்சதும் உடைக்கிறேன் என்னை மன்னித்துவிடு.

**மனைவியின் புலம்பல்**

உங்களைத்தானே கடையில் வேண்டிக் கொண்டு வந்த தேங்காய் இரண்டும் அழுகல் கடையில் உடைத்தப் பார்த்து வேண்டி வந்து இருக்கலாமே?

**ஒருவர் :-** ஏன் அந்தப் பிரேத ஊர்வலத்தில் பாடையை ஆடி ஆடிக் கொண்டு போகின்றார்கள்.

**மற்றர் :-** இறந்தது சாராயத்தவறணை முதலாளி

**நர்ஸ் :-** டாக்டர் 10ம் நம்பர் கட்டில் நோயாளிக்கு கடுமையாய் சேடம் இழுக்குது உடனே வாங்க.

**டாக்டர் :-** அவருடைய மனைவிக்கு உடனே டெலிபோன் பண்ணி வரச்சொல் எல்லாம் அடங்கிவிடும்.

**புதிய மனைவி முதல் இரவு அன்று**

**மனைவி :-** என்ன உங்களைத் தானே நானும் வந்ததில் இருந்து பார்க்கிறேன் பாலும் ஆறிப்போச்சு புத்தகத்திலை ஆழ்ந்து போய் இருக்கின்றீர்கள். இன்று முதல் என்று தெரியாமல் என்ன புத்தகப்படிப்பு

**கணவன் :-** சுவைத்திரள் புத்தகம் வாசித்தால் வைக்க மனம் வராது பாலும் சுவை நீயும் சிரித்தலும் சுவை கடைசிப் பக்கம் வாசிக்கிறேன் கொஞ்சம் பொறு.

## தேங்காய் 2 பேசுகிறது




என்னடி சூரியகாந்தி
நாங்க விலை கூடினாப்
பிறகு போற வாறவங்க
எல்லாம்
எங்களைத்தான்
பாக்குறாங்க............
பொம்புளைங்களைப்
பாக்குறாங்கல்லையே....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# தேங்காய்த் தேம்பல்



**வெண்பாவின் தேர்வல்**

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - தாமணிப்பே
நாளும் பொழுதும் உன் நாமமது நாவுரைப்பேன்
ஆளும் இறைவா நான் கோருவேன் ●●●கள் தா!

**தேங்காய் அகராதி**


**இளநீர் -** தேங்காய் விலையேற்றத்தால் மானிடர் விட்டுத் தேங்கிய கண்ணீர்.
**விநாயகர் -** சிதறு தேங்காய் மறந்து போன தெய்வம்!
**பனை -** ஒரு வாழை ஒரு ரூபாய் ஒரு தேங்காய் விற்ற ஞாபகப்படுத்த வேண்டிய வை.
**தேங்காய் -** முடி இழக்காத மன்னன்!


**தேங்காய் பழமொழி**

அடித்தால் சிரிக்கும், பிடித்தால் மணக்கும் , சாப்பிட்டால் இனிக்கும், புரிந்தால் பாலாகும் அது என்ன?
விடை : தேங்காய்


**பாகப்பிரிவினை**

இரண்டு சகோதரர்களுக்கு இடையில் ஒரு தேங்காய் சம்பந்தமாகச் சண்டை நடந்தது.
கடைசியில் பாதி பாதியாகப் பங்கிடப்பட்டுப் பிரச்சனை தீர்ந்தது. இதன் தொடர்ச்சியாக வீட்டில் இருந்த கத்தரிக்கோல் இரண்டு துண்டானது. ஆனால் இருவரில் எவரும் உரிமை கோராது விட்டுக் கிடந்தது.





என்ன டாக்டர்...... உங்களுக்கு பொருத்தமான பெண் ஒருத்தி..... பணைசெடியுடன் இருக்கிறாள். எங்கேயப்பா?
தேங்காய் தீவில்!



**தேங்காய்க் கடவுள்**

தென்னை இளநீருக்குள்ளே தேங்கியுள்ள ஓட்டுக்குள்ளே
தேங்காயைப் போல் இருப்பான் ஒருவன்
அவனை உணர்ந்து கொண்டால் அவன் தான் இறைவன்

- கண்ணதாசன் -



ஒருவர் :- 'பாரதியார் உண்மையாகப் பெரிய தீர்க்கதரிசி
'பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் பக்கத்திலே வேணும்' என்று பாடியிருக்காரே -

- அனுபவன் -




புலவர் : சுரக்கும் உணவும், யாழகத்து ஆக்கமும் இந்தியா வந்ததாக பட்டினப்பாலை கூறுகிறதே.

மற்றவர் : போங்கப்பா...... இப்போ முட்டையும் தேங்காயும் பட்டினப்பாக்கத்திலே இருந்து யாழுக்குப் போக வேண்டியிருக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்து சிந்தி அகராதி

**இயமன்:-** இலஞ்சம் வாங்க நினைத்தால் எவரையும் விட அதிகமாக வாங்கக் கூடியவர்.

**தாடகை:-** நாடில்லாமல் வீடில்லாமல் அவஸ்தை அடையாத பெண்.

**சூர்ப்பனகை:-** இப்போது உள்ள பெண்களில் பலர் இவள் மாதிரி பெயர் மாறி அணிந்திருக்கிறார்கள்.

**சித்திரகுப்தன் :-** பெயர் நன்றாக இருந்தாலும் இவர் யாருடைய கையாள் என்பதை அறிந்திருந்தால் இந்தப் பெயரை சூட அஞ்சுகின்றார்கள்.

**இராவணன் 10 தலை :-**
இலங்கையில் உயிரோடு வாழ தலை பத்து வேண்டுமென்று 10 தலை காட்டிய பழந்தமிழ் மன்னன்.

**மந்திரவாதி:-** நாயின் வாயைக் கட்டத் தெரிந்தவர்கள். நுளம்பின் வாயைக் கட்டத் தெரியாதவர்கள்.

**பாதிவியம்:-** இலங்கை இனப் பிரச்சனைக்கு இந்தியா தந்த தீர்வு.

**வண்டோதரி :-** விவாகரத்து செய்யத் தெரியாத உத்தமி.

**சீதை:-** பெயர் நீளமில்லை; வாய் நீளம் உள்ளது.

**அகப்பை:-** தமது மணிபர்சில் பணம் உள்ள கணவனுக்காக மனைவி ஏந்தும் பஞ்சசூலம்.

**சத்தியவான் சாவித்திரி:-** கணவனுக்காகப் புத்தியை முதன்முதல் பாவித்த திருமதி.

**பிசாசு:-** இன்றைய இலக்கியப் பத்திரிகை ஒன்றின் பெயர்.

**கண்ணகி:-** சிலம்பு திருடிய பொற்தொழிலாளியை வரிக்கத் தெரியாத அப்பாவி.

# பூனைத் தூக்கம்



ஆரையூர் தாமரை

மாலையென்றும் காலையென்றும்
பாராது படமெடுத்தபடி — வீட்டு
மூலையிலுள்ள பாம்பைப் போலிருக்கும்
தொலைக்காட்சிப் பெட்டியின் செய்திகளை
தொடர்ந்தும் உற்றுப் பார்க்கிறேன்
கண்டபடி கத்தும் — வானொலிக்
கழுதையின் கழுத்தைப் பிடித்துத்
திருகித் திருகிக் கேட்கிறேன்
வாரா வாரம் வீட்டுக்கு வரும் — செய்தித்
தாள்களின் இறக்கைகளைப்
பிரித்துப் பிரித்துத் தேடுகிறேன்.
அதுமட்டுமா?
தேர்தல் காலத்துக் கிளையில்
துள்ளித் திரியும் துண்டுப்பிரசுர
அணில்கள் ஒவ்வொன்றினதும்
முதுகின் வரிகளை
மெதுவாகத் தேடித் தேடி
வாசித்துத் தோற்றுப் போகிறேன்
இருந்தும்,

இரு மூக்குக் கண்ணாடிகள்,
இரு செவிட்டு மெசின்கள்,
இரு ஊன்றுப் பொல்லுகள்,
ஒருவாறு வாங்கிப் பத்திரப்படுத்துகிறேன்.
ஒருகாப்பகத்திற்கும் போகாமல்.
இரும்புக்கம்பிகளுக்குள் குற்றமின்றி
சிறைப்பட்டிருக்கும் — தமிழ்
அரசியல் கைதி உனக்காகவும்,
அடிக்கடி தூங்கும் பூனைக்கயா — உன்
விடுதலை பற்றி தூங்கும் செய்தியொன்
விழித்துக் கொண்டு ஒருநாள் வரும். எ
ன்பதற்காகவும் — அவ்வேளை
எனக்கும் உனக்குமவை
கிழக்குதான் கொஞ்சம்கொஞ்சமாகக்
கிழடுதட்டிப் போயிருக்கும்
என்பதற்காகவும்தான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டோம்; சென்றோம்; வென்றோம்; வீடு திரும்பினோம்.

~காவிய மாமணி அகளங்கன்~

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய சிறந்த நூல்களுக்கான இலக்கியப் போட்டியில்(2009) எட்டுத்துறைகளுக் கான சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுப் பரிசளிக்கப்பட்டது.

ஆய்வு, மொழிபெயர்ப்பு, நாவல், சிறுகதை, சிறுவர்நூல், நாடகம், கவிதை, கட்டுரை ஆகிய துறை சார்ந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு 08.10.2010இல் தமிழ்நாடு நெல்லை மாவட்டம் திருநெல்வேலி மனோன்மணியம் பல்கலைக்கழகத் தில் நடந்தேறியது.

சிறந்த நாவலுக்கான அழகிய நாயகி அம்மாள் நினைவுப் பரிசினை வவுனியூர் இரா. உதயணன் தனது நூல் அறுந்த பட்டங்கள் என்ற நாவலுக்காகப் பெற்றார்.

சிறந்த சிறுவர் நூலுக்கான தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுப் பரிசினை ஓ.கே. குண நாதன் தனது குறும்புக்கார ஆமையார் என்ற சிறுவர் நூலுக்காகப் பெற்றார்.

சிறந்த நாடக நூலுக்கான அறந்தை நாராயணன் நினைவுப் பரிசினை கங்கையின் மைந்தன் என்ற தனது நாடக நூலுக்காகத் தமிழ்மணி அகளங்கன் பெற்றார்.

பரிசளிப்பு விழாவினை, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும், நெல்லை மனோன்மணியம் சுந்தர னார் பல்கலைக்கழகமும் இணைந்து மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் நடாத்தின.

காலையில் எழுத்தாளர் பொன்னீலனின் மறுபக்கம் நாவலின் திறனாய்வு நிகழ்வும், மாலையில் பரிசளிப்பு நிழ்வும் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் திரு. R.V. நல்லக்கண்ணு அவர்கள் கலந்து கொண்டார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்வேந்தர், தமிழியல் துறைத் தலைவர், பேராசிரி யர்கள், எழுத்தாளர் பொன்னீலன் உட்பட பலர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

பரிசு பெற்றவர்கள் சார்பில் தமிழ்மணி அகளங்கன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

தமிழகத்து கலை இலக்கிய அமைப்பு ஒன்று சர்வதேச ரீதியாக நடாத்திய போட்டி ஒன்றில் ஈழத்த வர்கள் மூவர் மூன்று துறைகளில் பரிசுகளை பெற்றது ஈழத்து எழுத்தா ளர்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

செப்டம்பர் மாதத்தில் நடுப் பகுதியில் ஒரு நாள் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அழைத்தவர் என் அன்புக்குரிய நண்பர் ஓ.கே. குணநாதன்.

" சேர்! உங்களுக்கு ஒரு பரிசு கிடைச்சிருக்கு . வாழ்த்துக்கள்."

" தெரியும் குணநாதன் . நன்றி"

" எப்படித் தெரியும் சேர். கடிதம் வந்ததா?"

" இன்னும் கடிதம் வரேல்ல. பேப்பரில வந்திற்று"

" எந்தப் பேப்பரில"

ஆச்சரியத்தோடு கேட்டார் குணநாதன்.

" வீரகேசரி, தினக்குரல் எல்லாத்திலயும் வந்திற்றுதே"

"சேர்! நீங்கள் எந்தப் பரிசைப்பற்றிச் சொல்றியள்."

" வடமாகாண இலக்கிய நூற்பரிசு. நாடகத் துறையில் என்ர கங்கையின் மைந்தன் நாடகத் தொகுப்பு நூலுக்குத் பரிசு கிடைச்சிருக்கு"

" அதில்ல சேர்; அது பழைய செய்தி. உங்களுக்கு இந்தியாவில் பரிசு கிடைச்சிருக்கு"

" எந்தப் புத்தகத்துக்கு, யார் தாறது நான் புத்தகம் ஒண்டும் அனுப்பேல்லயே."

மிகுந்த ஆவலோடு ஆச்சரியத்தோடு கேட்டேன்.

" உங்கட கங்கையின் மைந்தன் நாடக நூலுக்குத் தான்."

" ஆர் தாறது."

" தமிழ்நாடு இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனமும் இணைந்து நடாத்திய இலக்கியப் போட்டி 2010"

செந்தமிழிலேயே பதிலைத் தந்தார் குணநாதன்.

" நீங்கள் அனுப்பாட்டிக்கு என்ன. எழுத்தாளர் ஊக்குவிப்பு மைய வெளியீடு தானே. நான் அனுப்பியி ருக்கக் கூடாதா"?

" நன்றி குணநாதன். உங்கட " குறும்புக்கார ஆமையார்" புத்தகத்தை அனுப்பேல்லையோ"

" ஓ. கே. குணநாதனின் குறும்புக்கார ஆமையார் சிறுவர் நாவல் மிகச் சிறப்பானது. கதை, கரு, எழுத்துரு, படங்கள், புத்தக வடிவம் என சகல வகைகளிலும் சிறப்பானது. தேசிய மட்டப் போட்டியிலும் பரிசு பெறும் என்ற நம்பிக்கை எனக்கும் இருந்தது. அதன்படி அரச இலக்கிய விழாவில் அந்நூல் பரிசு பெற்றது. நான்காவது முறையாக சிறுவர் இலக்கிய நூலுக்காக ஓ.கே. குணநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறும்புக்கார ஆமையார் சிறுவர் நாவலுக்காக பரிசு பெற்றார். இது பின்னால் நடந்த நிகழ்வு.

" அதுக்கும் பரிசு கிடைச்சிருக்கு."

"சந்தோசம் வேற ஆருக்கு..... இலங்கை எழுத்தாளர்களுக்கும் ...."

" வவுனியூர் இரா.உதயணனுக்கு. அவற்ற " நூல் அறுந்த பட்டங்கள்" நாவலுக்குக் கிடைச்சிருக்கு .

" நல்லது . அவற்ற புத்தகத்தையும் நீங்களா அனுப்பின நீங்கள்"

" இல்ல சேர். நான் தகவலையும் விலாசத்தையும் உதயணனுக்கு அனுப்பினனான். அவர் தான் அனுப்பியிருக்கிறார்.

வவுனியூர் இரா உதயணன் வவுனியாவில் பிறந்து வளர்ந்தவர். தற்போது லண்டனில் வசிப்பவர். 2008ம் ஆண்டுக்கான தேசிய சாகித்திய மண்டல விருதைத் தனது " விதி வரைந்த பாதையிலே" நாவலுக் காகப் பெற்றவர்.

"சுருதி பேதமடைகின்றது" (நாவல்) மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள் "(சிறுகதைத் தொகுப்பு)" ஆகிய நூல்கள் வெளியிட்டவர்.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் ஆண்டுதோறும் நடாத்திவரும் எழுத்தாளர் கௌரவம் - சிறந்த நூல் பரிசுத் திட்டத்தில் ' தமிழியல் வித்தகர்' விருதிற்காகத் தனது பெற்றோர் ஸ்ரீ இராமகிருஸ்ணா - கமலநாயகி விருதைப் வழங்கி வருபவர். கடந்த ஆண்டில் ஐந்து எழுத்தாளர்களுக்கு அந்த விருதை எழுத்தாளர் ஊக்கு விப்புமையம் வழங்கியது. அந்த விருதைப் பெற்ற எழுத்தாளர்களில் நானும் ஒருவர் என்பது எனக்குப் பெருமை.

வவுனியாவில் பல ஏழை மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கு நிதி உதவி செய்து வருபவர். வவுனியா மத்திய மாகாணப் பழைய மாணவரான இவரின் நிதி உதவி மூலம் அப்பாடசாலையின் பல ஏழை மாணவர்கள் பயன் பெறுகின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்தாலும், தாய் மண்ணையும், தமிழ் மொழியையும், தமிழிலக்கியத்தையும் மறவாதவர்.

இலங்கையில் வாழ்ந்த காலத்தைப் போலவே இப்பொழுதும் ஓயாமல் எழுதிக்கொண்டிருப்பவர். இவருக்கும் பரிசு கிடைத்த செய்தி எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. கம்பன் சொன்னானே "மும்மடங்கு பொலிந்த முகத்தினான்" என்று. அது அப்போது இராமனுக்கு பொருந்தியது.

உதயணன் எனக்குப் உறவி னன், குணநாதன் வவுனியாவில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தராக கடமை ஆற்றிய காலத்தில் உதயணனின் வீட்டாருடன் உள்வீட்டு பிள்ளையாக பழகியவர்.

உதயணனின் தந்தையார் ஸ்ரீஇராமகிருஸ்ணர் அவர்கள் புகையிரத நிலைய அதிபராக பணி யாற்றியவர்கள். நல்ல இலக்கிய ரசிகர். எல்லாப் புத்தக வெளியீட்டு நிகழ்வுக ளிலும் அவரைக் காணலாம். என்னோ டும் குணநாதனோடும் மிகுந்த அன்பும் நெருக்கமும் கொண்டவர்.

உதயணனின் தாயார் கமல நாயகி அம்மா வீட்டில் பலகாரங்கள் ஏதாவது சுட்டால் குணநாதனையும் அழைத்துக் கொடுத்து அன்பு பாராட்டி யவர்.

" என்ன குணநாதன் இந்தியாவுக்குப் போவோமா?"

"பாப்பம் சேர், நிறைய வேலையிருக்கு."

" எனக்கும் அப்படித்தான் பாப்பம்."

அடுத்த நாள் உதயணன் தொலைபேசியில் அழைத்தார். வாழ்த்துத் தெரிவித்தேன். பதிலுக்கு அவரும் வாழ்த்தினார்.

" என்ன மாதிரி, இந்தியாவுக்குப் போறியளா...." அவர் கேட்டார்.

" பாப்பம்.." நான் சொன்னேன்.

" எங்கள் மூண்டு பேருக்கும் மட்டும் தான் இலங்கை எழுத்தாளர்களில் கிடைச்சிருக்கு, போய் வருவோமே, நான் எல்லா ஏற்பாட்டையும் செய்யிறன்."

உற்சாகமாகக் கூறினார் உதயணன்.

செப்டம்பர் 30ம் திகதி குணநாதனுக்கு கொழும்பில் தேசிய சாகித்திய மண்டல பரிசு விழா. எனக்கும் ஒக்டோபர் 5ம் திகதி கிளிநொச்சியில் மாகாண இலக்கிய விழாவில் பரிசு. அத்தோடு விழாவில் கட்டுரை வாசிக்க வேண்டும்.

ஒக்டோபர் 8ம் திகதி தமிழ்நாடு நெல்லை மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் பரிசளிப்பு விழா.

பரிசளிப்பு விழாவிற்கு செல்ல முடிவெடுத்தோம். உதயணன் தான் லண்டனில் இருந்து சென்னைக்கு வந்து அங்கிருந்து விமான மூலம் கேரளாவிலுள்ள திருவனந்தபுரத் திற்கு வருவதாக கூறினார். எங்களை யும் திருவனந்தபுர விமான நிலை யத்துக்கு வந்து காத்திருக்கும் படி கூறினார்.

எங்கள் பயண ஏற்பாடுகளை குணநாதன் கவனித்ததால் ஒக்டோபர் மாதம் 06ந் திகதி காலை 10 மணியளவில் நான் எனது மனைவி குணநாதன் ஆகிய மூவரும் திருவ னந்தபுரத்தில் உள்ள விமான நிலையத்தில் வந்து இறங்கினோம்.

திருவனந்தபுர விமான நிலையத்திலிருந்து வெளியே வந்து காத்திருந்தோம். எமது கைத்தொலை பேசிகள் செயலிழந்து விட்டன. ஒரு மணித்தியாலம் வரையில் உதய ணன் எம்மோடு தொடர்பு கொள்ள முடியாமல் தேடினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஒருவாறு சந்தித்துக் கொண்டோம். உதயணனோடு அவரது நெருங்கிய உறவினரும் தொழில் பங்கு தாரருமாகிய சசிகுமார் வந்திருந்தார்.

உதயணன் லண்டனில் இருந்த படியே திருவானந்தபுரத்தில் தங்குவதற்குரிய எற்பாடுகளை செய்திருந்தார். அதனால் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதி (Hotel) யிலிருந்து கார் (Car) வந்திருந்தது.

சர்வதேசத்தரம் வாய்ந்த சுற்றுலாப் பயணிகள் விடுதியில் (Thomas hotel) நான்கு இரட்டைப் படுக்கை அறைகள் எமக்காக ஒதுக்கப் பட்டிருந்தன.

மிகவும் வசதியாக இருந்த இந்த விடுதியில் மதிய உணவை முடித்துக் கொண்டு மாலையில் திருவனந்தபுரத்தில் சில இடங்களை அவர்களது வாகனத்தில் சென்று பாரத்தோம்.

மழை இடை விடாது பெய்து கொண்டிருந்ததால் கேரளத்து இயற்கை எழிலை அள்ளிப் பருக முடிய வில்லை. இலக்கிய உரையாடல் களில் இதயத்தை நிரப்பி அன்றைய பொழுதை அங்கே கழித்தோம்.

மறு நாள் காலையில் அங் குள்ள அரும்பெரும் காட்சியகம் (Arts gallery) ஆகியவற்றைப் பார்த்து மகிழ்ந்தோம்.

மதியம், சுற்றுலாத்துறை வாகனம் ஒன்றை (Pickup) வாடகைக்கு அமர்த்தி தமிழ்நாடு நோக்கிப் பயணித்தோம்.

வழியில் பத்மநாதபுர அரண் மனை முக்கியமான இடமென்றும் அதனைக் கட்டாயம் பார்க்க வேண்டும் என்றும் சொல்லி அந்த வாகனச்சாரதி எம்மை அழைத்துச் சென்றார்.

இரண்டு மணி நேரம் சென்றது. தமிழ்நாட்டில் இருக்கும் அரண்மனையை கேரள அரசே பரிபாலிக்கிறது.

மலையாளம் எமக்கு பெரிதும் அந்நியப்படாத மொழியாதலால், மலையாளத்தில் கதைப்பதை எங்க ளால் விளங்கிக்கொள்ள முடிந்தது. பலர் நன்றாகத் தமிழும் கதைத்தார்கள்.

கி. மு 17ம் நூற்றாண்டுக்கு பிற்பட்ட அரண்மனை சிதைவடையா மல் சிறப்பாக பராமரிக்கப்படுகிறது. சதாரண சிற்றரசன் ஒருவனின் அரண்மனையே இப்படி இருக்கு மென்றால் மும்முடிச் சோழனாய், சக்கரவர்த்தியாய் கடல்கடந்தும் பல நாடுகளைத் தன்வசம் வைத்திருந்த ராஜராஜ சோழனின் அரண்மனை எப்படி இருந்திருக்கும் என எண்ணிப் பார்த்தோம்.

ராஜராஜசோழனின் தஞ்சைப் பெருங்கோயிலைத் தவிர வேறொன் றும் தற்போதில்லையே என்ற கவலை எங்களுக்கு ஏற்பட்டது. திருநெல்வேலி யில் ஜானகி (பயணிகள் விடுதி) ஹொட்டலில் எங்களுக்கு அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அங்கே சில இலக்கிய அன்பர்கள் வந்து சந்தித்தார் கள்.

உதயணனின் நண்பர்கள் இருவர் கோவையிலே இருந்து வந்து காத்திருந்தனர். அவர்களது வாகனம் எங்களது அடுத்த நாள் தேவைக்கு பயன்பட்டது. விழா ஏற்பாட்டாளர்கள் சென்னி நடராஜன் முதலானோர் வந்து எமது வசதிகளையும் தேவைகளை யும் விசாரித்து எம்மோடு அளவளா வினார்கள்.

08ம் திகதி காலையில், வவுனியாவில் இருந்து இலக்கியப் பணியாற்றிய கவிஞரும் எழுத்தாள ருமாகிய, கண்ணன் (விக்னேஸ்வ ரன்) வந்து சந்தித்தார். திருநெல் வேலிக்குப் புகழ் சேர்க்கும் அல்வா மற்றும் சில பலகாரங்களையும் கொண்டு தந்து மகிழ்ச்சியடைந்தார். அவரது அன்பில் நாம் நெகிழ்ச்சி யடைந்தோம்.

காலை 10 மணிக்கு, நெல்லை மனோன்மணியம் சுந்தர னார் பல்கழைக்கழகத்தில், தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றமும், நியூ செஞ்சுரி புத்தக நிலையமும், நெல்லை மாவட்டக் கலைஇலக்கியப் பெருமன்ற மும் இணைந்து விழாவை நடாத்தி யது.

காலை அமர்வு மனோன் மணியம் சுந்தரனாரின், மனோன் மணியம் நாடக நூலிலுள்ளதும், தமிழ் நாட்டின் தமிழ்த்தாய் வாழ்த்தாக உள்ளதுமான " நீராடும் கடலுடுத்த நிலமடந்தை...." எனத் தொடங்கும் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் ஆரம்பமாகியது.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நெல்லை மாவட்டக் குழுவின் கௌரவத் தலைவர், பேராசிரியர் எஸ். தோதாத்திரியின் தலைமையில், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தமிழியல் துறைத்தலைவர், முனைவர் சு.அழகேசனின் வரவேற்புரை, தமிழ்நாடு இலக்கியப்பெருமன்ற நெல்லை மாவட்டக்குழுத் தலைவர் மருத்துவர் ராமகுருவின் வாழ்த்துரை யுடன் தமிழகத்தின் சிறந்த எழுத்தாள ராகிய பொன்னீலனின் மறுபக்கம் நாவலின் ஆய்வரங்காக கலை அரங்கு விளங்கியது.

காந்திக்கிராம பல்கலைக் கழகப் பேராசிரியர் பா. ஆனந்தகுமார், திருநெல்வெலி இராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி ஆசிரியை முனைவர் வேலம்மாள் ஆகியோர் மிகச்சிறந்த ஆய்வுக்கட்டுரைகளை வாசித்து உரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைமைக்குழு உறுப்பினரும், பிரபல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியருமான திரு.பொன்னீலன் ஏற்புரையை வழங்கி காலை நிகழ்ச்சியை நிறைவு செய்தார்.

மதிய உணவு யாவருக்கும் வழங்கப்பட்டது. தொடர்ந்து இரண்டு மணியளவில் பரிசளிப்பு விழா மிகக் கோலாகலமாக நடைபெற்றது. தமிழ் நாட்டின் கம்யூஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லக்கண்ணு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க துறைசார் நூல்களுக்கான பரிசளிப்பு, அப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முன்னிலையில் நடைபெற்றது.

வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களின் சார்பில் இரா. உதயணன் தமிழக எழுத்தாளர் திரு. பொன்னீலன் இவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

அழகிய நாயகிஅம்மாள் நினைவுப்பரிசை நூல் அறுந்த பட்டங்கள் தனது பிற்போர் நாவலுக்காக உதயணன் பெற்றுக் கொண்டார்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுப்பரிசைப் குறும்புக் கார ஆமையார் என்ற தனது சிறுவர் நாவல் நூலுக்காக ஓ.கே. குணநாதன் பெற்றுக்கொண்டார்.


அறந்தை நாராயணன் நினைவுப்பரிசினைத் தனது கங்கையின் மைந்தன் நூலுக்காக அகளங்கன் பெற்றுக் கொண்டார்.

ஏனைய எழுத்தாளர்களுக்கான பரிசளிப்பு முடிந்த பின் வெளிநாட்டு எழுத்தாளர் சார்பில் அகளங்கன் உரையாற்றினார்.

பரிசளிப்பு கௌரவம் என்பன முடிந்த பின்னர் பல்கலைப்கழகம் எழுத்தாளர்களுக்குத் தேனீர் வழங்கி கௌரவித்து மகிழ்ந்தது. மகிழ்ச்சியோடு தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநிலத் தலைவர் ஆ. சிவசுப்பிரமணியன், மாநிலப் பொதுச் செயலாளர் இரா. காமராசு, மாநிலச் செயலாளர் (இலக்கியம்) சென்னி நடராஜன் ஆகியோரிடம் விடை பெற்று ஜானகி விடுதிக்கு வந்தோம்.

**தொடரும்**

# காந்தி பூமிக்கு வந்தால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிப்பு மேடை



கிண்ணியா -
எம்.எம்.அலி அக்பர்.

**ஒருவர்:** ஏன் அந்த துப்பாக்கிக் கடையில் இருக்கிறவங்க ஓட்டம் எடுக்கப் பாக்கிறாங்க!
**மற்றவர்:** துப்பாக்கி வாங்க வந்தவர் பேனா வாங்கினா எழுதிப்பாத்துத்தான் வாங்கிறோம். அப்போ இந்த துப்பாக்கியையும் சுட்டுப்பார்த்துத்தான்வாங்குவேன் என்றாராம் அதனால்தான் ஓட்டம்.

**திருடன்:** ஏய்! மரியாதையாய் உன்னிடமுள்ள பணத்தையெல்லாம் எடுத்துத்தந்து விடு இல்லையென்னா இந்த கத்தியால ஒரே குத்து சதக்... சதக்...சதக்..
**அவர்:** அஹ்ஹஹ்ஹா அதைப்பிடிடா ஒரே குத்துல 3 சதக்...சதக்...சதக்.....என்று சத்தம் வரும்.

**பெரியவர்:** ஏன்டா சின்னப்பயலே! சைக்கிள் அளவுக்கே நீ இல்லை நீயா சைக்கிள் ஓடுறே.
**பையன்:** அப்போ ரயில் ஓட்டுறவன் ரயில் மாதிரி நீளமாகவா இருக்கான்.

**மனேஜர்:** எதுக்கு நீங்க 25 ரூபா தாரீங்க
**கடன்காரன்:** நீங்கதானே ஐயா சொன்னீங்க 5200 லேன் பணத்தை திருப்பி கட்டணுமென்று அதை திருப்பினா 0025 ரூபாதானே வருது.

**பொன்மணி:** டாக்டர், டாக்டர் என் எதிர் வீட்டுக்காரி பெரிய கலர் டீவியும் கொம்பியூட்டரும் வாங்கி இருக்காள் டாக்டர்.
**டாக்டர்:** அதுக்கென்ன வாங்கட்டுமே அதில என்னம்மா இருக்கு?
**பொன்மணி:** நீங்கதானே டாக்டர் சொன்னீங்க வயிற்றெரிச்சல் இருந்தா வந்திடு என்று.

**கிராமவாசி:** ஐயா! நான் கேட்கும் தொகையை கடனாக தந்தீங்க என்றால் நான் வெளிநாடு சென்று என் தலையை அடகு வெச்சாவது கடனை அடைச்சிடுவேன்.
**அதிகாரி:** ஆமா! எந்த நாட்டுக்கு போற
**கிராமவாசி:** லிபியாவுக்கு ஐயா!

**ஒருவன்:** ஒரு நல்ல நண்பனை எப்படி நல்லவன் என்று புரிஞ்சு கொள்வது.
**மற்றவர்:** அது பெரியகாரியமில்லேடா நண்பா! ஒரு 5000 ரூபா கேட்டுப்பாரு தெரிஞ்சு கொள்வாய்.
**ஒருவன்:** நல்லா ஒரு 500 ரூபா சொன்டேன்.

**நண்பன் 1:** வீதியிலே மணிபர்ஸ் கண்டெடுத்து 10 ஆயிரத்திற்கு மேல் பணம் இருந்ததாமே! எங்கடா அந்த மணிபர்ஸ்.
**நண்பன் 2:** இன்னொருத்தன் பர்ஸ நமக்கு எதுக்குடான்னு பணத்த எல்லாம் எடுத்திட்டு பர்ஸை அங்கேயே போட்டுட்டு வந்திட்டேன்டா.

**முதியவர்:** சேச்சே எங்க வீட்லே இந்த வருஷ ஆரம்பத்திலிருந்தே ஒரே சோகம்.
**வந்தவர்:** அப்படி என்ன நடந்திட்டுது.
**முதியவர்:** காலம் காலமாக பரம்பரை பரம்பரையாக நாங்க வச்சிருந்த சாதனை அஞ்சாம் தரம் தான் இப்போ என்ட பேராண்டிர பேரன் அதை முறியடிச்சு ஆறாம் தரம் பாஸ் பண்ணிட்டானே! அதுதான் சோகம்.........

**தகப்பன்:** எனக்கு வாற கோபத்தில ஒவ்வொரு தடவையும் என் பையனை விளாச இடுப்பிலிருந்து பெல்ட்டை கழற்ற நினைப்பேன் ஆனா கழற்ற மாட்டேன்.
**வந்தவர்:** ஓஹோ அவ்வளவு பாசம் வந்து தடுக்குமாக்கும்.
**தகப்பன்:** சேச்சே... அப்படியெல்லாம் இல்லே வேட்டி நழுவி விடுமே அதனால தான்.

**உத்தியோகஸ்தர்:** டாக்டர் நல்லா தூங்கி எழுந்ததும் அவசியம் பல் தேய்ச்சுத்தான் ஆகணுமா?
**டாக்டர்:** சரி. ஏன் அதில் என்ன சிரமம் உங்களுக்கு.
**உத்தியோகஸ்தர்:** இல்லே டாக்டர்! காலை தான் சீட்லே பல்தேய்ச்சி ஒப்பீசுக்குப் போறேன் மாலைல வேற தேய்க்க வேணுமான்னுதான் கேட்க வந்தன்.

**தகப்பன்:** நம்ம சின்னப்பையன் மீது கண் வச்சுக்க என் சட்டைப்பையில் இருந்து அடிக்கடி காணாமல் போய்க்கிட்டிருக்கு.
**தாய்:** அப்படி என்னங்க போகுது பணமா?
**தகப்பன்:** இல்லே பீடி.


**எஜமானி:** கோகிலா! எஜமான் ஏதோ கோபத்தில உன்னைக் கைநீட்டி அடிச்சிட்டாரு அதையெல்லாம் மனசில வெச்சுக்காதம்மா.
**வேலைக்காரி:** சும்மா போங்கம்மா அடிக்கிற கைதானே அணைக்கும்.

**ஒருவர்:** என்ன நம்ம கட்சித்தலைவர்கிட்ட இருக்கிற பண நோட்டெல்லாம் ஒரேயடியா கசங்கிப்போய் இருக்கே
**இன்னொருவர்:** இருக்காதா பின்ன அங்கேயும் இங்கேயும் இருந்து சுருட்டுன பணமாச்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவைத்திரள் குறுக்கெழுத்துப் போட்டி 5



**சுவைத்திரள் இரசிகர்களே.....**

**ஓய்ந்து இருக்கும் உங்கள் மூளைக்கு வேலை கொடுங்கள். சரியான பதில் எழுதும் மூவருக்கு ஆறு சுவைத்திரள் இதழ்கள் மாதந்தோறும் அனுப்பி வைக்கப்படும். கீழேயுள்ள கூப்பனை வெட்டிப் பதிலுடன் இணைத்து அனுப்பவும்.**

**முடிவுத் திகதி 10.06.2011**



## இடமிருந்துவலம்

**1.** காவலன் படத்தின் கதாநாயகி.

**4.** இதற்கு கண்கள் மூன்று.

**7.** காயின் அடுத்த பருவம் (குழம்பியுள்ளது)

**8.** கற்புடைய மனைவி (திரும்பியுள்ளது)

**9.** 'நீராடு' என்று பொருள்படும் வினைச் சொல்.

**11.** இராமாயணத்தில் வரும் ஒரு கதா பாத்திரம்.

**12.**மகாபாரதம் போன்ற பழங்கதைகளுக்கான பொதுப்பெயர்(நான்காம்எழுத்து விடுபட்டுள்ளது)

**15.**கணவனும் மனைவியும்' என்பதன் ஒரு சொல்

**17.**ஏதாவது ஒரு நாட்டின் பிறந்து வளர்ந்தவன் (திரும்பியுள்ளது)

**19.**சிவன் அல்லது இறைவனைக் குறிக்கும் சொல் (குழம்பியுள்ளது)

**22.** இது கடலிலிருந்து வந்து நிலத்தில் மோதும்.

**23.** அர்ச்சுனனின் புதல்வன் (குழம்பியுள்ளது)

**24.** கல்லாதவர் முகத்தில் கண்ணுக்குப்பதிலாக இருப்பது இதுதான் என்கிறது திருக்குறள்

**25.** மட்பாண்டம் முதலியவற்றைச் செய்தலைக் குறிக்கும் வினைச் சொல் (திரும்பியுள்ளது)

## மேலிருந்து கீழ்

**1.** ஆண்களைக் கவரப் பெண்களிடம் உள்ளது.

**2.** சிவப்பு ஆடை அல்லது கம்பளி ஆடை (குழம்பியுள்ளது)

**3.** பாய் பின்னுவதற்குப் பயன்படும் மூலப் பொருட்களில் ஒன்று (தலைகீழ்)

**4.** ஆண்டு,மாதத்துடன் சேர்த் வரும் தினம்

**5.** சுட்டாலும் இது வெண்மை தரும் (குழம்பியுள்ளது)

**6.** பகல் உண்டாவதர்க்கு இவன் வருகை அவசியம் (குழம்பியுள்ளது)

**10.** இது இல்லாதவன் பிணம்

**13.** நிறையைக் காட்டும் உபகரணம் (குழம்பியுள்ளது)

**14.** இதுவும் வலை பின்னும் (குழம்பியுள்ளது)

**16.** 'நகல்' என்பதன் ஒத்தகருத்து சொல் (தலைகீழ்)

**18.** தவளை இனங்களின் ஒன்று

**20.** இவள் இன்றி நாம் இல்லை

21.இளைஞன் என்று பொருள்படும் (குழம்பியுள்ளது)

23.மனிதர்கள் உட்பட ஜீவராசிகள் அனைத்தும் வாழும் இடம்

**குறுக்கெழுத்துப் போட்டி - 05**
**சுவைத்திரள்**
**15, பெயிலி வீதி,**
**மட்டக்களப்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவைத்திரள் குறுக்கெழுத்துப் போட்டி

## 4ற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ங் | 2 கூ | ர | 3 ம் | ■ | 4 ல் | 5 ப |
| த் | ■ | து | ■ | 6 ர | 7 தி | கி | ந் |
| 8 தா | தா | த் | ■ | 9 ச | ந் | தி | த |
| ர் | ■ | ■ | 10 சு | ஞ் | ம | ■ | ல் |
| ■ | 11 சி | 12 ர | ங் | கு | ■ | 13 ம | ■ |
| ■ | 14 த | ணி | ர | ■ | 15 ம | கா | க் |
| 16 ர | ம் | ப | ம் | 17 ப | ■ | த் | ■ |
| ■ | த் | ■ | 18 க | டை | ■ | 19 மா | து |

**சென்ற இதழ்க் குறுக்கெழுத்துப் போட்டியில் இருவர் சரியான விடைகள் இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். சரியான பதில் தந்தவர்களின் விபரங்கள் வருமாறு**

1. அருணா செல்லத்துரை
விசி றோட்
வந்தாறுமூலை

**இவர்களுக்கு சுவைத்திரளின் வாழ்த்துக்கள்**

**இவருக்கு சுவைத்திரள் 35ம் இதழில் இருந்து 40ம் இதழ்வரை (6 இதழ்கள்) பரிசாக அனுப்பி வைக்கப்படும்.**

# மறதி மயிலப்பர்



**மகள் :~** அப்பா! கல்யாணச் சாப்பாடெல்லாம் எப்படி இருந்து?
**மயிலப்பர் :~** ச்சா... அருமையா இருந்துது பிள்ளை சொல்லி வேலல்ல
**மகள் :~** ஆ... அப்படியா? உங்கட சேட் பொக்கற்றில கடிதமொண்டு இருக்குதுபோல இடையில மறிச்சி போஸ்ற் பியனிட்ட இருந்து வாங்கினீங்களா?
**மயிலப்பர் :~** இல்லையே (பொக்கற்றைப் பார்த்துவிட்டு) சச்சச்சச்ச என்னவேலைய பார்தன்டி பிள்ள கொண்டுபோன என்பலப்ப மாப்பிளைட்ட குடுக்காம மறந்துபோய்த் திருப்பிக்கொண்டு வந்திற்றான்டி.என்னடிமா செய்யிற இப்ப?
**மகள் :~** ஹி...ஹி...ஹி...ஹி....ஹி.அத ஓடிப்போய்க் குடுத்துத்து போட்டோ விலயும் வீடியோ விலயும் நிண்டுத்து வாங்கப்பா.போங்க,போங்க,

கா.சிவலிங்கம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் பரிசு

கா.தவபாலன்

புறககோட்டை பஸ நிலையத் துக்குப் பக்கத்தில் உள்ள கடைகளில் இனிப்பு வகைகளையும் மிக்ஷர் மற்றும் Fanta ஆகியவற்றையும் வாங்கிக் கொண்டு கண்டிக்கியூவில் கால்கடுக்கக் காத்து நின்றார் கந்தசாமியார். அப்போது கண்டி பஸ் ஒன்று விரைந்து வந்து பிறேக் அடித்து நின்றது. கியூவுக்கு வெளியே நின்றவர்களெல்லாம் கியூவில் நின்றவர்களின் ஏச்சுப்பேச்சுக் களை ரோசமில்லாமல் வாங்கிக் கட்டிக்கொண்டு பஸ்ஸில் ஏறி ஆசனங்களைப் பிடித்துக் கொண்டார் கள். அதனால் அந்த பஸ்ஸில் ஏறக் கந்தசாமியாருக்கு இடம்கிடைக்க வில்லை. "நாசமாய்ப் போவார்" என்று மனத்துக்குள் திட்டிக்கொண்டு கந்த சாமியார் நிற்க, அந்த பஸ் புகை வேறு கக்கிக்கொண்டு விர்ரென்று புறப்பட்டுச் சென்றுவிட்டது. புகை மூக்கிற்குள் போகாதிருக்கக் கந்தசாமியார் லேஞ்சி யால் மூக்கைப் பிடித்துக்கொண்டார். சிறிது நேரத்துக்குப் பின் அடுத்த பஸ்ஸைக் கொண்டு வந்து அடித்தார் கள். ஒரு மாதிரித் தள்ளு முள்ளுப்பட்டு ஏறிக் "கோணர் சீற்" பிடித்து வெற்றிக் களிப்புடன் அமர்ந்து கொண்டார். ஒரு இமாலைய சாதனையைச் சாதித்து விட்டதுபோல மனதில் ஒரு பிரமிப்பு ஏற்பட்டது. கண்டக்டர் டிக்கட் உடைத்துக் கொண்டு வந்தார். கந்தசாமியாரைப் பார்த்து

"கொஹெத யன்னே" (எவ்விடம் இறக்கம்?) என்றார் கந்தசாமியார் கம்பீரமாக. "எக்கெனெத் நேத" (ஒரு



ஆள் தானே)

ஒவ் (ஆம்)

"எக்க சீய அட்டக்தென்ன." (108 ரூபா தாங்க) கந்தசாமியார் 2000/= ரூபா தாளை எடுத்து லெவலாக நீட்டினார்.

"பொடி சல்லி நத்த" (சில்லறை இல்லையா) இல்லை. டிக்கட் காசு 108/= பெற்றுக்கொண்டது 2000 என்று பிறின்ற் பண்ணிய டிக்கட்டை மெஷினில் உடைத்துக் கொடுத்துவிட்டு அப்பால் நகர்ந்தார் கண்டக்டர். பின்னர் கந்தசாமியாரின் பக்கத்து சீற்றில் இருந்த ஆச்சியைப் பார்த்து,

"கொஹெத பஹின்னே ஆச்சி" என்றார் கண்டக்டர் ஆச்சிக்கு சிங்களம் விளங்கவில்லை.

"என்ன சொல்றாங்க தம்பி" என்று கந்தசாமியாரை கேட்டா ஆச்சி,

"ஆச்சி எவடம் போறது?"

"மகள் வீட்டுக்குப் போறேன் தம்பி."

"மகள் வீடு எங்கே இருக்கு?"

"கண்டி இந்து சீனியர் பாடசாலை கிட்ட" சீனியர் பழம் றோட்டிலை இருக்கு நீங்க கண்டி மார்க்கட் கிட்ட இறங்கி நடந்துதான் போகணும்."

ஆச்சி சரி என்று தலையாட்டினா.

கந்தசாமியார் கண்டக்டருக்குச் சொன்னார்

"ஆச்சிட்ட நுவர டிக்கட் தென்ன." (ஆச்சிக்கு கண்டி டிக்கட் குடுங்க)

"ஆச்சி றுப்பியல் 113 தென்ன." (ஆச்சி 113 ரூபா குடுங்க)

"பொடி சல்லி நத்த" (சில்லறை இல்லையா)

"மாத்தின சல்லி என்கிட்டே இல்லே."

டிக்கட் காசையும் பெற்றுக்கொண்ட காசையும் மெஷினில் குறித்து டிக்கட்டை உடைத்துக்கொடுத்து விட்டு அப்பால் போனார் கண்டக்கடர்.

"இன்னாதம்பி மிச்சச்சல்லி தரல்லியே" என்றா ஆச்சி

"ஆச்சி டிக்கட்டை கவனமாய் வையுங்க; மிச்சக்காசு இறங்கும் போது தருவாங்க" என்றார் கந்தசாமியார்.

"மிச்சச்சல்லி கெடைக்குமோ என் னவோ" என்று ஆச்சி அலுத்துக் கொண்டா.

"பயப்படாதீங்க நான் வாங்கித் தாறேன்" என்று அரசியல் வாதியின் பாணியில் வாக்குறுதி அளித்தார் கந்தசாமியார்.

சிறிது நேரத்தில் அங்குமிங்கும் ஆடியபடி நித்திரைகொள்ளத் தொடங்கி னார் கந்தசாமியார். தவறுதலாக ஆச்சியின் தோள்மீது சாயவே "பஸ்ஸிலை இளம் பொண்ணுங் களுக்குத் தான் தொல்லைன்னு பாத்தா இந்த மனுசன் கிழவிக்கு மேலையும் தூங்கி விழுதே" என்று ஆச்சி மனதில் நினைத்துக்கொண்டோ என்னவோ" தம்பி நித்திரை கொள்ளாதீங்க" என்று கூறிக் கந்தசாமியாரை எழுப்பிவிட்டா. அதன்பின் யன்னல் பக்கம் சாய்ந்தபடி நன்றாகத் தூங்கிவிட்டார் கந்தசாமியார். திடீரென்று ஒரு குலுக்கலுடன் பஸ் நின்ற போது திடுக்கிட்டுக் கண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்துப் பார்த்தால் தூக்கக் கலக்கத்தில் இடம்வலம் தெரிய வில்லை. நன்றாகக் கண்ணை கசக்கிக்கொண்டு பார்த்தபோது அவர் இறங்கவேண்டிய இடத்தைக் கடந்து பஸ் ஹீரஸ்ஸ கலை சந்திக்கு வந்து விட்டதை உணர்ந்து கொண்டார். இறங்க ஆயத்தமான போது கண்டக்கடருக்கு 2000 ரூபா கொடுத்துத் தொலைத்தது ஞாபகத்துக்கு வந்தது.

"இத்துறு சல்லி தெனவத?" (மிச்சக் காசை தருகிறீர்களா) கந்தசாமியார் கேட்டார்.

கண்டக்டர் டிக்கட்டை கேட்டார்.

டிக்கட் எங்கே வைத்ததென்று கந்தசாமியாருக்கு ஞாபகம் வரவில்லை. பொக்கட்டை துளாவிக் கொண்டு நிற்க அதற்குள் "ஹை ஸ்கூல்" சந்தி வந்து விட்டது. பெல்லை அடித்தார் கந்தசாமியார், பஸ் நின்றது. சில்லறைக் காசுகளுடன் சுருண்டு போய்க் கிடந்த டிக்கட்டை எடுத்து கண்டக்டரிடம் நீட்ட அவர் சில்லறை 13 ரூபா கேட்டார். "108 ரூபா தானே டிக்கட் காசு. இந்தாறுங்க 8ரூபா 1900ரூபா தாங்க" என்றார். கந்தசாமியார். கட்டம்பே சந்திவரை தான் 108 ரூபா டிக்கட் மாத்தையா; அதில் இறங்காமல் இவ்வளவு தூரம் வந்த படியால் 113 ரூபா தரவேணும் என்றார் கண்டக்டர். 5 ரூபாவுக்காக ஏன் வீண்வாக்கு வாதம் என்றெண்ணிய கந்தசாமியார் 13ரூபாவை கொடுத்து, மிச்சக்காசைப் பெற்றுக்கொண்டார். கந்தசாமியார் காசை எண்ணிச்சரி பார்த்துக்கொண்டு நிற்க டிரைவர் புறுபுறுத்துக்கொண்டு பஸ்ஸை ஓட்டத்தொடங்கிவிட்டார். வீட்டுக்குப்போக லேற் ஆனால் மனைவியிடம் திட்டு வாங்கவேண்டி வரும் என்று டிரைவர் பயந்தாரோ என்னவோ தெரியவில்லை. பஸ்ஸை விரைவாக ஓட்டிக்கொண்டிருந்தார். ஆச்சியின் மிச்சக்காசையும் கொடுக்கு மாறு கந்தசாமியார் கண்டக்டரி டம் சொல்ல இறங்கும்போது கொடுக்க லாம் என்று கூறிவிட்டார் அவர். "கிழவிதானே ஏமாற்றிவிடலாம். என்று கண்டக்டர் எண்ணுகிறாரோ தெரிய வில்லை இந்தாளைச் சும்மாவிடப் போவதில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் கந்தசாமியார். ஆஸ்பத்திரி ஹோல்ற் வந்ததும் "குட் ஷெட் போற ஆக்கள் எல்லாம் இதிலை இறங்கவேணும்" என்று உத்தர விட்டார் கண்டக்டர். பலரும் அதில் இறங்கிவிடக் கந்தசாமியாரும் ஆச்சியும் மற்றும் சிலரும் பஸ்ஸில் எஞ்சியிருந் தார்கள். மார்க்கட் ஹோல்ற் வந்து விட்டது. 1000ரூபா கொடுத்ததையும் மறந்து ஆச்சி நிம்மதியாகத் தூங்கிக்கொண்டிருந்தார். ஆச்சியைத் தட்டி எழுப்பிக் கண்டக்டரிடம் மிச்சக் காசை வாங்கிக் கொடுத்து ஆளை பஸ்ஸிலிருந்து இறக்கிவிட்டார் கந்த சாமியார். ஆச்சியைப் பாடசாலைக்கு கிட்ட இறக்கி விட்டுவிட்டு இவர் கட்டம்பே சந்திக்குப் போக வேண்டும். ஆட்டோவை விசாரித்தால் 300/= க்கு குறைய யாரும் சம்மதிக்கவில்லை. போனால் போகட்டும் என்றெண்ணி ஆட்டோவில் ஏறி அமர்ந்தனர் இருவரும், ஆச்சியைப் பாடசாலை யடியில் இறக்கிவிட்டுப் பயணத்தை தொடர்ந்தார் கந்தசாமியார்.

மழை "சோ" வென்று கொட்ட ஆரம்பித்தது. கந்தசாமியார் எந்த நாளும் பஸ் பிரயாணங்களின் போது குடை தொலைப்பது வழக்கம். அதனால் இனிக்குடையே வாங்கு வதில்லை என்று இரண்டு நாட்களுக்கு முன்புதான் சபதம் எடுத்திருந்தார். ஆட்டோவுக்கு 300ரூபா கொடுத்து விட்டு வீட்டுக்குள் போவதற்குள் நன்றாக நனைந்து போனார். தலையை நன்றாகத் துடைத்துவிட்டு மனைவி கொடுத்த சூடான கோப்பியை அருந்தியதும் பிரயாணக்களைப்புக் கொஞ்சம் குறைந்தது போல் இருந்தது. ஒன்பது மணி போல இடியப்பமும் மீன் குழம்பும் மீன் பொரியலும் சாப்பிட்டு விட்டுப்படுக்கச் சென்றார். கந்தசாமியார் மூக்கு சாடையாக அடைப்பது போல இருந்தது. காய்ச்சல் ஏற்படுவதற்கான அறிகுறியும் தெரிந்தது. பனடோலை விழுங்கிவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டார். அடுத்தநாள் விடியச் சரியான காய்ச்சல் ஏற்படுவதற்கான அறிகுறியும் தெரிந்தது. அடுத்த நாள் விடியச் சரியான காய்ச்சல் பிடித்துக் கொண்டது. "ஒரு 300ரூபா குடுத்து குடை வாங்க உலோபித்தனம்

**வண்டு:**~ காலை மலர்ந்து விட்டது மலர் மொட்டுகளோ நீங்கள் மலராமல் இருப்பது ஏன்?



**மலர் :**~ சிறுபான்மையினர் உரிமை மலரா நாட்டில் இனி நாம் மலர்ந்தென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணி வருத்தத்தைத் தேடிக் கொண்டு யார் யார்; இனி டாக்குத்தருக்குக் குடுக்க 2000 ரூபா வேணும்" என்று மனைவி புறுபுறுக்கத் தொடங்கினா. "உதெல்லாம் ஆறுதலாய்க் கதைப்பம்: இப்ப ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்" என்று கூறி மனைவியை மடக்கிவிட்டு போகவேணும்" என்று கூறி மனைவியை மடக்கிவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போக ஆயத்தமானார் கந்தசாமியார்.

பஸ்ஸுக்குள் நித்திரையாகிக் கண்டியில் போய்இறங்கியது; ஆட்டோவுக்க 300ரூபா அளந்தது எல்லாம் மனைவிக்குச் சொன்னால் திட்டுவிழும் என்பதால் அவற்றைச் சொல்லாமல் இருட்டடிப்புச் செய்து விட்டார் கந்தசாமியார். பக்கத்தில் இருந்த ஆச்சிக்கு சிங்களம் தெரியாது; அதனால் அவவுக்கு உதவி செய்ததுடன் ஆட்டோவில் ஏற்றி இந்து சீனியர் இட்ட இறக்கிவிட்டது என்று சொன்னால் "உங்கடை வேலையை ஒழுங்காய் செய்யத் தெரியேல்லை; இந்த லட்சணத்திலை சமூகசேவை என்ன வேண்டிக்கிடக்குது" என்று மனைவி வசனம் பேசுவதை தவிர்க்க முடியாமல் இருக்கும். எனவே அதையும் மனைவிக்குச் சொல்லவில்லை.

பாடசாலைக்குப் போக வெளிக்கிட்ட கந்தசாமியாரின் ரீச்சர் மகள், கையில் ஒரு புதுக்குடையுடன் அப்பாவை நோக்கி வந்து "அப்பா ஹப்பி பேர்த்டே" என்று பேர்த்டே பிறசென்ற்! இனிமேல் நீங்கள் பஸ்சுக்குள் ஏறும்போது குடையை அங்கை இஞ்சை வைக்காமல் கையிலேயே வைச்சிருங்கோ; ஒரு நாளும் குடை துலையாது" என்று சொல்ல, கந்தசாமியார் மகளுடைய அட்வைஸை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். அவர் இப்போதெல்லாம் எங்கு சென்றாலும் குடையைக் கையிலேயே வைத்துக் கொள்கிறார். அதனால் இப்போ கந்தசாமியார் குடையைத் தொலைப்பதே இல்லை.


# ஸ்ரீ சாமுண்டீஸ்வரி பார்மசி

மஸ்கெலியாவில் மகிழ்ச்சி நெகிழ்ச்சி வளர்ச்சி என்ற மூன்று படிகளில் முன்னேறி வரும் வர்த்தக நிறுவனம் சாமுண்டீஸ்வரி பார்மசியே.

ஆங்கில மருந்துப்பொருட்கள் சகலவிதமான வாசனைப்பொருட்கள் சகல பத்திரிகைகளும் இந்திய சஞ்சிகைகள் மற்றும் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் என்பவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

ஸ்ரீ சாமுண்டீஸ்வரி பாமசி
186. பிரதான வீதி, மஸ்கேலியயா
TP; 052 2277347
052 2277181
052 7429100
E.MAIL : arctperumaal@ yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன லீக்ஸ்



ஜப்பானில் வடகிழக்குப் பகுதியில் சுனாமி ஏற்பட்டு சுமார் 25000 ஜப்பானியர்கள் அகாலமரண மடைந்தனர் மிகவும் துன்பகரமான செய்தி. இலங்கையின் வடகிழக்கு மக்கள் பால் அன்புகொண்டு ஜப்பானிய தூதுவராக செயற்பட்ட யசூசி அக்காசி அவர்கள் 19 தடவை இலங்கை வந்துள்ளார்.

இனிமேல் ஜப்பானின் வடக்குக் கிழக்கை புனர்நிர்மாணம் செய்யவேண்டி இருப்பதால் யசூசி அக்காசி இவ்விடம் வருவாரோ என்பது சந்தேகமே! விஞ்ஞானம் வளர்ந்த ஜப்பானில் கூட எச்சரிக்கை விட்டு இருபத்து ஐந்தாயிரம் பேரையும் காப்பாற்ற முடியாமல் போனது வேதனையே! எத்தனை சுனாமி எச்சரிக்கை கருவிகள் பூட்டினாலும் இயற்கையை வெல்ல மனிதனால் முடியாது.

யசூசி அக்காசியின் வீட்டுக்குள் வெள்ளம் போனதோ தெரியல்ல! இனித்தான் தெரிய வரும். இனித்தான் நாம் செல்ல வந்ததை சொல்ல வரும்புகிறோம். சுனாமி யால் அணு உலைகளில் கசிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் பூகம்பமும் இதற்குக் காரணம். ஜப்பானில் இருப்பது அணுஉலை. மற்றைய பல்வேறு நாடுகளில் இருப்பது அணு குண்டு இந்தியா பாகிஸ்தான், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா பிரிட்டன், சீனா, கொரியா, போன்ற நாடுகளில் அணு குண்டு உள்ளது. இஸ்ரேலிலும் அது உண்டு என நம்பப்படுகின்றது.

நாம் சொல்லவருவது யாதெனின் இந்த நாடுகள் எங்கும் பூகம்பம் இடையிடையே வந்து போவதும் ஆயிரக்கணக்காணோர் மாள்வதும், மாண்டவரை வாழ்பவர் மறந்து போவதும், நடந்து கொண்டே இருக்கின்றது. அணு உலைகள் பூகம்பத்தால் வெடியாது என்று ஆருடம் சொல்ல முடியாது.

தாம் செய்த அணுஉலைகளால் தாமே மாளும் வல்லரசு உலகம் உருவாகிக்கொண்டு இருக்கின்றது. "இதுவே ''மன லீக்ஸின்'' உலக எச்சரிக்கை''

இலங்கை பிரச்சனையில் சீனா தலையிட வேண்டும் என்று பேராசிரியர் க.சிற்றம்பலம் கூறியுள்ளார். சீனா ஏற்கனவே தலையிட்டு விட்டது என்பது தெரிந்த விஷயம் தானே. சீனா பல்வேறு நாடுகளில் தேசிய இனங்களின் சுய அடையாளங்களை சமமாக பேனுவதாக பேராசிரியர் சிற்றம்பலம் கருதுகிறார்.

தனி நாடாக இருந்த தீபெத்தை தன்னுடன் இணைத்துக் கொண்டதும், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஜனநாயகவாதிகளை தியென்மென் சதுக்கத்தில் டாங்கி களால் நெரித்துக் கொன்றதுமான சீனா எந்த நாட்டில் எத்தனையாம் ஆண்டில் தேசிய இனங்களின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டதோ?

பங்களாதேஷ் போராட்டத்தின் போது தலை மறைவாக இருந்த சீனா அந்த நாட்டைக் கடைசியாகவே அங்கீகரித்தது. இது நடந்தது 1971ம் ஆண்டில். எது எவ்வாறாயினும் பேராசிரியர் க.சிற்றம்பலத்தின் சீனத் தலைவர்களுடனான சந்திப்பு இனப்பிரச்சனையில் குட்டையை குழப்பிய இந்திய நாட்டையும் சிந்திக்க வைக்கும் என்பதில் ஐய மில்லை.

சீனா இனப்பிரச்சனையைத் தீர்க்கும் காலத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் சிங்கள பிரதேச சபைகளும் இயங்கத் தொடங்கி விடும். என விமர்சகர்கள் கருதுகின்றனர்.

**தேங்காய் 1:** முடியோடை மனிசன் போனாலும் எவரும் எட்டிப் பாக்கிறாங் களில்லை யடி

**தேங்காய் 2:** நாங்க முடியில்லாமல் கிடந்தாலும் நம்மைத் தாண்டி எல்லாரும் பாக்கிறாங்க.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மையே

பெண்மை எனும் மென்மையே
பேராற்றல்
தன்மையே
நான் தோற்றும் போனேன்

சபலங்கள் உள்ள மனம்
சாகும் வரை ஓயாது
கபடங்கள் இல்லா மனம்
காயம் வரு பாராது

நான் தோற்ற உண்மை
வென்ற நீ
தாங்கும் விதம்
தடுமாறாக் குணம் பன்மையே

தாய்மை உன்
சேய்மை இவன்
தாலாட்ட மற வேண்டினேன்
தருகிறாய் உன்னையே

உன்னுள்ளம் வெண்மையே
அதில் இவன் வெறுமையே!
சில வேளை என் வன்மையால்
நீ காட்டும் பொறுமை பெருமையே

சிபானி சித்திக்

# காதலின் முகம்

கள்ளக் காதல்
கடைசியில் மோதல்!

உள்ளக் காதல்
உயிர்வரை சாகா!

இறை காதல்
இறுதி வரை சேர்க்கும்!

தாயின் காதல்
தரணி வரை நீளும்!


மழலை மேல் காதல்
அட்சய அன்பு!

முதியோர் காதல்
முறைமை அன்பு!

அரசியின் காதல்
தேர்தலில் மாயம்!

பேயின் காதல்
பூசையின் முடிவு!

அதிகாரியின் காதல்
மாலையில் சங்கமம்!



மிருகக் காதல்
முடிந்ததும் மீசை!

முகிலின் காதல்
மழையாய் பொழியும்!

வறியோர் காதல்
வருந்தாமல் உழைக்க!

இளையோர் காதல்
இன்றொன்று நாளை
வேறு!

வியாபாரியின் காதல்
பகல் கொள்ளை!

வித்தகனின் காதல்
மட்டடங்கா!

தமிழுக்குக் காதல்
கவிதை மேல்

உண்மையின் காதல்
உயிரினில் கலந்தது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-கமலாவிஜேந்திரன்-

# இள(மை) நினைவில் நிறைந்தவை

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நான் பிறந்தது பனங்கூடல் வளவு ஒன்றில் தான். பனங் கூடலிற் குள் பனம்பாத்தி போட்டு, கிழங்கு புடுங்கின இனிய காட்சிகளும் இன்று நினைவுக்கு வருகின்றன. பனம்கூட லுக்குள் மரஅணில்கள் அதிகம். அதனைப் பிடிப்பதற்கு பார்ப்பொறி செய்து வைப்பார்கள். நான் சிறுவனாக இருந்த போதே டார்ப்பொறி செய்யக் கற்றுக் கொண்டேன்.

அந்த டார்ப்பொறி எப்படி இருக்கும்! இப்போது இருப்பவர்கட்கு அது தெரியாது.

இதனால் இதைக் கீறிக்காட்ட முற்படுகின்றேன். மூன்று கம்புக ளுக்கு மேல் மண்ணால் செய்த ஒரு தட்டி மூடப்பட்டு இருக்கும். ஒரு மெல்லிய தடியின் கீழ் தேங்காய்ச் சொட்டு கருவாடு சோறு இப்படியெல் லாம் போடப்பட்டிருக்கும். அந்த வழியில் வரும் அணிலோ வேறு பறவைகளோ அந்தப் பொருளைச் சாப்பிட வரும் போது அந்த மெல்லிய தடியின் பிடிவிலகி ஓடும்.

சாப்பிட வந்த பறவை அதோ கதியில் செத்துக்கிடக்கும்! இப்படி டார்ப்பொறியில் விழுந்த அணில்கள் ஏராளம். ஒரு நாள் ஒரு விவசாயி போட்ட டார்ப்பொறி குடை சாய்ந்ததில் ஒரு காகம் அகப்பட்டுக் கிடந்தது. டார்ப்பொறி வைத்தவருக்கு ஒரு அணில்கூடக் கிடைக்கவில்லை.

அது எப்படியோ? பின்னோக் கிப் பார்த்தால் இந்த டார்ப்பொறி அன்றைய பாமரனால் உண்டாக்கப் பட்ட இஞ்ஜினியரிங் கருவியாகவே தொடர்கிறது. சும்மா சொல்லப்படாது. நம்ம நாட்டு இஞ்ஜினியர்மாருக்கு இந்த டார்ப் பொறி செய்யத் தெரியாது?

இதற்கு மேலால் அசம்பிள் பண்ணத் தெரியும். அதற்கு மேலால் இவர்கள் படைத்த எலிப் பொறியாவது இலங்கைத் தயாரிப்பாகச் சந்தையில் இருக்கிறதோ? ஐயகோ!

50வருடங்கட்கு முன்பு காசுக்கு இருந்த மதிப்பு இருக்கிறதே? அதனைச் சொல்லியா தெரிய வேண்டும். ரூபாத்தாள் ஒன்றை மார்க் கெட்டுக்குப் போகும் வழியில் ஓர் ஒழுங்கையில் நான் கண்டெடுத்தேன். அந்தக் காசை மாத்தி 1மாதம் கூடச் செலவழித்தும் அது செலவழியாது கிடந்தது. எனது தாயார் படும் கஸ்டத்தைக் கண்டு பல தடைவ 5 சதம், 10 சதமாகக் கொடுத்து மகிழ்ச்சிய டைந்து உள்ளேன். எப்படிக் கிடைத்தது எனக் கேட்ட அம்மாவுக்கு நான் ஒரு போதும் விடை பகரவில்லை. அம்மா வுக்குப் பணத்தைப் பெறுவதில் உள்ள சந்தோசத்தை விட அது யாரிடமாவது களவு செய்ததா என்பதில் பெரிய கவலை இருந்தது. இதனால் கடைசி யில் உண்மையைப் போட்டு உடைத்து விட்டேன். அப்போது வரும் இரண்டு ரூபாத்தாள், ஐந்து ரூபாத்தாள், பத்து ரூபாத்தாள் யாவும் பெரும் வலிமை கொண்டவையாக இருந்தன. ஒரு சீமெந்துப் பைக்கட் 10 ரூபா, ஒரு சென்றலி சேட் 8 ரூபா. சீனி 15 சதம், சர்க்கரை 7 சதம். நான் படித்த பள்ளிக்கூடம் நெல்லியடி மகா வித்தியாலயம். அதன் அருகே ஒரு தேநீர்க் கடை. பிளெயின்ரீ விலை 3 சதம். நம்பினால் நம்புங்கள்! இப்போது வெளிநாட்டில் இருந்து பலர் காசு அனுப்பி கோடிகோடியாகக் கொட்டினாலும் அன்றிருந்த காசின் வலிமையை இன்று காண முடியாது.

ஒன்றை ரசிப்பதும், ரசியாமல் விடுவதும் அவரவர் மனப்பக்குவம். மனப்பக்குவம் அற்ற வயதே தின்னைச் சமிக்கும் வயது. மிக இளம் வயது ஒன்றில் சந்திரலேகா படம் பார்த்தேன். (ரஞ்சன் டி.ஆர்.ராஜகுமாரி நடித்தது) அதில் நடக்கும் சர்க்கஸ் காட்சிகளில் உயரத்திலிருந்து சர்க்கஸ்காரி வலை யில் விழுவது கண்டு பிரமிப்பு அடைந் தேன். இந்தச் சர்க்கஸ் பற்றி நான் சொல்லாத இடமே இல்லை. வயது வந்த பின்பு நேரடியாகவே சர்க்கஸ் ஒன்றைப் பார்த்தேன். அப்போதும் உயரத்திலிருந்து சர்க்கஸ் வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே உள்ள வலையில் விழுகிறார்கள். அப்போது எனக்கு அந்த விசயம் புதுமையாகப் படவில்லை. அந்தா வலையிலை விழப்போறாங்க என்றுதான் என் மனம் நினைத்தது. இதற்குக் காரணம் எனது வயதில் ஏற்பட்ட இடைவெளியே.

எனக்கு 7 வயது இருக்கும். எனது பெரியப்பா கிணற்றில் விழுந்த வாளியைச் சுழியோடி வெளியே எடுத்தது கண்ணிற்குள் இருக்கிறது! (புகைப்பட நெகற்றிவ்வாக இப்போதும் இருக்கின்றது.) அவர் நிறைய தண்ணீர் இருந்த கிணற்றிற்குள் தவளை போல் சில நிமிடங்கள் இருந்து வாளியுடன் வெளியே வந்தார். இப்படியும் நடக்குமா என நான் வியந்தேன். அப்போது எனக்கு வயது ஏழு.

## பனைமரத்தின் கீழ் ஒரு பெண் புலம்பல்

நான் ஒரு விசயத்தைச் சொல்லி வைக்க வேண்டும். வேட்டைக் காரன், மேசன் என்ற பதங்கள் தான் சாதியைக் குறிப்பிடவில்லை. மற்ற எல்லாப் பெயர்களுமே சாதியுடன்தான் சம் பந்தப்பட்டவை.

வேலு என்றால் எல்லோர்க் கும் தெரியும். உயர்ந்த உருவம் வயது போன உருவம் அவரைச் சுற்றி ஊர் நாய்கள் ஐந்து இருக்கும்.

அவர் வேட்டைக்கு இறங்கி னால் அவருடன் மூவர் எப்போதும் இணைந்து இருப்பர். அவர்கள் கம்புகள், கத்திகள் எப்போதும் வைத்திருப்பர். வேட்டையாடப்படும் மிருகங்கள் முயல், உடும்பு, அணில், இத்தியாதி . நல்லவேளை ஓணான் இந்த பட்டியலில் இல்லை... ஆம் என்றால் பெருமளவு ஓணான்களும் இந்த உலகை விட்டுச் சென்றிருக்கும். இந்த வேட்டை நடக்கும் போது பொழுதுபோக்காக இவர்கள் பின்னால் நான் சென்றிருக்கின்றேன். இவர்க ளின் வேட்டையில் வெள்ளை முயல், கரும் முயல் என்பன பெருமளவு அகப்பட்டு இந்த உலகத்தை விட்டுச் சென்றிருக்கின்றன. உடும்புக்குக் கடைசி இடம்தான் வேட்டையில்! ஏனெனில் உடும்பு வேட்டை நேரத்தை அதிகம் பிடிக்கும்!

முயல் வேட்டைதான் ருசியானது. முயலுக்கு உயிர் போனால் வேலுவுக்கு உயிர் வரும். ஓர் இடத்தில் முயல் இருக்குமானால் ஏதோ சொல்லி அதட்டுவார். அத்துடன் ஒழித்திருந்த முயல் குறுக்கு நெடுக் காக ஓடும்.. அதற்குள் அவரின் நாய்கள் பிடித்து வேலையை முடித்து விடும். மத்தியான நேரத்துக்குள் டசின் கணக்கான முயல்கள் அவர் வீட்டு வாசலில் உயிரின்றி ஒரு மூலையில் கிடக்கும்!.

நம்மாள் வேலு இருக்கிறாரே. அவர் இசையைச் சரியாகப் படியாவிட்டாலும் இசைத் துறைக்கு நிறைந்த சேவையாற்றி இருக்கின்றார். படிக்காமல் இசைத் துறைக்கு எப்படிச் சேவை செய்வது? அங்கே தான் 'பொயின்ற்' இருக்கின் றது! அவரால் பிடிக்கப்பட்ட உடும்புக ளின் தோல்களே இன்றளவும் வடமராட்சி பகுதியில் பெருமளவு உடுக்கு ஓசைகளாகப் பரிணமித்து உள்ளன. இப்போது விசயம் விளங்கும் என்று நினைக்கிறன்!

இந்த வேட்டைக்கார னுகளோடை நான் திரிந்த வயது எட்டாகும். உடும்பு வேட்டைக்கு ஒரு நாள் போனபோது உடும்பு ஓடிப் போனது. அது எங்கே நுழைந்தது என்று அறிவதற்கு முன்பு ஒரு வேட்டைக்காரர் இனம் கண்டு கொண்டார் அதுஒரு பொந்துக்குள் நுழைந்தது. வால் மாத்திரம் சிறிய அளவில் வெளியே நீட்டிக் கொண்டிருந் தது

உடனே வாலில் பிடித்து இழுத்தார் வேட்டைக்காரர் தங்கவேல். அரைவாசி இழுத்த போது தான் தெரிந்தது-இழுத்தது உடும்பை அல்ல, அது ஒரு விசப்பாம்பு. வேட்டைக்காரர் பிடியை விட்டு ஓடி விட்டார். நாய்களும் இளைத்த தேயன்றி விக்கித்து நின்று விட்டன. பழையபடி அது பொந்துக்குள் வேகமாக நுழைந்து விட்டது. அரைப் போத்தில் லாம்பெண்ணை இருந்தால் புற்றுக்குள் விட்டு பாம்பைச் சாகடித்து விடலாம் என்றார் தங்கவேலு. எமக்கேன், வீண்செலவு- கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும் என மீண்டும் தங்கவேலு திருவாய் மலர்ந்தார் .அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சென்றோம். பாம்பு ராசியோ என்னவோ அன்று வேலருக்கு ஒரு முயலைத்தவிர வேறெதுவும் பிடிபட வில்லை.ஒரு முயலுடன் வேலு வீடுதிரும்பினார்.

வேலுவுக்கு வயது வந்து விட்டது.ஒருநாள் அவர் சிவமாகி விட்டார். எங்கு மீண்டும் பிறந்தாரோ தெரியவில்லை. வேட்டைத் தொழில் தங்கவேலரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.நாய்களும் கைமாறிப் போய் விட்டன.வேலருக்கு மனைவி யைத் தவிரப்பிள்ளை குட்டிகள் இல்லை அந்தக் கொட்டில் வீட்டில் மனைவியும் தனியாக வாழ்ந்து வந்தாள். அவருக்கு வயது எண்பதுக்கு மோலால் வளர்ந்து விட்டது.

ஒருநாள் ஒரு பனை மரத்தடியின் கீழ் இருந்து அந்த வயதான அம்மாஒரு விளக்குவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கும்பிட்டுக் கொண்டிருந்தாா். நான் அவதானித்துக் கொண்டிருந்தேன். அவள் ஒரு கடவுளை நினைத்துத் தியானித்துக் கொண்டிருந்தாள். அவன் இயமன். அடே இயமா என்னைக் கூட்டிச்செல் கூட்டிச் செல் என அவள் பிரார்த்தித்தாள்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள் அடுத்த நாள் இயமன் அந்த அம்மாவைக் கூட்டிச் சென்று விட்டான். கேட்டதைக் கேட்கும் கடவுள்கள் கொடுப்பதை விட இயமன் கேட்பது கொடுப்பான் போல் இருக்கிறது என என் குழந்தை மனம் எண்ணியது.

நானும் இயமனை எண்ணி இளம் வயதில் என்னை எடுத்து விடாதே எனப் பிரார்த்தனை செய்தேன் மார்க்கண்டேயன் கதை யையும் நினைத்துக் கொள்வேன். இயமன் இன்று வரை இன்னும் என்னை எட்டிப் பார்க்கவில்லை. நான் கேட்கும் வரை இயமன் எனக்குக் கிட்டே நெருங்கக் கூடாது என்பது எனது பிரார்த்தனை.

1958ம் ஆண்டை நினைவு கூர்கின்றேன். இன்றைய ஆண்டுக்கும் அன்றைய 1958க்குமி டையில் இடைவெளி ஆண்டு 52. 1958ம்ஆண்டினிலே எனது வயது 12. இன்று பன்னிரண்டு வயதிலேயே பிள்ளைகள் பிஞ்சில் பழுத்த பழமாகி வெம்பி வெடித்து. கழுத்தில் ஒன்று, காதில் ஒன்றாகத் திரிகிறார்கள்.

அன்று 12வயதில் பெரிதாக ஒன்றும் எனது ஜீவவளர்ச்சி இருக்கவில்லை! அந்த 1958ம்ஆண்டு இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்கி ன்றது. அன்று ஏற்பட்ட இனக்கலவரத் தால் பாதிக்கப்பட்டு ஆயிரக் கணக் கான தமிழன் அகதிக் கப்பலில் பருத்தித்துறை நோக்கி வந்த காட்சி யைப் பார்த்தவர்களில் நானும் ஒருவன். நான் இருந்த ஊரில் இருந்து இரண்டரை மைல்களை கால்நடை யாகச் சென்று காயப்பட்டு மனம் நொந்து, வழி ஏதுமின்றி இறங்கிய தமிழர்களைப் பார்த்து மனம் நொந்து நான் அழுதிருக்கின்றேன் வந்தது கண்டாயா? வந்தது கண்டாயா? தமிழனெல்லாம் அகதிகளாய் வந்தது கண்டாயா என்று அன்று பருத்தித் துறையில் எதிர் ஒலித்த பாடல் இன்றும் எனது நெஞ்சில் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

1958ம் ஆண்டுக் கும் 2010க்குமிடையில் எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இன்றும் தமிழன் அகதியாக உள் நாட்டில் அன்றி, உலகம் முழுவதுமே உள்ளான் என்பதையிட்டுக் கண்ணீர் மழை பொழிகின்றது.

எத்தனையோ ஆண்டுகள் கழிந்தும் தமிழன் வாழ்வின் எதுவித மறுமலர்ச்சியும் ஏற்படவில்லை என்பதையிட்டுக் கடவுளையே நோக வேண்டியுள்ளது

(தொடரும்)



# காலமாற்றக் கவிதைகள்

அன்று:
கனவில் வந்தவர் யாரெனக் கேட்டேன்
கணவர் என்றார் தோழி!
கணவர் என்றால் அவர்
கனவு முடிந்ததும் சென்றது
ஏன் தோழி?

~கண்ணதாசன்~


இன்று:
இணையத்தில் வந்தவர் யாரெனக் கேட்டேன்
உன்னவர் என்றார் தோழி!
அவர் உன்னவர் என்றால் இணையம்
அணைந்தபின் சென்றது ஏன் தோழி?

~யாரோ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர வளர






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவன் தண்டனை

ஏ.சி.ஜரினா முஸ்தபா

அவர் ஓர் பிரபலமான டாக்கடர். அவரிடம் ஓர் நடுத்தர வயது டைய நோயாளி வந்திருந்தார். அவரை நன்றாக பரிசோதித்துப் பார்த்தார் டாக்டர். அவரிடம் எந்த நோய்க்கான அறிகுறிகளும் தென்பட வில்லை ஆகவே மீண்டும் அவரிடம் நோய்த்தன்மைகளை விசாரித்தார். அவரும் மீண்டும் அவரிடம் நோய்த் தன்மைகளை விசாரித்தார். அவரும் மீண்டும் விபரிக்கத் துவங்கினார். எனக்கு பசி தோன்றுவதில்லை. சாப்பாடுகளில் எந்த விருப்பமும் இல்லை. ஆகவே என்னால் சாப்பிட முடியவில்லை. எனக்கு தூக்கம் வருவ தேயில்லை. ஆகவே விடிந்தாலும் தூங்க முடியாமல் தவித்துக்கொண்டி ருக்கிறேன். என் மனதில் அமைதி இல்லை. 'நிம்மதி இல்லை. என்னால் என்னை கட்டுப்படுத்த முடியவில்லை. என்ன செய்வது எது செய்வதென்று புரியாமல் மனதில் ஒரே குழப்பமாக உள்ளது டாக்டர்.' என்றார்'.

உங்கள் மனதில் உள்ளது குழப்பமா குமுறலா? 'என வினாவி னார்' டாக்டர் அதற்கு பதில் சொல்லத் தெரியாமல் தடுமாறிய நோயாளிக்கு விளக்கம் அளித்தார் டாக்டர்

'உங்கள் நோயின் தன்மைக ளைப் பார்த்தால் இது இரண்டு வியாதிகளைக் குறிக்கும் அதில்-ஒன்று தான் காதல். நீங்கள் யாரையாவது காதலிக்கிறிர்களா?'

"ஐயய்யோ... டாக்டர்! இல்ல வேயில்லை. எனக்கு பேரப்பிள்ளைக ளும் இருக்கிறார்கள். நான் மிகவும் கௌரவமாக வாழ்பவன்."

"அப்படியானால் மற்ற இரண் டாவது வியாதிதான் உங்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு என்னிடம் மருந்து கிடையாது. தயவு செய்து உடனே இங்கிருந்து போய் விடுங்கள்." என்று கோபத்துடன் கடுமையாகச் சொன்னார் டாக்டர்.

"ஐயோ... டாக்டர்! நீங்கள் மருந்து தராவிட்டாலும் பரவாயில்லை. தயவு செய்து இது என்ன வியாதி என்பதையாவது சொல்லி விடுங்கள். எனக்கு பயமாக உள்ளது." என்று பதறினார் நோயாளி.

"இந்த வியாதிக்குப் பெயர்தான் பொறாமை. இதுக்கு மருந்து கிடை உயாது. யாரை எப்படி வீழ்த்துவது? யாரை எப்படி அழிப்பது? என்பதிலே குறியாக இருப்பார்கள். அவர்களால் பாதிக்கப்படுகின்றவர்களை விடவும், அதிகமான பாதிப்பு அவர்களுக்குத் தான் என்பதை உணரமாட்டார்கள். உதாரணமாக பசி, தூக்கமின்றி, மன அமைதியையும் நிம்மதியையும் தொலைத்துவிட்டு குமுறிக்கொண்டே இருப்பார்கள். ஆரோக்கியம், தூக்கம், நிம்மதி இவை மூன்றும்தான் மனித பாக்கியங்கள். இவை மூன்றையுமே இழந்து விடுவார்கள். இதுதான் இறைவன் அவர்களுக்குக் கொடுக்கும் தண்டனை. இதுவரை இதற்குரிய மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. ஆகவே இங்கிருந்து போய்விடுங்கள்" என்றார் டாக்டர்.

# யார் அந்த அழகி?

அதோ வருகிறாளே..

அன்னநடை பயின்று நடந்துவரும் அவளோ..... ஓர் அழகிய இள நங்கை. பார்ப்போரை மீண்டும் பார்க்கத்தூண்டுகின்ற அழகு. அவள் முன் பின் அறிமுகமில்லாத ஓர் வீட்டிற்குள் நுழைகிறாள். அன்று போயா விடுமுறை தினம் என்பதால் வேலைக்குச்செல்லாத தந்தையும் மகனும் தொலைக்காட்சிக்கு முன்னால் லயித்திருக்கின்றனர். இவளின் திடீர் பிரவேசம் இருவரையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது. அவளது தோளில் தொங்கிய பெரிய 'பேக்' ஒன்று அவளை வெளியூர்காரியாக இனங்காட்டியது. கையில் வைத்திருந்த பர்ஸைத் திறந்து ஓர் காகிதத்துண்டை வெளியே எடுத்து அந்த தந்தையிடம் காண்பித்தாள். அதில் ஓர் முகவரி இருந்தது. "அங்கிள் இந்த முகவரியை சொல்ல முடியுமா?" என வினவினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதை வாங்கிப் படித்த அவர் முகவரியை சொல்ல முடியுமா?" என வினவினாள். அதை வாங்கிப் படித்த அவர் "நாங்கள் புதிதாக இங்கு குடி வந்திருக்கிறோம். அதில் ஊர் சரியாக இருக்கிறது ஆனால் "வீதி" தான் எங்கே என்று தெரியவில்லை. சிலவேளை என் மனைவிக்கு தெரிந்திருக்கும் உள்ளே கேட்டுப்பாருங்கள்" என்று உள்ளே அனுப்பினார். வீட்டுக்குள் வந்தாள் அவள். மருமகள் சமையலறையில் சமைத்துக்கொண்டிருந்தாள். அவளிடம் அதைக் காண்பித்தாள். தனக்குத் தெரியாது மாமியாரிடம் கேட்டுப் பார்க்கும்படி கூறினாள் மருமகள். வெளியே துணி உலர்த்திக் கொண்டிருந்த மாமியாரிடம் போய் கேட்டுப்பார்த்தாள் அவளும் தெரியாது என்றாள். ஏமாற்றத்தில் முகம் வாடிப் போனது அந்த நங்கைக்கு. வேறு வழியின்றி எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டாள். சமயலறை வேலைகள் முடிந்ததுந் தனது படுக்கை அறைக்கு வந்தாள் மருமகள். 'அங்கே கண்டகாட்சி அவளை அதிர வைத்தது. அவளது அலறல் சத்தம் அந்த வீட்டையே அதிர வைத்தது. வீட்டில் யாவரும் அதிர்ந்தது அவளது அறைக்கு ஓடி வந்தார்கள். எல்லோரும் அதிர்ந்து போனார்கள்.


ஆம்! அறை முழுவதும் றெஜிபோம் துண்டுகள் சிதறிக்கிடந்தன. அது மட்டுமா? அலுமாரி திறந்து கிடக்க, அதற்குள் இருந்த பணம், நகை உட்பட அனைத்தும் காணாமல் போயிருந்தது. அவள் கொண்டுவந்த பேக்கிற்குள் இருந்த றெஜிபோம் துண்டுகளை கொட்டிவிட்டு, அங்குள்ள வற்றை எடுத்துக்கொண்டு போயிருக் கும் அவளை யாரும் ஓர் "திருடி" என்று நினைத்துப் பார்த்திருக்க நியாயமில்லை. உடனே அங்குமிங்குமாக சிதறி ஓடி தேடும் போது காலம் கடந்துவிட்டிருந்தது.

ஆம்! இதுபோன்ற ஒருவன் உங்கள் வீட்டிற்கும் வரலாம். கவனம்!!!

# கோடாலி

## துவாபரயுகத்தில் கோடாலி கலியுகத்தின் பெண்





ஒருவன் ஆற்றில் மனைவியுடன் குளித்துக்கொண்டு இருந்தான். திடீரென்று ஆற்று வெள்ளம் அவன் மனைவியை அழைத்துக்கொண்டு சென்று விட்டது. ஆற்றங்கரையில் நின்று தனது மனைவியை நினைத்து அழுது கொண்டு இருந்தான் அவன் அந்நேரம் ஒரு தேவதை வந்து அவனைப் பார்த்து உனது மனைவியை நான் எடுத்துத் தருகிறேன் என்று ஆற்றில் குதித்து அழகான ஒரு பெண்ணை கொண்டு வந்து இது உனது மனைவியா? என்று கேட்டது. அவனும் ஆம் என்று சொல்லிவிட திகைப்படைந்த தேவதை நீ போன பிறவியில் ஆற்றில் விழுந்த கோடாரியை எடுத்துத் தர இது இல்லை எனது கோடாரி என்று சொன்னாயே? இந்த அழகான பெண்ணை கண்டதும் மனைவி என்று சொல்லி விட்டாயே என்றது தேவதை. தேவதையே நான் போன பிறப்பில் உண்மை பேசியபடியால் எனக்கு மூன்று கோடாலியும் தந்தாய். அதேபோல் இப்பொழுது உண்மை பேசினால் மூன்று பெண்களையும் காட்டி இந்த மூன்று பெண்களையும் வைத்துக் கொள் என்று சொல்வாய். ஒரு மனைவியுடனேயே நான்பட்டபாடு போதும் மூன்றும் சேர்ந்தால் எப்படி இருக்கும். அதனால் தான் முதன் முதல் வந்த பெண்ணை என் மனைவி என்றேன் என்றான். தேவதை திகைப்படைந்தவாறு சென்றுவிட்டது. (இந்தியாவில் சமயச்சொற்பொழிவில் கேட்ட கதை.)

– கலைதமிச்சித்தர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருங்கிய தீர்ப்பும்

இப்பொழுதுதானே நீ
பாவமன்னிப்பு கேட்டிருந்தாய்
அதற்குள்
மீண்டும் பாவச்செயலா......?
உனக்குத் தெரியாதா?
அந்த கிழமையும்
நெருங்கிறது
ஆனது மீண்டும் கேட்பதற்கு!

-ஷெல்லிதாசன்-

## சத்தம்!

நாட்டில்
விலைவாசி உயர்வு
யார் சொன்னது....
மூலைக்கொரு 'வைன்' சொப்
இருந்தும்
முண்டியடித்தபடி கியூவில்
'பெருங்குடி' மக்கள்....
நாளை போயா விடுமுறையாம்!

-ஷெல்லிதாசன்-

## பிள்ளையார் சுழி!

தெருப் பிள்ளையார்
முகஞ் சுழிக்கின்றார்
இப்பொதெல்லாம்
வள்ளிக்கிழங்காய்க்குக் கூட
வழியில்லாது போனதால்!

-ஷெல்லிதாசன்-

## பாசம்

பாசம் என்பது
ஓர்
கொடிய வலையாம்

வாழ்வை
வென்றிடும் - ஓர்
அற்புத ஆயுதம்

துயரை நீக்கிடும் ஓர்
துரித மருந்தாகும்

மனக் கறைகளை
கழுவிடும்
ஓர்
சலவை இயந்திரம்

உறவை கலக்கிடும்
ஓர் உன்னதப்
சொர்க்கமாம்

விதியை வென்றிடும்
மதியைக் கொண்டிடும்
ஓர் அற்புத மந்திரம்

- ஏ.சி.ஜெரீனா முஸ்தபா -


## மட்டக்களப்பில் கவின் கலை கலைப்பயிற்சி

பெண்களே சுயதொழில் பயிற்சியில் ஈடுபட
உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்

- வூல் நூலினால் கரடி (டெடிபெயார்) நாய், பூனை, ஒட்டகம், யானை, கோழி, தாரா என்பன செய்தல்.
- பூக்களின் பொக்கே கட்டுதல்.
- நவீன முறையில் நாகசடை கட்டுதல்.
- குஞ்சம் கட்டுதல்.
- பூக்களை வைத்துக் கைகளால் தைத்தல்.
- சிமோக்கிங், கட்டிங், டெயிலரிங்.
- சாறிகளுக்கு கல்லு வைத்துக் கட்டுதல், சீக்குயின்ஸ் வைத்துத் தைத்தல்.




இவை அனைத்தும் செய்து காட்டிப் பயிற்சி தரப்படும்.

தொடர்புகள்
மாலினி, சுந்தரமூர்த்தி.
ஊறணி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல. 0774796581




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் பூமிக்கு வந்தால்.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படியுங்கள் இது ஒரு விளம்பரம்

தாவூத் மாஸ்டர் ஓர் ஓய்வுபெற்ற வாத்தியார். ஓர் எழுத்தாளரும் கூட. அதிக சமூக நாவல்களை எழுதி விட்ட அவருக்கு நீண்ட நாட்களாக ஓர் "மர்ம நாவல் எழுதவேண்டும் என்ற ஆசை. அவரது ஆசைக் கேற்ப ஓர் வாடகை வீடு கிடைக்கிறது.அது தான் அந்த மலை வீடு. "மர்ம நாவல் எழுதுவதற்காக நண்பனது நூலகத்தில் இருந்து பல ஆராய்ச்சி "நூல்களையும் எடுத்து கொண்டு வந்து விட்டார். ஆனால் அவைகள் எதுவும் அவருக்கு தேவைப்படவில்லை. அதற்கு காரணம்! அந்த வீட்டில் நடைபெற்ற அடுக்கடுக்கான மர்மங்கள் தான். அவரது மருமகளை கொலை செய்வதாக மிரட்டும் அந்த அகோர மனிதன் யார்? இரவு நேரங்களில் உலாவருகின்ற அந்த மர்ம உருவம் எது? ஒரு நாள் இரவு அவர் எழுதிக் கொண்டிருக்கின்றார். மாடிக்கு சென்ற மருமகள் "வீல் என அலறுகிறாள். ஓடிப்போய் பார்க்கிறார். உறங்கிக் கொண்டிருந்த குழந்தையை காணவில்லை. பெல்கனிக்கு ஓடுகிறார்.

தலைகீழாக பெல்கனியில் குழந்தையை தொங்க விட்டிருக்கும் காட்சி அவரது இரத்தத்தை உறைய வைக்கிறது. பல ஆண்டுகளாக மூலைக்குள் முடங்கிக் கிடக்கின்ற ஓர் சோகக் காவியம் தான் அந்த டயறி. அதை அவர் படிக்கிறார். படித்து கதையாக எழுதி போட்டு வருகின்றார். பிறகு என்ன நடக்கிறது. அறிய வேண்டுமா? இன்றே வாங்கிப் படியுங்கள். ஏ.சி. ஜக்ரீனா முஸ்தபா எழுதிய

**" ஓர் அபலையின் டயறி"**

**விறுவிறுப்பான மர்ம கதை. திகில் நாவல் தன் விலை 200**

பொறாமை என்பது ஒரு மனிதனை என்னென்ன பாடுபடுத்துகிறது. என்பதை யாரும் உணர்வதில்லை. கணவனுக்கும், சகோதரனுக்கும் நடுவில் பெரும் போராட்டம் நடந்த கொண்டிருக்கிறது. நன்றியுடைய சகோதரனும் வேண்டும், பாசத்திற்குறிய கணவனும் வேண்டும் என்ற தர்ம சங்கடத்தில் சிக்கித் தவிக்கின்ற ஓர் பெண்ணின் சோகக் காவியமே அந்த நாவல். வாழ்க்கையை போராடி ஜெயிக்க வேண்டுமானால் பெண்களுக்குறிய பல படிப்பினைகளை பெற்றுக் கொள்ள இன்றே வாங்கிப் படியுங்கள். (இது சர்வதேச பரிசு பெற்றிருப்பதோடு, இலங்கை அரச அங்கீகாரம் பெற்ற நாவல்)

**இது ஒரு ராட்சசியின் கதை.**

**(விறுவிறுப்பான சமூக நாவல்) விலை 250.**

## இது கிடைக்கும் இடங்கள்.

இஸ்லாமிய புக் ஹவுஸ்<br>
இஸ்லாமிய புக் சென்றர் } தெமட்டகொடை

பூபாலசிங்கம் - கொழும்பு - தெஹிவளை.


**வீட்டிலிருந்து தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம். (தபால் செலவு இலவசம்) ஏ.சி ஜரீனா முஸ்தபா என்ற பெயரில் என மணியோடர் எடுத்து கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

A.C. JAREENA MUSTHAFA<br>
NO. 120/H BOGAWATTHA ROAD<br>
WELIVITA - KADUWELA<br>
தொடர்புகளுக்கு: 0115020936




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA



**நீங்கள் வாழ்க்கையில்**
**வெற்றிபெற ஆஞ்சநேயர்**
**அழைக்கின்றார்.**



உங்கள் வாழ்க்கையில் பிரச்சினைகளா? திருமணம் நடக்கவில்லையா?
குழந்தைகள் இல்லையா? குடும்பத்தில் பிரச்சினையா?
வியாபாரம் நடக்கவில்லையா? வெளிநாட்டுப் பயணத்தில் தடையா?
தாம்பத்தியத்தில் பிரச்சினையா? செய்வினை பாதிப்பா?
ஏழரைச்சனி அட்டமா சனியால் பாதிப்பா?
செவ்வாய் தோஷமா? சர்ப்ப தோஷமா? வீடு காவல் செய்யவேண்டுமா? அனைத்து
காரியங்களையும் நிவர்த்தி செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
ஆஞ்சநேய சுவாமியின் உபாசனையால் அருளாற்றல் பெற்றுள்ள ஆஞ்சநேய உபாசகர்
சர்மாஜி ஆஞ்சநேயரின் அருட்சக்தி மூலம்
உங்கள் பிரச்சினைகளை தீர்த்து வைக்கிறார்.
சந்திக்கும் நேரம்
காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை தொடர்பு கொள்ளுங்கள்.


## சர்மாஜி



ஆஞ்சநேய உபாசகர்
மாருதி ஜோதிட மாந்திரீக ஆலயம், வீரமங்களர்
பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம்
தேக்கவத்தை, வவுனியா.
தொலைபேசி :0759055667
E-MAIL : sankarsarma14@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்ஸ் தெரபி அக்குபங்சர்

- தீராத நோயினால் அவதியா?
- காலமெல்லாம் மருந்துகளால் தொந்தரவா?

**கவலையை விடுங்கள்**



உச்சி முதல் உள்ளங்கால் வரை அனைத்து நோய்களுக்கும் (மூட்டுவாதம், காஸ்ட்ரிக், அல்சர், மூலநோய், ஆஸ்த்துமா, சுகர், ப்ரஷர், பீனிசம், இருதய, கல்லீரல், சிறுநீரக நோய்கள், ஆண், பெண் இரகசிய நோய்கள், கருப்பை, மாதவிடாய் தொந்தரவுகள், ஒற்றைத் தலையிடி, இளநரை...etc



- மருந்து மாத்திரைகளின்றி
- பக்க விளைவுகளின்றி
- பத்தியங்களின்றி
- பல ஆயிரங்கள் செலவுகளுமின்றி நாடிப் பரிசோதனை செய்து நோயின் மூல கார ணம் அறியப்பட்டு முற்றாகக் குணமடையச் சிகிச்சை அளிக்கப்படும்.




## PULSE THERAPY ACUPUNCTURE INSTITUTE

T.S.A. கட்டிடம், K.K. வீதி, புத்தளம்,

Branches: கொழும்பு, நீர்கொழும்பு கோட்ராமுல்லை, அட்டாளைச்சேனை

T.P: 071 62 61 456

வணசிங்கா பிறிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு, ஸ்ரீலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org